
கோகுலம்

GOKULAM

நவம்பர் '88 ரூ. 3.




"தினமும் மூணு வேளை கேரமில்க் கொடுங்க, சரியாயிடும்!"
Parry's
கேரமில்க்
CARAMILK
"குழந்தைகளே... இன்னிக்கு கேரமில்க் சாப்பிட்டிங்களா!"
PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
கேரமில்க் · சாக்லேட் எக்லேர்ஸ் · ட்ரை-மி
கோகனட் கிரீம் · சாக்லேர்ஸ் · லாலிபாப்ஸ் · காஃபி பைட்
Parry's
The King of Sweets
HTA 7077





கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

1988 நவம்பர் மாத இதழ்
மலர் : 6 இதழ் : 10
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா

புகைப்படம்: எம். நடராஜன்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

இந்த நவம்பரை 'இரட்டைத் திருநாள் மாதம்' என்று சொல்ல வேண்டும். ஆம், நவம்பர் 8 தீபாவளித் திருநாள். நவம்பர் 14 நேரு மாமா பிறந்த — குழந்தைகள் தினவிழா.

1889 நவம்பர் 14 — ஆம் தேதி நேரு பிறந்தார். அவர் பிறந்த நூறாவது ஆண்டு விழாவை, இந்த ஆண்டிலிருந்தே கொண்டாட ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன.


விழா என்றால், அழகாக மேடை அமைப்பது, வண்ண வண்ண விளக்குகளால் அலங்காரம் செய்வது, மணிக்கணக்காகப் பேசுவது, கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் நடத்துவது — இவைதான் முக்கியம் என்று சிலர் கருதுகிறார்கள். இவற்றையெல்லாம்விட நேரு மாமா மிகவும் அன்பு கொண்டிருந்த குழந்தைகளாகிய உங்களுக்கு எந்த எந்த வழிகளில் உருப்படியான நன்மைகளைச் செய்யப் போகிறார்கள் என்பதுதான் முக்கியம்.

* தமிழில் உங்களுக்கான திரைப்படங்களை எடுக்கப் போகிறார்களா?
* உங்களுக்கு ஏற்ற புத்தகங்களை அழகான அச்சு — அமைப்புடனும் நல்ல படங்களுடனும் மலிவான விலையில் வெளியிடப் போகிறார்களா?
* பள்ளிகள் தோறும் நூல் நிலையங்கள் அமைத்து, இன்றைய எழுத்தாளர்கள் உங்களுக்காக எழுதியுள்ள நல்ல புத்தகங்களை வாங்கி வைத்து, நீங்கள் படிக்க வசதி செய்து தரப் போகிறார்களா?
* குழந்தைகள், தங்கள் கலைத்திறமைகளைக் காட்டவும், ஆயிரக்கணக்கான குழந்தைகள் அவற்றைக் கண்டு இன்பமும் பயனும் பெறவும், பெரிய நகரங்களிலாவது சிறுவர் அரங்கங்கள் (Children's Theatres) அமைக்கப் போகிறார்களா?

இவற்றில் ஒன்றிரண்டையாவது செய்தால், அதுவே நேருவுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



புவனை கலைச்செழியன்




கைலாஸ்



கமலா நாகராஜன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



ஏ. ஐயப்பன்



ஏஎல். விஜி



ஜி. சங்கர்



டி. முருகானந்தம்


பிருந்தாவனக் கதாசிரியர்கள்



சிவ. வசந்த்



சீ. ஜ. பவித்ரா



எஸ். அபூபக்கர் சித்திக்

வண்ண அட்டைப்படம் : யோகா



மனித ருக்குள் மாணிக்கம்.
மக்கள் போற்றும் தலைவராம்.
புனித மான விடுதலை
பெற உழைத்த ஜவஹராம்.

மின்மினிக் கதைகள்



வரதட்சணை!

அக்பர் வேட்டையாடுவதில் பெருவிருப்பம் உள்ளவர். அடிக்கடி காடுகளுக்குச் சென்று காட்டில் உள்ள மிருகங்களை வேட்டையாடி வந்தார். இது பீர்பலுக்குப் பிடிக்கவில்லை. மிருகங்கள் காடுகளை விட்டு நாட்டுக்குள் வந்து துன்புறுத்தினால் மட்டுமே அவைகளைக் கொல்ல வேண்டுமென்ற கொள்கையுடையவர். சக்கரவர்த்தி இம்மாதிரி அடிக்கடி மிருகங்களை வேட்டையாடி வருவதால் மிருகங்களின் இனமே அழிந்துவிடக் கூடும் என்று அஞ்சினார். இதை எப்படியாவது தடுக்க வேண்டுமென்று நினைத்தார் பீர்பல்.

ஒருமுறை அக்பருடன் அவர் வேட்டைக்குச் சென்றிருந்தபொழுது "அரசே, நேற்று ஓர் அபூர்வமான ஓலைச்சுவடி ஒன்று எனக்குக் கிடைத்தது. அதில் பறவைகள், மிருகங்களின் பாஷைகளைத் தெரிந்து கொள்ளும் முறை எழுதப்பட்டிருந்தது" என்றார்.

"அப்படியானால் உனக்குப் பறவைகள் மிருகங்களின் மொழி தெரிந்திருக்க வேண்டுமே!" என்றார் அக்பர்.

"தெரியும்" என்றார், பீர்பல்.

அப்பொழுது அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு மரக்கிளையில் இரண்டு ஆந்தைகள் கத்திக் கொண்டிருந்தன. அதனைக் கேட்ட அக்பர், "பீர்பல், இந்த ஆந்தைகள் என்ன பேசிக் கொள்கிறதென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"அரசே, ஒன்று பெண்ணின் தகப்பனார், மற்றது பிள்ளையின் தகப்பனார். அவை இரண்டும் திருமண விஷயமாகப் பேசிக் கொள்கின்றன. பிள்ளையின் தகப்பனாராகிய ஆந்தை பெண்ணின் தந்தையிடம் தன் பிள்ளையை மணமுடிப்பதாக இருந்தால் மிருகங்களே இல்லாத பாழடைந்த ஐம்பது காடுகளை சீதனமாகத் தரவேண்டும் என்று கேட்கிறது" என்றார் பீர்பல்.

"ஓகோகோ! மனிதர்களிடமிருந்து இப்பொழுது பறவைகள் வரை வரதட்சணை சமாசாரம் போய் விட்டதா? ரொம்பவும் சுவாரசியமாகத்தான் இருக்கிறது. அதற்குப் பெண்ணின் தகப்பனார் என்ன சொன்னார்?" என்று கேட்டார் அக்பர்,

"இப்பொழுது திருமணம் செய்வதாக இருந்தால் இருபது பாழடைந்த காடுகளை சீதனமாகத் தருவதாகவும் இன்னும் ஆறு மாதங்கள் பொறுத்திருந்தால் மீதி முப்பது பழைய காடுகளைச் சீதனமாகத் தருவதாகவும் கூறியிருக்கிறது."

"பலே, பலே! ஆறு மாதத்திற்குள் எப்படி அது மேலும் முப்பது பாழடைந்த காடுகளைச் சம்பாதித்து விட முடியும்? இதைப் பற்றிப் பிள்ளையின் தகப்பனாகிய ஆந்தை கேட்க வில்லையா?"

"ஓ, கேட்டது! அதற்குப் பெண்ணின் தகப்பனார், 'நம் சக்கரவர்த்தி இதுவரை இருபது பாழடைந்த காடுகளை உருவாக்கிவிட்டார். இப்பொழுது அவர் வேட்டையாடி வரும் போக்கைப்பார்த்தால் இன்னும் ஆறுமாதத்தில் முப்பது என்ன, ஐம்பது பாழடைந்த காடுகளைக் கூட என் பெண்ணுக்கு நான் சீதனமாகத் தரமுடியும்' என்று கூறியது" என்றார்.

அப்பொழுதுதான் அக்பருக்குத் தம்முடைய தவறு புரிந்தது. அன்றிலிருந்து வேட்டையாடுவதைக் குறைத்துக்கொண்டு அரசகாரியங்களில் கவனத்தைச் செலுத்தலானார்.



தாய்மொழி

ஒருநாள் அக்பரின் அரசவைக்கு ஒரு பெரும் புலவர் வந்தார். அவர் பல மொழிகளையும் கற்றுத் தேர்ந்த அறிஞர். எல்லா மொழிகளிலும் நல்ல பாண்டித்தியம் உள்ளவர்.

மாமன்னரிடம் அவர் வணக்கம் கூறிவிட்டு பார்சிமொழியில் வெகு சரளமாகப் பேச ஆரம்பித்தார். மாமன்னரும் பார்சி மொழியில் அவருக்கிருக்கும் அறிவைச் சோதித்துப் பார்ப்பதற்காக அவரைப் பல கேள்விகள்

கேட்டார். புலவரும் சற்றும் தயங்காமல் ஒவ்வொரு கேள்விக்கும் உடனுக்குடன் பதில் அளித்து வந்தார். அவர் கூறிய பதில்களைக் கேட்ட அரசவைப் புலவரான அப்துல் காதர் பதௌனி என்கிற பார்சி மொழிப் புலவரும் அசந்து போய் விட்டார்.

அதன் பின்னர் அரசவையிலிருந்த அமைச்சர் ஒருவர் வங்காளி மொழியில் அவரிடம் சில கேள்விகள் கேட்டார். அதற்கும் அந்தப் பன்மொழிப் புலவர் தயங்காமல் பதில் கூறினார். பின்னர் வேறொருவர் மராட்டி மொழியில் புலவருடன் உரையாடினார். அவருடனும் பன்மொழிப் புலவர் வெகு சரளமாக மராட்டி மொழியில் உரையாடினார். அதன் பின்னர் தென்னாட்டு மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளிலும் பலர் அவரைக் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். பன்மொழிப் புலவர் எல்லா மொழிகளிலும் வெகு சரளமாகப் பதில் அளித்தார்.

அவருடைய புலமையைக் கண்டு வியந்த பேரரசர், "பண்டிதரே, தங்கள் அறிவுத்திறனை நான் மெச்சுகிறேன். தாங்கள் எந்த மொழியில் பேசினாலும் தட்டுத்தடங்கல் இல்லாமல் வெகு சரளமாகப் பேசுகிறீர்கள். தங்கள் தாய்மொழி என்ன?" என்று கேட்டார்.

அதற்கு பன்மொழிப் புலவர், "பேரரசே, எல்லா மொழிகளையும் நான் நேசிக்கிறேன். எல்லா மொழிகளுமே என் தாய்மொழிக்குச் சமம்தான்" என்று பார்சி மொழியில் கூறினார்.

அவர் கூறிய பதிலைக் கேட்டதும் சக்கரவர்த்தி அதிகமாக அவரை வற்புறுத்தவில்லை. தமது விருந்தினராக அரண்மனையில் சிறிது காலம் தங்கிச் செல்லுமாறு கூறினார்.

அவர் சென்ற பிறகு பேரரசர் பீர்பலிடம், "பீர்பல், அந்தப் புலவரின் தாய்மொழி என்ன வென்றே தெரியவில்லையே!" என்றார்.

"தாங்கள் அவசியம் அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் இன்றிரவு என்னுடன் வாருங்கள். நான் கண்டுபிடித்துச் சொல்லிவிடுகிறேன்" என்றார் பீர்பல்.

அன்று இரவு பீர்பல் அக்பரை அழைத்துக் கொண்டு பன்மொழிப் புலவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். அப்பொழுது அந்தப் புலவர் குறட்டை விட்டுக் கொண்டு சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

அவர் அருகே சென்ற பீர்பல் 'சட்'டென்று அவர் விலாவில் ஓங்கி ஒரு குத்துக் குத்தினார். திடீரென்று விழுந்த குத்தினால் கதிகலங்கிய பண்டிதர், "எவுடுரா அதி?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தார்.

அப்பொழுது பீர்பல் அக்பரைப் பார்த்து, "அரசே, இவருடைய தாய்மொழி தெலுங்கு. எவ்வளவுதான் பலமொழிகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தாலும் கூட ஆபத்துக் காலத்தில் தாய் மொழிதான் முன்னால் வந்து நிற்கும்" என்றார்.

ஒன்றே கடவுள்!

அக்பர் இசுலாமிய மதத்தைச் சேர்ந்தார். அல்லா தான் அவருடைய கடவுள். பீர்பல் இந்து மதத்தைச் சேர்ந்தவர். பீர்பல் இந்துக்கள் வணங்கும் கடவுளரை வழிபாடு செய்பவர். இருவரும் மதத்தால் வேறு பட்டிருந்தாலும் மனத்தால் ஒன்றுபட்டிருந்தனர்..

அக்பர் சமயம் நேரும் போதெல்லாம் பீர்பலிடம் இந்து மதத்தைப் பற்றியும் இந்து மதக் கடவுள்கள் பற்றியும் பல கேள்விகள் கேட்டார்.

"பீர்பல், எங்களுக்கு அல்லாதான் கடவுள். கிறித்தவர்களுக்கு ஏசுதான் கடவுள். பௌத்த மதத்தினருக்கு போதி சத்துவர்தான் கடவுள்.



ஆனால், உங்களுக்கு மட்டும் ஏன் இத்தனை கடவுள்கள்?'' என்று அக்பர் ஒருநாள் பீர்பலைப் பார்த்துக் கேட்டார்.

''அரசே, எல்லாக் கடவுளும் ஒன்றுதான். அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு அவரைப் பல பெயரிட்டு அழைக்கிறார்கள். அல்லா என்றாலும் ஒன்றுதான். ஏசு என்றாலும் ஒன்றுதான். சிவன் என்றாலும் ஒன்றுதான்'' என்றார் பீர்பல்.

''இதனை நான் ஒப்புக் கொள்ள முடியாது. சரியான முறையில் நீ எனக்கு நிரூபிக்காவிட்டால் இதனை நான் ஏற்றுக் கொள்ள முடியாது'' என்றார் அக்பர்.

''இப்பொழுதே நிரூபித்துக் காட்டுகிறேன்'' என்று சொன்ன பீர்பல் அரண்மனைச் சேவகர்களில் ஒருவனை அழைத்துத் தம் தலைப்பாகையைக் காட்டி, ''இது என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''இது தலைப்பாகை'' என்றான்.

சற்று நேரம் கழித்து, பீர்பல் தலைப்பாகையை அவிழ்த்துத் தோளில் போர்த்திக் கொண்டார். பின்னர், அதே வேலைக்காரனை அழைத்து, ''இது என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவன் ''போர்வை'' என்றான்.

பின்னர் சிறிது நேரம் கழித்து அதை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். மூன்றாவது முறையாக அதே வேலைக்காரனைக் கூப்பிட்டு, ''இது என்ன?'' என்று கேட்டார் அக்பர். அதற்கு அவன், ''இது வேட்டி'' என்றான்.

அவன் சென்றதும் பீர்பல் அக்பரைப் பார்த்து, ''பார்த்தீர்களா, அரசே! ஒரே ஒரு பொருள் இடத்துக்குத் தக்கவாறு பெயரில் மாற்றமடைகிறது. இது ஒரு துணி. இது தலையில் இருக்கும் போது தலைப்பாகை என்று அழைக்கப்படுகிறது. தோளில் இருக்கும் போது போர்வையாக மாறுகிறது. பின்னர் இடுப்புக்கு வந்ததும் வேட்டியாகி விடுகிறது. இதைப் போலவே மழை நீர் வானத்தில் இருக்கும் போது மேகம் என்று அழைக்கப்படுகிறது. வானத்திலிருந்து பொழியும் போது மழை என்று அழைக்கிறார்கள். ஆற்றுடன் கலந்ததும் அது ஆறாகிவிடுகிறது. சமுத்திரத்தில் கலந்ததும் சமுத்திரமாகி விடுகிறது. இதைப் போலவேதான் கடவுளும் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படுகிறார். ஆனால், முடிவில் எல்லாமே ஒன்றுதான். இடத்துக்குத் தக்கவாறு கடவுளின் பெயர் மாறுபடுகிறது. அவ்வளவுதான்'' என்றார் பீர்பல்.

பீர்பலின் இந்தப் பதிலைக் கேட்டு அக்பர் பெரிதும் மகிழ்ந்தார். பிற்காலத்தில் அவர் 'தீன் இலாஹி' என்ற சர்வ சமய மதம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு இம்மாதிரியான உரையாடல்கள் துணை புரிந்தன என்று கூறலாம்.

— நெ. சி. தெய்வசிகாமணி தொகுத்த 'பீர்பல் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து. வெளியிட்டவர்: ஸ்டார் பிரசுரம், சென்னை — 5.



ஏ.கே.செட்டியார்

தோற்றம் : 4.11.1911 மறைவு : 10.9.1983



ஏ.கே.செட்டியார்

நம் நாடு விடுதலை பெறுவதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பே மகாத்மா காந்தியைப் பற்றிய செய்திப் படம் ஒன்றைத் தயாரித்தவர் ஏ. கே. செட்டியார். இரண்டு மணி நேரம் ஓடக் கூடிய இப்படத்தில் காந்திஜி பல நாடுகளிலும் கலந்துகொண்ட பல நிகழ்ச்சிகளைக் காணலாம். 1940 – இல் இப்படம் தயாரிக்கப்பட்டதும் இதை 20 லட்ச ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கச் சில அமெரிக்க நிறுவனங்கள் முயன்றனவாம். இந்தியாவின் மகாத்மாவை இந்தியர்கள் பார்த்து மகிழ வேண்டும் என்பதற்காக, இவர் எத்தனை லட்சம் தந்தாலும் விற்க முடியாது என்று கூறிவிட்டார்.

இந்தப் படம் இந்தியாவின் பல ஊர்களில் ஓடியது. ஆயினும் வசூலைப் பொறுத்தவரை இதை ஒரு வெற்றிப் படம் என்று சொல்ல முடியாது.

டாக்டர் அழகப்பச் செட்டியார் பிறந்த கோட்டையூரிலே இவரும் பிறந்தார். பர்மாவில் 'தனவணிகன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்த இவர், ஜெர்மனியில் ஓராண்டு இருந்து புகைப்படக் கலையைக் கற்றுக் கொண்டார். 'குமரிமலர்' என்ற பத்திரிகையை 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தினார்.

மிகச் சுவையாகப் பல பயண இலக்கிய நூல்களை எழுதி, 'உலகம் சுற்றிய தமிழர்' என்ற பெயரைப் பெற்றார்.

சாட்சிகோபாலனும் அண்ணாகோபாலனும்

கதை: ஆனந்தி
படம்: வினு



16 பக்க வண்ணப் படக்கதை



தீபாவளி
மிக்சர்!
கைவீசம்மா, கைவீசு! கடைக்கு போகலாம் கைவீசு! மிட்டாய் வாங்குவோம் கைவீசு!
தப்பு! தப்பு!! தப்பு!!!
சரிசரி நீ சொல்லு
கைவீசம்மா கைவீசு! கடைக்குபோகலாம் கைவீசு! வெடிகள் வாங்குவோம் கைவீசு!
கெட்டுது கிழவன் குழந்தனம்
தஞ்சை மாலா
ஹே! கோகுலக் கண்ணா! ஆபத்பாந்தவா! இந்த பாம்பு வாணம், என்னை விடாம விரட்டறதே! காப்பாத்து கண்ணா!
டேய், சீடையை சுத்தியால் உடைத்தால் கேப் மாதிரி சத்தம் கேட்குதடா!



என் குழந்தைப் பருவம்

குலபதி

எஸ். பாலகிருஷ்ண ஜோஷி

இந்தியாவிலுள்ள சிறந்த கல்வியாளர்களில் ஒருவராகத் திகழ்பவர் குலபதி டாக்டர் எஸ். பாலகிருஷ்ண ஜோஷி. கல்விப் பணியே கடவுள் பணி எனக் கருதுபவர்.

ஆசிரியர்கள் மத்தியிலே ஓர் அறிஞராகவும், அறிஞர்கள் மத்தியிலே ஓர் ஆசிரியராகவும் இவர் மதிக்கப்படுகிறார்.


சென்னை தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஓய்வு பெற்றதும், மற்ற ஆசிரியர்களும், நிர்வாகிகளும் சேர்ந்து ஒருமனதாக இவரையே தலைமை ஆசிரியராகத் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது இவருக்கு வயது 34 தான்! இவரது தூய எண்ணம், தொண்டு மனப்பான்மை, கற்பிக்கும் திறமை, நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டுமென்ற ஆர்வம் — இவை யாவும் சேர்ந்தே அப்பதவிக்கு இவரையே தேர்ந்தெடுக்கும்படி செய்தன.

சிறந்த சிந்தனையாளர். சென்னையில் பல பள்ளிகளின் ஆலோசகராக இருந்து வருவதோடு, பல புதிய பள்ளிகள் தோன்ற உதவிகளையும் அளித்து வருகிறார்.

ஆங்கிலத்தில் மிக அழகாக எழுதவும் பேசவும் வல்லவர். இந்தியாவின் பல பாகங்களிலும் நடந்த கல்விக் கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும் தலைமை தாங்கியும், கட்டுரைகள் வழங்கியும் கல்விப் பணி சீர்பெறச் செய்தவர்.

Education in Practice, Reflection on Education, Educational Rehabilitation போன்ற சிறந்த நூல்களை எழுதிய இவர், நல்லாசிரியர்க்கான தேசிய விருதினைப் பெற்றவர். ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் இவருக்கு வழங்கிய சிறப்புப் பட்டமே 'குலபதி' என்பது.

பிறப்பால் நான் குஜராத்தி இனத்தைச் சேர்ந்தவன். என் முன்னோர்கள் ஏறக்குறைய இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டிற்கு வந்தவர்கள். நான் 1910—ஆம் ஆண்டு சென்னை சௌகார் பேட்டையில் உள்ள ஏகாம்பரேசுவரர் அக்ரகாரத்தில் திருமதி காமாட்சி அம்மாள் — சுந்தரேச ஜோஷி என்பவர்களுக்குப் புதல்வனாகப் பிறந்தேன். கணக்குத் துறை அலுவலகத்தில் பணியாற்றி வந்த என் தந்தையார் தம்முடைய நாற்பத்து ஆறாம் வயதில் இயற்கை எய்தினார். என் அன்னையார் தம்முடைய பதினெட்டாம் வயதில் குருபௌர்ணமி நன்னாளன்று இரண்டு வயதே நிரம்பப் பெற்ற என்னைப் பிரிந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தார். அவரைப் பற்றிய நினைவுகள் இன்றும் என் உள்ளத்தில் மங்கலாகவே நிழலாடுகின்றன. என்றாலும் அவருடைய அருங்குணங்களையும், செயல்களையும் பற்றிப் பிறர் சொல்லக் கேட்ட



நான், அவரை நற்பண்புகளின் இலக்கணமாகவே, தெய்வமாகவே எண்ணுகின்றேன்.

இளம் வயதிலேயே அவர், மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த நல்லோர்களைப் பற்றி நவிலும் 'பக்த விஜயம்' என்னும் தெலுங்கு மொழி நூலில் தெளிந்த ஞானம் பெற்றவர். அவர்களின் அரிய நினைவுகளே என் எதிர்கால வாழ்வை ஏற்றமிக்கதாக ஆக்க வழிவகுத்தன. அவருடைய ஆசிகளே காஞ்சிப் பெரியவர் போன்ற ஞானிகளின், அவதார புருஷர்களின் அருளினைப் பெறச் செய்தன என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

தாயன்பை இழந்த நான், என்னுடைய பாட்டியாராலும் பாட்டனாராலும் மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்பட்டேன். என்



பாட்டியார் என்னை மாலைப் பொழுதில் ஊஞ்சலில் தம்முடன் உட்கார வைத்து உயர்ந்த வடமொழிச் செய்யுட்களை உரைப்பார். இளம் வயதில் நான் இவ்வாறாக கேள்வியறிவினாலேயே பல வடமொழிச் செய்யுட்களைக் கற்றுணர்ந்தேன். பள்ளிப் படிப்பை அறியா என் பாட்டியாரிடம் தான் நான் இராச ராசேசுவரி அட்டகம் போன்ற வடமொழிச் செய்யுட்களை உணர்ந்து கொண்டேன்.

என் பாட்டன்ார் நகை வணிகராக விளங்கிய போதிலும், ஆழ்ந்த கடவுள் பற்று மிக்கவர். எப்பொழுதும் லலிதா சகஸ்ர நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பார். என்னை நல்லோனாக உருவாக்குவதில் பெரும் பங்கை எடுத்துக் கொண்டவர் அவரே. வீணை, மட்டைப் பந்து, பில்லியர்ட்ஸ் போன்றவை அவரின் பொழுதுபோக்குகள். சோதிடக்கலையறிவு மிக்கவர். இந்து தியாலஜிகல் மேல்நிலைப்பள்ளி தோன்றக் காரணமாக இருந்த அப்பள்ளியின் நிறுவனர் திரு. சிவசங்கர பண்டிட்ஜி அவர்களின் மாணவர்தான் என் பாட்டனார்.

பள்ளிப் படிப்பறியாத என் பாட்டியார் லலிதா சகஸ்ர நாமத்தைப் பற்றிய மெய்யறிவைக் கற்றது அவரிடம்தான். அவருடைய அறிவுரைகளே பிற்காலத்தில் என்னைச் சிறந்த இறைப் பற்றுடையவனாக ஆக்கியது. அவருடைய இனிய நினைவுகளைப் பற்றி எண்ணும் போது நான் மிகுந்த நன்றியுணர்வோடு அவரை நினைவுகூர்கின்றேன். அவரே என்னை நற்பண்புகளையுடையவனாக உருவாக்கியவர் என்றால் அது மிகையாகாது. 'நல்ல குடும்பம் ஓர் பல்கலைக் கழகம்' என்ற கருத்தின் அடிப்படையாக எங்கள் குடும்பம் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை.

எனது இளமைக் கல்வி சற்று வித்தியாசமானது. நாங்கள் இருந்த ஏகாம்பரேசுவரர் தெருவின் வீடு இடவசதி அதிகமானதாகவும், அதில் ஓர் அறை வீதியைப் பார்த்தபடி அகலமானதாகவும், வீட்டின் நுழைவாயில் மிகக் குறுகியதாகவும் அமைந்திருந்தது.

எங்கள் வீடே ஒரு பள்ளியாக விளங்கியது. எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் உடல் ஊனமுற்றவர். அவரின் வலதுகை விரல்கள் எப்பொழுதும் நடுங்கிக் கொண்டேயிருக்கும். நம்மாழ்வார் ராஜு" என்பது அவருடைய இயற்பெயர். அவர் இடது கையால் . அழகாக எழுதுவதில் வல்லவர். பள்ளியின் அமைப்பும், ஆசிரியர் பாடம் பயிற்றும் முறையும் மிகவும் புதுமையானதாக இருந்தன.


மூன்று புறமும் அமைந்த சுவர்களுக்கு எதிரில் இருந்த இருக்கைகளில் ஐந்து முதல் எட்டு வயது வரை உள்ள மாணவர்களும், தெருவிலிருந்து குறுகிய நுழைவாயிலின் பக்கத்தில் ஆசிரியருமாக அமர்ந்து இருப்பார்கள். அவருக்கு எதிரில் மரத்தாலான ஒரு மேசை இருக்கும். சொல்வதை எழுதும் ஆங்கிலப் புத்தகமும், மரேஸ் எழுத்து நூலும், மொழி பெயர்ப்பு நூல் ஒன்றும் திரு. செல்லப்ப சாஸ்திரி அவர்களால் வெளியிடப் பெற்ற இந்திய வரலாறு என்ற நூலும், சுமதி சட்டகம் என்ற தெலுங்கு மொழி நூலும் மாணவர்களுக்குரிய பாட நூல்களாக வைக்கப்பட்டிருந்தன.

பள்ளிக்கூடம் காலை எட்டு மணி முதல் பன்னிரண்டரை மணி வரையில் நடைபெறும். மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப எந்தப் புத்தகம் வேண்டுமானாலும் பாடப் புத்தகங்களாகக் குறிப்பிட்ட பல நூல்களில் படிக்க அனுமதிக்கப்பட்டனர். மதிய வகுப்புக்கள் இடைவேளைக்குப்பின் இரண்டு மணி முதல் ஐந்து மணி வரையில் நடைபெறும். மதிய வகுப்புக்கள் முடியும் போது ஆசிரியர், எங்களை நோக்கி எல்லோரும் வீட்டிற்குப் போகலாம் என்று கூறு




திற்கு வழிபாடு செய்த பின்பே வகுப்புக்கள் தொடங்கும்.

கணிதப்பாடத்தில் கூட்டல், கழித்தல் போன்றவற்றில் மாணவர்கள் தேர்ச்சி பெற்ற பின்பு, ரூபாய், அணாக்கள், மைல், பர்லாங் போன்றவற்றில் கணக்குகள் தரப்படும். ஆசிரியர் ஒரு கணக்கைப் போட்ட பின்பு மற்றவற்றை மாணவர்கள் பாடப்புத்தகத்தில் போடுமாறு கூறுவார். வரலாற்றுப் பாடத்தைப் பொறுத்தமட்டில் பாடத் தலைப்பின் கீழ் உள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் ஒவ்வொரு மாணவராகப் படித்து, மனத்தில் பதிய வைத்துக் கொள்வார்கள். எந்த வகையிலும் ஒழுக்கம் குன்றிப் போகக் கூடிய வகையில் மாணவர்களை ஆசிரியர்கள் விடுவதில்லை.




எழுத்துப் புத்தகம் மாணவர்கள் எழுத்துக்களில் நல்ல தேர்ச்சி பெறவும், மொழி பெயர்ப்புப் புத்தகம் மொழி அமைப்பு, வாக்கியம் எவ்வாறு அமைப்பது என்பதற்கும் உதவின. சுமதிசதகத்தை மாணவர்கள் மனப்பாடம் செய்தது எவ்வளவு பயனுள்ளதாக அமைந்தது என்பது பிற்காலத்தில்தான் விளங்கியது. இவ்வாறு மிகவும் புதுவகையான பயிற்று முறையில் ஒப்பற்ற ஆசிரியரின் தனித் திறமையின் கீழ் பாடங்கள் கற்பிக்கப் பட்டன. கல்வி என்பது தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ள உதவும் சிறந்த சாதனம் என்பதனை நான் இப்போது புரிந்து கொண்டேன்.

அப்பள்ளியில் ஐந்து வயது முதல் எட்டு வயது வரையுள்ள பிள்ளைகள்



பட்டன. கல்வி என்பது தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ள உதவும் சிறந்த சாதனம் என்பதனை நான் இப்போது புரிந்து கொண்டேன்.

அப்பள்ளியில் ஐந்து வயது முதல் எட்டு வயது வரையுள்ள பிள்ளைகள்



பயின்றனர். வகுப்புகளில் தேர்வோ, வகுப்பு உயர்வோ கிடையாது. மாணவர்கள் வயதுக்கு ஏற்றாற்போல் பயிற்றுக் கட்டணமாக ரூபாய் ஒன்று அல்

எங்கள் இருவரையும் ஆறாம் வகுப்பில் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதித்தார்.

என் பாட்டனாருக்கு அப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு. வெங்கடாசல ஐயங்காரை முன்பே நன்கு தெரியும். எனவே, அவரின் அறைக்கு என் பாட்டனார் சென்று என்னை ஐந்தாம் வகுப்பிலும், மாமாவின் பையனை ஆறாம்வகுப்பிலும்சேர்க்குமாறு கூறினார். அரசு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வு ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. அதில் நான் முதலாவது மாணவனாகத் தேர்ச்சி பெற்றேன். தலைமை ஆசிரியர் என்னை அழைத்து, "பயிற்றுக் கட்டணம் இனி மேல் நீ கட்ட வேண்டியதில்லை" என்றார். இதை நான் என் பாட்டனாரிடம் கூற, அவர் பள்ளிக்கு வந்து "இலவசப் படிப்பு தேவையில்லை" என்று கூறிப் பயிற்றுக் கட்டணமாக ரூபாய் மூன்று கட்டுவதாகவும் கூறினார். அதைக் கேட்ட தலைமையாசிரியர் எனது பாட்டனாரைப் பார்த்

தாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. அதில் நான் முதலாவது மாணவனாகத் தேர்ச்சி பெற்றேன். தலைமை ஆசிரியர் என்னை அழைத்து, "பயிற்றுக் கட்டணம் இனி மேல் நீ கட்ட வேண்டியதில்லை" என்றார். இதை நான் என் பாட்டனாரிடம் கூற, அவர் பள்ளிக்கு வந்து "இலவசப் படிப்பு தேவையில்லை" என்று கூறிப் பயிற்றுக் கட்டணமாக ரூபாய் மூன்று கட்டுவதாகவும் கூறினார். அதைக் கேட்ட தலைமையாசிரியர் எனது பாட்டனாரைப் பார்த்

துச் சிரித்து விட்டு, "இலவசப் படிப்பு அனுமதிக்கப்பட்டது வறுமையின் அடிப்படையில்" அல்ல; தகுதி அடிப்படையில் இவனுக்குக் கிடைத்த வெகுமதியாகும்" என்று கூறினார். இதனால் மூன்று மாதத்திற்கு ஒருமுறை பள்ளியின் எழுத்தரான திரு. குப்புசாமி செட்டியார் என்பவர் என்னை அழைத்து என்னிடம் ரூபாய் ஐந்து அல்லது ஆறு கொடுப்பார். இச்சலுகையை நான் 1925 – ஆம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெறும் வரை பெற்று வந்தேன்.

எனது எட்டாம் வகுப்பு ஆசிரிய


தலைப்பில் அவர் எழுதிய தீண்டாமை ஒழிப்புப் புத்தகம் ஒன்றை எனக்குக் கொடுத்தார். அவருடைய இந்த ஊக்குவிப்புத்தான் எனக்கு அந்தச் சிறிய வயதில் சிறந்த அறிஞர்களின் ஆங்கில நூல்களைக் கற்கத் தூண்டியது.

என்னைவிட ஐந்து வயது அதிகமான என் மாமா ஆங்கிலப் புத்தகங்களை அதிகம் படிக்கும் ஆர்வம் உடையவர். தாம் கற்ற ஆங்கிலப் புத்தகங்களை எல்லாம் எனக்குக் கொடுத்து என்னைக் கற்குமாறு தூண்டுவார். என் பாட்டனாரும் ஷேக்ஸ்பியர், டென்னிசன் போன்றவர்களின் நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் கூறுவதுடன் ஆங்கில அறிஞர்களாகிய டிக்கன்ஸ், ஸ்காட், விக்டர் ஹியூகோ மற்றும் மேரி கொரேலி போன்றவர்களின் நூல்களை எனக்குத் தந்து, அவற்றைப் படிக்கும் பண்பை எனக்கு ஏற்படுத்தித் தந்ததன் மூலம் என் ஆங்கிலப் புலமை முன்னேற்றம் கண்டது.

என் பள்ளி வாழ்க்கையில் இரண்டு நிகழ்ச்சிகள் குறிப்பிடத் தக்கவையாக அமைந்திருந்தன. நான் பதின்மூன்று வயது மாணவனாக இருந்த போது பள்ளி இலக்கிய மன்றக் குழுவினர் ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகத்திலிருந்து சில காட்சிகளை நாடகமாக நடித்துக் காட்டினர். அதனை நாங்கள் நாடகமாக நடிப்பதற்கு எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து பயிற்சி அளித்தவர் ஷேக்ஸ்பியரின் நூல்களில் அதிகப் புலமை மிக்க திரு. எம். வி. துரைசாமி ஐயர் அவர்கள். புரூட்டசின் மனைவியாகிய போர்சியாவாக நடிக்கும் பாத்திரம் எனக்குக் கொடுக்கப்பட்டது. நான் மிகவும் சிறப்பாக நடித்ததாக ஆசிரியர் கூறினார்.

அடுத்து, 'பழைய மாணவர்கள் தினம்' கொண்டாடிய அன்று அம் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பயிலும் மாணவர்களுக்கான சொற்பொழிவு ஆற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டேன். என் சொற்பொழிவைக் கேட்ட, விழாவிற்குத் தலைமை ஏற்ற, புலமைமிகு நீதிபதி சர். டி. சதாசிவ ஐயர் மகிழ்ச்சிப் பெருக்கால் அப்படியே என்னைத் தூக்கித் தம் முன் இருந்த மேஜையின் மேல் அமர வைத்தார். என் சொற்பொழிவைக் கேட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர்.

அதற்கு அடுத்த ஆண்டே பள்ளி ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அக்காலத்தில் பள்ளி ஆண்டு விழாக்கள் ஆண்டுதோறும் கொண்டாடப் படுவதில்லை. பள்ளி ஆண்டு விழாவை முன்னிட்டு நடந்த பேச்சுப் போட்டியில் நான் முதல் பரிசு பெற்றேன். வில்லியம் கௌபர் என்பவர் இயற்றிய 'என் தாயின் படத்தை நான் பெற்றபோது' என்ற கவிதை நூலின் ஒரு பகுதியை நான் கூறுமாறு பள்ளி ஆண்டுவிழாவின் போது கேட்டுக் கொள்ளப்பட்டேன். நான் அவ்வாறு கவிதையைக் கூறும் போதும், பேச்சுப் போட்டிக்கான முதற்பரிசு பெறும் போதும் விழாவின் சிறப்பு விருந்தினராக வந்திருந்த ஸ்ரீ சல்லா குருசாமி செட்டியார் அவர்கள் என் முதுகில் தட்டிக் கொடுத்து என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசினார். இச்சிறு நிகழ்ச்சிகள் எனக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தன.



என்னுடைய பொழுது போக்கைப் பொறுத்தமட்டில், மட்டைப்பந்து, பூப்பந்து ஆகிய இரண்டு

விளையாட்டுகளை நான் மிகவும் விரும்பினேன். என் மாமாவும் அவருடைய நண்பர்களும் சேர்ந்து, "தேசிய ஒருமைப்பாட்டுக் கழகம்" என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கினர்.

தற்போதுள்ள கோட்டைப் பகுதி அக்காலத்தில் ஒரு குறுகிய கால்வாயுடன் அமைந்த திறந்தவெளிப் பகுதியாக இருந்தது! அதுவே எங்களுக்கு விளையாட்டு மைதானமாகப் பயன்பட்டது. அப்பொழுது மின்சாரத் தொடர் வண்டிகள் அறிமுகப்படுத்தப்படவில்லை. நான் மற்றவர்களை விட வயதில் சிறியவனாக இருந்த போதிலும், அந்த அமைப்பில் ஓர் உறுப்பினராக அவர்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். நான் அவர்களுடன் பூப்பந்தாட்டம், மட்டைப் பந்து போன்றவை விளையாடினேன். நான் என் வயதிற்கு நன்றாக விளையாடுவதாக அவர்கள் கூறினார்கள். அக்காலத்திலும் மட்டைப்பந்து விளையாட்டை விருப்பமான ஒரு விளையாட்டாக இளம் வயதினர் கருதினார்கள். என் பாட்டனார் மட்டைப் பந்து விளையாட்டில் மிகவும் ஆர்வம் உள்ளவர். ஞாயிறு தோறும் சென்னை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் விளையாட்டுத் திடலில் மட்டைப் பந்து விளையாட்டுப் போட்டிகள் நடத்துவார்கள். நான் என் பாட்டனாருடன் அதைப் பார்க்கச் செல்வேன். இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்கும் இடையே நடந்த போட்டிகளில் இந்தியா தொடர்ந்து இரண்டாண்டுகள் தோல்வியைத் தழுவியது. மூன்றாவது ஆண்டு புகழ்பெற்ற மட்டைப்பந்து விளையாட்டு வீரர் பம்பாயைச் சேர்ந்த திரு. சி. கே. நாயுடு இந்திய அணியில் விளையாடினார். அவரின் அபார ஆட்டத்தால் இந்தியா இம்முறை வெற்றி பெற்றது. அதனால் எனக்கு அவ்விளையாட்டின் மேல் இருந்த ஆர்வம் பல மடங்கு பெருகிற்று.


நான் வீட்டை விட்டு வெளியே செல்வது அரிது. பள்ளியும் வீடுமே பழக்கமான இடங்கள். முதன்முதலாக நான் சென்னையை விட்டு வெளியே சென்றது, திருநெல்வேலிக்குத்தான். என் மாமாவின் தந்தையுடன் அங்கு சென்ற நான் மௌனகுரு அவர்கள் குற்றாலத்தில் அன்னை இராஜ இராஜேஸ்வரியின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பதைக் காணும் பேறு பெற்றேன். அத்துடன் அப்பகுதியில் உள்ள புண்ணியத்தலங்களையும் பார்த்து வரும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது மகிழ்ச்சியிலும் மகிழ்ச்சி.

அக்காலத்தில் பேருந்து வசதிகள் இல்லை. இரட்டை மாடு பூட்டிய, நீண்ட, மேல் பாகம் மூடிய வண்டிகளில்தான் பயணம் செய்வோம். பயணம் நெடுந்தொலைவு இருந்தால், வண்டி நீளமாக இருந்ததால் எங்களைப் போன்ற சிறுவர்கள் வண்டியிலேயே தூங்க முடிந்தது. இது எனக்கு ஒரு மகிழ்ச்சி நிறைந்த அனுபவமாகும். அக்காலத்தில் சென்னையில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடம் செல்வதற்கு மாட்டு வண்டி அல்லது குதிரை வண்டிகளையே பயன்படுத்தினோம். எப்பொழுதாவது என் பாட்டனார் டிராம் வண்டிகளில் அழைத்துச் செல்வார். அவ்வண்டிகளில் செல்வது மகிழ்ச்சியாக இருக்கும். ஐம்பது அல்லது அறுபது பயணிகளை ஏற்றிக் கொண்டு தெருக்களில் அழகாகச் செல்லும். கட்டணமும் மிகக் குறைவுதான்! அவ்வண்டிகள் மிகுந்த மக்கள் கூட்டமான தெருக்களிலும் அசையாமல் மெதுவாகச் செல்லும். மக்களும் சாலை விதிகளை மனத்திற் கொண்டுவீதிகளில்ஒழுங்காகச்சென்றார்கள். ஓட்டுநர்களும் பொறுப்புணர்ச்சியுடன் தங்கள் கடமையைச் செய்தார்கள். என் நினைவிற்கு எட்டிய நாள் வரை ஒரு விபத்துக் கூட ஏற்பட்டதை நான் கண்ணால் கண்டதில்லை.

இத்தகைய குழந்தைத்தனமான அனுபவங்கள் என்னுடைய இளமைப் பருவத்தை மகிழ்ச்சி நிறைந்ததாக ஆக்கின. நான் விரும்புவதெல்லாம் கௌபரின் கூற்றுக்கிணங்க காலம் மாறி, அத்தகைய மகிழ்ச்சிகரமான நாட்கள் மீண்டும் வராதா? என்பதுதான்.

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

3



பூதலூர் முத்து

மாலை நேரம்.

நேரு நகர்ப் பூங்காவைச் சேர்ந்த மைதானத்தில் தன்னுடைய அழகிய சிறிய 'அட்லஸ்' சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான் பகத்.

அது பளபளக்கும் சிவப்பு வண்ணத்தில் கண்ணைப் பறித்தது. அழகாக வளைந்திருந்த 'ஹேண்டில் பார்' ரேஸ் சைக்கிளை நினைவுபடுத்தியது. அதில் பொருத்தப்பட்டிருந்த மணியின் ஒலி பியானோவின் இசையைப் போல இருந்தது. 'மெத்து மெத்தென்று' குஷன் வைத்துத் தைக்கப் பெற்ற ஸீட்! முன்னும் பின்னும் அலங்கார பல்புகள்!

அந்தச் சைக்கிளில் ஏறி அமர்ந்து ஒரு சுற்றுச் சுற்றி வந்தால், எதையும் சாதித்து விடலாம் என்ற தன்னம்பிக்கை பகத்துக்கு வந்து விடும். அதில் சுற்றி வரும் போது தேரில் அமர்ந்து செல்லும் ஓர் இளவரசனாகத் தன்னை நினைத்துக் கொள்வான் அவன்.

அந்த சைக்கிள் மணி எழுப்பிய இன்னோசையைக் கேட்டு, பூங்காவில் இருந்த நான்கைந்து சிறுவர்கள் அங்கு ஓடி வந்தனர். ஒலியெழுப்பிக் கொண்டு அவன் பவனி வருவதைப் பார்த்து ரசித்தனர்.

ஓடிக் கொண்டிருந்த சைக்கிளின் குறுக்கே வந்து நின்றான் ஒரு பையன்! அவன் நல்ல பருமனாக இருந்தான். அவன் பெயர் வேலப்பன். அவனும் பாரதி மேல்நிலைப் பள்ளியில்தான் படித்து வந்தான். ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று மூன்று ஆண்டுகள் உட்கார்ந்து அடித்தளத்தை வலுவாகப் போட்டுக் கொண்டிருந்தான்! மெதுவாக நகர்ந்து ஒருவழியாக ஒன்பதாம் வகுப்புக்கு வந்திருந்தான்.

குடை மிளகாய் போல இருந்தது அவனுடைய மூக்கு; உருண்டையான விழிகள் ஆந்தையை நினைவுபடுத்தின. உதட்டுக்கு மேலே மீசை அரும்பி ஒரு பெரிய மனிதனுக்குரிய தோற்றத்தோடு இருந்தான். பள்ளியில் பகத் அவனை ஓரிருமுறை பார்த்திருக்கிறான். உருவம் வித்தியாசமா

னதாக இருந்ததால் மனத்தில் அப்படியே பதிந்து விட்டது!

வேலப்பனின் கண்கள் அந்தச் சைக்கிளை விட்டு எங்கும் அகலவில்லை.

"டேய் பகத்! உன் சைக்கிளைக் கொஞ்சம் கொடு. ஏறி ஓட்டிப் பார்க்கிறேன். ஐந்து நிமிடத்தில் தந்து விடுகிறேன்" என்றான்.

'பிரேக்' போட்டு இடது காலைத் தரையில் ஊன்றிய பகத், அவனுடைய தோற்றத்தையும் தன்னுடைய சைக்கிளின் தோற்றத்தையும் பார்த்தான். அவன் ஏறி உட்கார்ந்தால், சைக்கிள் வளைந்து நெளிந்து சுருண்டு அப்பளம் போல் ஆகிவிடும் என்பதை உணர்ந்தான்.

அவனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று யோசித்தான் பகத்.

வேலப்பன் அவனை யோசிக்கக் கூட விடவில்லை.

"ஏண்டா பகத், என்னவோ தங்கத்தால் ஆன சைக்கிளைத் தருவதற்குத் தயங்குவது போல இப்படி மிரள்கிறாயே?"

"அப்பா என்னைத் திட்டுவார். சைக்கிளை யாருக்கும் இரவல் தரக் கூடாது என்று கூறியுள்ளார்." — தெளிவான தமிழில் அவன் பேசாத போனாலும், நன்கு புரியும்படி பேசினான்.

"உங்க அப்பா உதவி கலெக்டர். இந்த உதவிக்குக் கூடவா உன்னைத் திட்டுவார்? ஒரேயடியாகப் பயப்படுகிறாயே...! வேடிக்கையான பையன் நீ!"

"நீ சைக்கிளை ஓட்டிப் பார்க்க ஆசைப்படுகிறாய். இதற்குப் பெயர் உதவியா?" என்று கேட்டுச் சிரித்தான் பகத்.

'இங்கே பிழைக்க வந்தவனுக்கு இவ்வளவு திமிரா?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் வேலப்பன்.

அவனுடைய தந்தை, பக்கத்து ஊர்க்காரனைப் பார்த்தே அப்படித்தான் கேட்பார். அதே பழக்கம் பையனுக்கும் வந்திருந்தது.

"உன் சைக்கிள் தேய்ந்து போகும் என்றுதானே தரமாட்டேன் என்கிறாய்?"

"இது என்னுடைய சைக்கிள். இதைத் தர விரும்புவதோ மறுப்பதோ என்னுடைய உரிமை. இதற்காக நீ ஏன் என் மீது கோபப்படுகிறாய்? சைக்கிள் உடைந்து போனால் நீயா வாங்கித் தருவாய்?"

ஆணித்தரமாகக் கேட்டான் பகத். அவன் அப்படிப் பேசுவான் என்று வேலப்பன் எதிர்பார்க்கவில்லை.

"எது உன்னுடைய சைக்கிள், இதுவா?" என்று கேட்டுச் சிரித்தான் அவன்.

அவனுடைய கேள்வியின் அர்த்தம் பகத்துக்குப் புரியவில்லை.

"இப்போதுதான் எங்கள் பள்ளிக்கு வந்திருக்கிறாய்... சின்னப் பையனாகவும் இருக்கிறாய். என்னைப் போன்ற முக்கியமான பையன்களின் நட்பைப் பெற்றுக் கொள்ள உனக்குத் தெரியவில்லையே! வந்த வாய்ப்பை நழுவ விட்டு விட்டு என் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டாயே! இரு, உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்."

வேலப்பனுடைய எச்சரிக்கையைக் கண்டு பகத் அஞ்சவில்லை. பஞ்சாப் மண்ணில் பிறந்தவனாயிற்றே அவன்!

'அரவிந்தன், ராமு போன்ற பூச்செடிகள் இருக்கும் இடத்தில் இப்படி ஒரு முள் செடியா?' என்று எண்ணி வேதனைப்பட்டது அவனுடைய உள்ளம்.

பகத் 'ஆங்கில மீடியம்' வகுப்பில் சேர்ந்திருந்தாலும் தமிழைக் கற்றுக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினான்.

'தியாகராஜன் கொடுத்த மொழிபெயர்ப்பு நூலே மிக நன்றாக இருந்ததே! தமிழைக் கற்றுக் கொண்டால் இன்னும் எவ்வளவு நன்றாக இருக்கும்! புதிய விஷயங்கள் நிறையத் தெரிந்து கொள்ள முடியுமே! நண்பர்களுடன் மனம் விட்டுப் பேச முடியுமே!'

பகத் தன் விருப்பத்தை அரவிந்தனிடம் சொன்னான். அரவிந்தன் மூன்றே நாளில் அதற்குரிய ஏற்பாட்டைச் செய்து விட்டான். 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்ற பாரதியின் மொழியைப் பொன்மொழியாக — வேதவாக்காக நினைத்துச் செயல்படும் தமிழாசிரியர் செழியனிடம் பகத்தை அழைத்துச் சென்றான் அவன்.

நெற்றியில் திருநீறு; முகத்தில் கண்ணாடி; வெள்ளை உடை; தூய சிந்தனைகள்! இவை செழியனைக் காட்டுகின்ற அடையாளங்கள்! நம் மொழியை நாட்டத்தோடு வளர்க்க வேண்டும் என்று எண்ணிச் செயல்படும் அவர், பிற மொழியையும் பிற மொழியினரையும் எந்த விதத்திலும் இழிவுபடுத்தக் கூடாது என்பதிலும் மிகுந்த கவனம் உடையவராக இருந்தார். எல்லா மொழிகளையும்விட அன்பு என்பது மிகவும் உயர்ந்த மொழி — உணர்ச்சியுள்ள மொழி என்பது அவரது கருத்து!

பகத்தைக் கண்டதும் செழியன் ஆர்வத்தோடு வரவேற்றார்; அன்பு காட்டினார். அவனுடைய நோக்கத்தை அறிந்ததும் அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.


ஒவ்வொரு நாள் மாலையிலும் அவனுக்கு எளிய முறையில் தமிழைக் கற்றுக் கொடுத்தார். பகத் தமிழைக் கற்றுக் கொள்ளக் காட்டிய வேகம் அவருக்கே புத்துணர்ச்சி ஊட்டுவதாக இருந்தது.

வண்ணப் படங்களோடு கூடிய சிறு சிறு நூல்களை அவனுக்காக வரவழைத்தார்; சிறு சிறு கதை நூல்களை வரவழைத்தார்; குழந்தைப் பாடல்கள் கொண்ட நூல்களை வரவழைத்தார்.

அவன் ஒவ்வொரு நாளும் கற்றுக் கொண்ட சொற்களை, வாக்கியங்களை அவரிடம் திரும்பச் சொன்னான். கிளியின் மொழி போல இருந்தது அவனுடைய பேச்சு!

அவனுடைய பேச்சை அவர் பாராட்டினார். அவன் காட்டிய ஆர்வத்தை மற்ற மாணவர்களிடம் எடுத்துச் சொன்னார். அவர்களும் வந்து பார்த்து அவன் பேசுவதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள்.





தலைகீழ்ப் பாடம்

இவர்: பையன் என்ன தப்புச் செஞ்சான்? இப்படித் தலைகீழா நிக்க வச்சிருக்கீங்களே!

ஆசிரியர்: நாலாம் வாய்ப்பாட்டை தலைகீழாச் சொல்லச் சொன்னேன்!

— கடலூர் கன்னியப்பன்.

பகத் சைக்கிளை விட்டு இறங்கியதும் வீட்டுத் திண்ணையில் அரவிந்தன் தயாராகக் காத்திருப்பதைப் பார்த்தான்.

"அரவிந்தன்! இதோ ஒரு ஐந்து நிமிடத்தில் வந்து விடுகிறேன். தமிழ் வகுப்புக்குப் போகலாம்" என்றான்.

அன்றாடம் தனக்காகக் காத்திருந்து ஆசிரியர் செழியனின் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் அரவிந்தனின் பண்பு அவனுடைய உள்ளத்தை நெகிழவைத்தது.

பகத்தின் தாயார் கொடுத்த இனிப்பு உருண்டையை அரவிந்தனிடம் கொடுத்தான்.

பூங்காவைத் தாண்டி இருவருடைய சைக்கிள்களும் ஓடிக் கொண்டிருந்தன.

சற்று முன்பாக வேலப்பன் தன்னை எச்சரித்து விட்டுப் போன விஷயத்தை அரவிந்தனிடம் சொல்லலாமா என்று ஒருகணம் நினைத்தான்.

'அந்த நிகழ்ச்சியை அவனிடம் சொல்லி மகிழ்ச்சியான இந்தச் சூழ்நிலையை ஏன் கெடுக்க வேண்டும்? அவன் உள்ளத்தில் வேதனையை ஏன் விதைக்க வேண்டும்?' என்று நினைத்து 'அதைச் சொல்ல வேண்டாம்' என்று முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் மாலை.

"டாண் டாண் டாண்"

அன்று பள்ளி முடிந்ததற்கான மணி ஒலித்தது.

சற்று நேரத்தில் தலைமை ஆசிரியர் அறையை நோக்கிப் பகத் பரபரப்போடு ஓடி வந்தான். அரவிந்தனும் அவனோடு வந்தான்.

பகத்தின் முகத்தில் தெரிந்த பதற்றத்தைப் பார்த்த தமிழன்பனுக்குக் கலக்கமாக இருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்,

"பகத், என்ன விஷயம்? பதற்றமில்லாமல் அமைதியாகச் சொல்" என்றார்.

"சார், என்னுடைய சிவப்பு நிற 'அட்லஸ்' சைக்கிளைக் காணவில்லை சார்!" என்றான் பகத்.

அரவிந்தன், "காலையில் கொண்டு வந்து வைத்தால் மாலையில்தான் எடுப்போம். பகல் உணவுக்கு நாங்கள் செல்வதில்லை. இதை அறிந்த யாரோ அந்த நேரத்தில் சைக்கிளைக் கொண்டு போயிருக்கிறார்கள்" என்றான்.

'இரண்டு நாளுக்கு முன்பு ஒரு மாணவன் வந்து சைக்கிள் மணி, டைனமோ இவற்றை யாரோ திருடி விட்டதாகப் புகார் சொன்னான். இப்போதோ சைக்கிளே போயிருக்கிறது. ஆய்வுக் கூடத்தில் திருட்டு. மாணவர்களிடத்தில் திருட்டு... அதுவும் தொடர்ச்சியாக...'

தமிழன்பன் சிந்தனையில் ஆழ்ந்தார். சைக்கிள் நிறுத்துமிடத்தில் காவலுக்கு இருக்கும் சிங்காரத்தைக் கூப்பிட்டனுப்பினார். சற்று நேரத்தில் வந்தான்.

"சிங்காரம்! பகல் பன்னிரண்டு மணிக்கு நீ எங்கே இருந்தாய்?"

"மாடியில் பத்தாம் வகுப்பு 'ஏ' பிரிவில் இரண்டு பையன்கள் சண்டை போட்டுக் கொள்வதாக ஒரு பையன் குரல் கொடுத்தான். அதனால் அங்கே ஓடினேன்"

"யார் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்?"

"அரவிந்தனும் ராமுவும்!"

தமிழன்பன் திகைப்படைந்தார். அரவிந்தனின் இதயம் படபடத்தது. பகத்துக்கு ஒன்றும் புரியவில்லை.



''அரவிந்தன் சண்டை போட்டதை நீ பார்த்தாயா?''

''இல்லை... நான் போவதற்குள் அவர்களுடைய சண்டை முடிந்து விட்டதாக ஒரு பையன் சொன்னான்.''

''யார் அந்தப் பையன்?''

''ஆசைத்தம்பி''

''அவன் 'டீ' செக்ஷன் ஆயிற்றே... அவன் மாடியிலிருந்தானா?''

''ஆமாம் சார்''

''நீ மாடியிலிருந்து திரும்பி வர எவ்வளவு நேரம் ஆயிற்று?''

''பத்து நிமிடம்!''

சிங்காரத்தை அனுப்பி விட்டு பகத்தையும் அரவிந்தனையும் விசாரித்தார்.

எவரையும் குறிப்பிட்டுச் சொல்லும் நிலையில் பகத் இல்லை. வேலப்பனுடைய நினைவு அவனுக்கு வந்தது. 'உன்னைக் கவனித்துக் கொள்கிறேன் என்று சொன்ன சொற்களை மட்டும் வைத்துக் கொண்டு அவனை எப்படிக் குற்றவாளியாக்குவது? காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்தது போல ஏதாவது நடந்து விட்டதோ? குற்றவாளி யாராக இருக்கும்?' என்று குழம்பினான்.

வேலப்பன் செய்த வம்பைப் பற்றிப் பகத் அரவிந்தனிடம் தெரிவித்திருந்தால், அவன் அது பற்றிச் சிந்தித்திருப்பான். தலைமை ஆசிரியரிடமும் விவரம் கூறியிருப்பான். அதற்கும் வாய்ப்பில்லாது போய் விட்டது.

''பகத்! மனம் கலங்காதே... உன் சைக்கிள் விரைவில் கிடைப்பதற்குரிய முயற்சிகளை நாங்கள் செய்கிறோம். நீ தொடர்ந்து உன் படிப்பில் அக்கறை காட்டு'' என்று ஊக்கம் தந்த தமிழன்பன் அரவிந்தனை அழைத்தார்.

''பள்ளிக்கு வெளியேயும் நீயும் உன் நண்பர்களும் விழிப்பாக இருந்து செய்திகளைத் திரட்ட முயலுங்கள். நம் முயற்சிகள் நிச்சயம் பலன் அளிக்கும்'' என்று தெம்பூட்டினார்.

மில்லிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய தியாகராஜன் வந்ததும் வராதது

மாக அரவிந்தன் சொன்ன செய்தியைக் கேட்டு மிகவும் மனம் வருந்தினார்.

"அன்று சோதனைக் கூடத்தில் நிகழ்ந்த திருட்டில் உன் மீது பழி வந்ததற்காகக் கூட நான் வருந்தவில்லை. காரணம், அதில் உண்மையில்லை. இன்று பகத்தின் சைக்கிளைத் திருடி விட்டார்களே! உன் சைக்கிள் காணாமற் போயிருந்தால்கூட எனக்கு இவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்காது. நல்ல பள்ளி என்று நாம் சொன்னதை நம்பித்தானே பல்பீர் அவனை அங்கு சேர்த்து விட்டார். நல்ல மரத்தில் தோன்றும் புல்லுருவியைப் போல அந்தப் பள்ளியில் சில தீய சக்திகளும் கலந்திருப்பது போலத் தெரிகிறது" என்றார்.

"அவரைச் சந்தித்து ஆறுதல் கூற வேண்டும் அப்பா" என்றான் அரவிந்தன்.

"பல்பீரைச் சந்தித்து ஆறுதல் கூறுவதுடன் தலைமை ஆசிரியரையும் சந்தித்து, அவர் எடுக்கும் முயற்சிகளுக்குத் துணை நிற்கிறோம் என்று உறுதி கூற வேண்டும்"

தந்தையின் சொற்களைக் கேட்ட அரவிந்தனுக்கு நிம்மதியாக இருந்தது.


படுக்கைக்குச் சென்ற பின்னரும் தியாகராஜனுடைய சிந்தனைகள் அடையாளம் தெரியாத அந்தத் தீய சக்திகளைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்தன. 'யார் அவர்கள்? மாணவர்களா, வெளி ஆட்களா? எந்த விதத்தில் அவர்களைக் கண்டுபிடித்து வெளியேற்றுவது, அல்லது தண்டிப்பது?'

அப்போது டெலிபோன் மணி அடித்து, அவருடைய சிந்தனையைத் தடுத்தது.

'இந்த நேரத்தில் நமக்கு போன் செய்வது யார்?' என்று எண்ணிக் கொண்டே போன் உள்ள இடத்தை நோக்கி விரைந்தார்.

அதே நேரத்தில் நகரத்தை விட்டு ஒதுங்கிய ஒரு பகுதியில் 'பப்ளிக் டெலிபோன் பூத்'தை விட்டு ஓர் உருவம் வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்தவாறு பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்தது.

(தொடரும்)



இரா. அருண்குமார் (21023).





ஏ. ஐயப்பன்

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



கே. சிராளன் (17060)



ஆர். சுமதி.

வாய் நாற்றத்தைத் தடுப்பது எப்படி?

டாக்டர். கு. கணேசன்

அன்று காலையிலிருந்தே செந்தில் கவலையாக இருந்தான். வகுப்பைச் சரியாக கவனிக்கவில்லை. எப்போதும் பேசி, சிரித்து மகிழ்ச்சியாக இருப்பவன், இன்று 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொண்டு அமைதியாக இருந்தான். அது சிவகுமாருக்கே ஆச்சரியமாக இருந்தது.

செந்திலும் சிவகுமாரும் நண்பர்கள். ஏழாம் வகுப்பில் படிக்கிறார்கள். இருவரும் வகுப்பில் அருகருகில் அமர்ந்து கொள்வார்கள். சேர்ந்தே படிப்பார்கள்; சேர்ந்தே சாப்பிடுவார்கள்; சேர்ந்தே விளையாடுவார்கள். அவர்களை இணைபிரியா நண்பர்கள் என்று சொன்னால் மிகையில்லை.

செந்தில் எப்போதும் ஜாலியாக இருப்பான். சிரித்துச் சிரித்துப் பேசுவான்; மற்றவர்களையும் சிரிக்க வைப்பான். அப்படிப்பட்டவன் இன்று வருத்தத்துடன் முகத்தைத் தொங்கப் போட்டிருந்தது சிவகுமாருக்கு எப்படியோ இருந்தது.

மதிய உணவின் இடைவேளையின் போது, ''என்ன செந்தில், என்ன ஆச்சு உனக்கு? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''சிவா, இன்னைக்கு காலையிலே நீ தலைமையாசிரியர் அறைக்குச் சென்றிருந்த போது மணியும் பழனியும் என்னைக் கேலி செஞ்சாங்க'' என்றான் செந்தில்.

''எதற்குக் கேலி செய்தார்கள்?'' சிவகுமார் கேட்டான்.

''நான் பேசும் போது என் வாய் நாற்றம் அடிக்குதாம்... பற்கள் அசிங்கமாக இருக்குதாம்... சொல்லிச் சொல்லிச் சிரிச்சாங்க, சிவா. ஏன் சிவா, உண்மையிலேயே என் வாய் வாடை அடிக்குதா?''-என்று செந்தில் அழாத குறையாகக் கேட்கவும், சிவகுமார் முதலில் கொஞ்சம் தயங்கினான்.

பிறகு, ''உண்மைதான் செந்தில்! சில நாட்களாகவே நீ பேசும் போது உன் வாய் வாடை அடிப்பதை நானே உணர்ந்திருக்கிறேன். உன்னிடம் சொன்னால், நீ கோபித்துக் கொள்வாயோ என்ற பயத்தில் நான் பேசாமல் இருந்து விட்டேன்'' என்றான்.

''எதுக்கு சிவா என் வாய் மட்டும் வாடை அடிக்குது? உனக்கு காரணம் தெரியுமா?'' — செந்தில் ஆதங்கத்துடன் கேட்டான்.

''தெரியலை, செந்தில்! நம் அறிவியல் ஆசிரியரிடம்போய்க்கேட்கலாம்; விளக்கம் கிடைக்கும்!''

''இன்றைக்கு அறிவியல் ஆசிரியர் லீவாச்சே!''

''அப்படியென்றால் ஒன்று செய்யலாம். என் குடும்ப டாக்டர் இங்கே அருகில்தான் இருக்கிறார். அவரிடம் கேட்டால் விவரம் தெரியும்'' என்றான் சிவகுமார்.

''சரி சிவா! இன்றைக்குச் சாயங்காலம் அங்கே போவோம்'' என்று ஆமோதித்தான் செந்தில்.

சரியாக மாலை ஐந்து மணிக்கு செந்திலும் சிவகுமாரும் அந்த மருத்துவமனைக்குள் நுழைந்தனர். அன்று எதேச்சையாக டாக்டரும் ஓய்வாக

இருந்தார்.

''வணக்கம், டாக்டர்!''

''வா, சிவகுமார். யார் இந்தப் புதுப் பையன்? உனக்கு உறவா?'' டாக்டர் விசாரித்தார்.

''இல்லை டாக்டர்! இவன் பெயர் செந்தில். என் நண்பன். உங்களிடம் ஆலோசனை கேட்க விரும்பினான். அழைத்து வந்தேன்'' என்றான் சிவ குமார் நாற்காலியில் அமர்ந்து கொண்டே.

''என்ன விஷயம்? சொல்லுங் கள்'' — டாக்டர்.

செந்தில், ''டாக்டர், எனக்கு வாய் நாற்றம் அடிக்கிறது. அது ஏன் என்று தெரியவில்லை. அதை எப்படிப் போக்குவது என்பதும் புரியவில்லை. அதனால்தான் உங்கள் உதவியை நாடி வந்தேன்....'' என்றான்.

டாக்டர் செந்திலின் வாயைத் திறக்கச் சொல்லி டார்ச் வெளிச்சத்தில் முறையாகப் பரிசோதித்தார். பிறகு, ''தம்பி, நீ தினமும் பல் துலக்கு வாயா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றான் செந்தில்.

''எதைக் கொண்டு பல் துலக்கு கிறாய்?''

''செங்கற்பொடி அல்லது சாம் பலைக் கொண்டு பல் துலக்குவேன்''

''அதுதான் தவறு நீ சரியான முறையில் பல் துலக்கவில்லை. அத னால் பற்களில் அதிகமாக அழுக்குப் படிந்துள்ளது. அது மட்டுமில்லாமல் செங்கற் பொடியாலும் சாம்பலாலும் பற்களைத் தேய்த்திருப்பதால் ஈறுகள் தேய்ந்து புண் உண்டாகியிருக்கிறது. அதனால்தான் உன் வாய் நாற்றம் அடிக்கிறது'' என்று டாக்டர் விளக் கம் கொடுத்தார்.

அப்போது சிவகுமார், ''ஏன் டாக்டர், வாய் நாற்றமெடுப்பதற்கு இதுதான் காரணமா?'' என்று இடை மறித்துக் கேட்டான்.

''இல்லை சிவகுமார்! வாய் நாற் றத்திற்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் இதுவும் ஒன்று''

''அப்படியென்றால் மற்ற கார ணங்களையும் சொல்லுங்கள், டாக்டர்'' செந்தில் ஆவலோடு கேட் டான். டாக்டர் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சொல்ல ஆரம் பித்தார்.

''தம்பி! வாய் நாற்றத்திற்கு முக்கிய காரணம் எது தெரியுமா? உன் மாதிரிச்



சிறுவர்கள் சரியாகப் பல் துலக்கு வதில்லை. சாப்பிட்டு முடித்ததும் நன்றாக வாயைக் கொப்புளிப்பதில்லை. அதனால் வாய் அசுத்தமாகி பற்களில் அழுக்குப் படிந்து மஞ்சள் கலரில் காரையாக மாறி விடும். இந்தப் பற்காரைதான் வாய் நாற்றத்திற்கு முதல் காரணம்.''

''பிறகு?''

''பற்களில் சொத்தை விழுந்து விட்டாலும் வாய் நாற்றமடிக்கும். அதே மாதிரி நாக்கில் அதிகமாக அழுக்குப் படிந்து விட்டாலும் வாய் நாற்றமடிக்கும். வாய்ப்புண், நாக்குப் புண், உதட்டுப் புண், தொண்டைப் புண், பல் ஈறுகளில் வீக்கம் அல்லது புண், டான்சில் சதையில் சீழ்படிந்த வீக்கம் போன்ற காரணங்களினாலும் வாய் நாற்றம் வரலாம்.''

சிவகுமார், ''ஏன் டாக்டர், பெரியவர்களுக்கும் வாய் நாற்றம் வரலாமில்லையா? அவர்களுக்கும் இதே காரணத்தினால்தான் வாய் நாற்றம் வருகிறதா?'' என்று தனக்கு வந்த சந்தேகத்தையே கேள்வியாக்கினான்.

டாக்டர் சிரித்துக் கொண்டே, ''நல்ல கேள்வி சிவகுமார்! பொதுவாக வெற்றிலை போடும் பழக்கத்தினாலும், பீடி, சிகரெட் புகைப்பதினாலும்தான் பெரியவர்களுக்கு வாய் நாற்றம் வருகிறது. அது போக இப்போதெல்லாம் பற்கள் விழுந்து விட்டால் அதற்குப் பதிலாக செயற்கைப் பல் கட்டும் பழக்கம் அதிகமாக உள்ளது. அச் செயற்கைப் பற்களைத் தினமும் கழற்றி சுத்தம் செய்யாவிட்டால் வாய் நாற்றம் வரலாம். வாயில் புற்று நோய் வந்தால்கூட வாய் நாற்றம் எடுக்கும்!'' என்று சொன்ன போது சிவகுமார் முகத்தில் திருப்தி நிறைந்தது. அவன் மனத்திற்குள்ளே சந்தேகம் தீர்ந்தது.

''டாக்டர், வாய்நாற்றத்தைப் போக்க என்ன செய்ய வேண்டும்?'' செந்தில் கேட்டான்.

டாக்டர் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டபின், ''தம்பி! வாய்நாற்றம் உள்ளவர்கள் உன்னை மாதிரி உடனுக்குடன் பல் மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும். அப்போதுதான் வாய் நாற்றத்திற்கு என்ன காரணம் என்பதை அறிந்து வைத்தியம் பெறலாம். பொதுவாக, பல் மருத்துவர்கள் ''ஸ்கேலிங்'' **(SCALING)** என்ற முறையில் பற்களில் படிந்துள்ள அழுக்கையும் காரையையும் அகற்றிச் சுத்தப்படுத்துவார்கள். அதே மாதிரி சொத்தைப் பல் **(CARRIES TOOTH)** இருந்தால் அதை அடைத்து விடுவார்கள் அல்லது அகற்றி விடுவார்கள்.

''வாய்ப்புண், நாக்குப் புண், தொண்டைப் புண் போன்றவற்றுக்கு மருத்துவரின் ஆலோசனையின் பேரில் கிருமி கொல்லி மருந்துகளையும், வைட்டமின் சத்து நிறைந்த மாத்திரைகளையும் சில நாட்களுக்கு உட்கொள்ள வேண்டும்.

''அடுத்தபடியாக சுமார் 200 மி.லி. வெது வெதுப்பான தண்ணீரில் கொஞ்சம் சமையல் உப்பைப் போட்டுக் கலந்து அதைக் கொண்டு அடிக்கடி வாயைக் கொப்பளித்தால் வாய் நாற்றம் நீங்கும். இது மிகவும் எளிய முதலுதவி. இதைப் போலவே சிறிதளவு பொட்டாசியம் பெர்மாங்கனேட் துகள்களையும் வெந்நீரில் கலந்து வாயைக் கழுவலாம். 'பீட்டாடின்' **(BETADINE)** என்ற வாய் கொப்புளிக்க உதவும் மருந்தினை மருந்துக் கடைகளில் வாங்கி, ஒரு தம்ளர் தண்ணீரில் ஒரு மூடி கலந்து வாய் கொப்புளிக்கலாம். இதிலுள்ள கிருமி கொல்லி மருந்து பற்களைச் சுத்தப் படுத்துவதோடு கிருமிகளையும் கொன்று விடும். இம்மாதிரி பல முறைகளை உபயோகித்து வாய் நாற்றத்தை அறவே போக்கி விடலாம்''

''ரொம்ப நன்றி டாக்டர்! இப்போதுதான் எனக்குப் பயம் நீங்கியது. எங்கே இந்த வாய் நாற்றத்தைப் போக்க முடியாமல் என் நண்பர்களிடம் கேலிக்குரியவனாக ஆகி விடுவேனோ என்று பயந்து விட்டேன். இப்போதுதான் எனக்கு நிம்மதி, டாக்டர்!'' — செந்தில் சந்தோஷமாகச் சொன்னான்.

இதுவரைக்கும் பேசாமல் டாக்டர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சிவகுமார், ''ஏன் டாக்டர், வாய்

நாற்றம் வராமல் தடுக்க முடியுமா?'' எனக் கேட்டான்.

''முடியும்'' என்றார் டாக்டர்.

''எப்படி?'' எனக் கேட்டான் செந்தில்.

''சரி, அதையும் சொல்கிறேன்; கேளுங்கள்'' என்று டாக்டர் மீண்டும் சொல்ல ஆரம்பித்தார்.

''தம்பிகளே! நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி உங்கள் வாயைச் சுத்தமாக வைத்துக் கொண்டால், வாய் நாற்றம் வரவே வராது. அதற்கு நீங்கள் தினமும் இருமுறை பல் துலக்க வேண்டும். அதாவது காலையில் எழுந்ததும் ஒரு முறையும், இரவில் படுக்கப் போகும் போது ஒரு முறையும் பல் துலக்க வேண்டும்.

விரல்களால் பல் துலக்குவது நல்லதல்ல. அதே போல் சாம்பல், மண், செங்கற்பொடி போன்றவற்றாலும் பல்துலக்கக்கூடாது. ஒருதரம்வாய்ந்த சாப்ட் **(SOFT)** அல்லது மீடியம் **(MEDIUM)** சைஸ் டூத் பிரஷ்ஷால் புளோரைடு அடங்கிய பற்பசையால் பல் துலக்க வேண்டும். ஒவ்வொரு முறை பல் துலக்கும் போதும் நாக்கையும் நன்கு சுத்தப்படுத்த வேண்டும்.

நீங்கள் சாப்பிட்டு முடித்ததும், வாயை நன்கு தண்ணீரால் கொப்பளித்துக் கழுவ வேண்டும். சொத்தைப் பல் விழுவதைத் தவிர்க்க வேண்டியது மிக மிக அவசியம். அதற்கு, இனிப்புப் பண்டங்களை அதிகமாகச் சாப்பிடாமல் அளவோடு சாப்பிட வேண்டும்.

பால், முட்டை, காய்கறி, பழம் போன்ற சத்துள்ள உணவுகளை உட்கொண்டால் வாய்ப்புண், நாக்குப் புண், உதட்டுப்புண் போன்றவை வராது. அதன் மூலம் வாய்நாற்றத்தைத் தவிர்க்கலாமில்லையா?

சில குழந்தைகள் சிலேட்டுக் குச்சி, விபூதி, மண் போன்றவற்றைச் சாப்பிடும் வழக்கத்தை வைத்திருப்பார்கள். அதையும் தவிர்க்க வேண்டும்.

பாக்கு, பீடா, சீரகம் போன்ற வாசனைப் பொருட்களை உபயோகித்தால், தற்சமயம் வாய் நாற்றத்தைப் போக்குமே தவிர அவையே மீண்டும் வாய் நாற்றம் வருவதற்கு வழி வகுக்கும். எனவே, வாயில் வாசனைப் பொருட்கள் போடும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.



சிகரெட், பீடி, புகையிலை, வெற்றிலை போன்றவற்றைத் தொடவே கூடாது.

ஆறு மாதத்திற்கு ஒருமுறை பல் மருத்துவரை அணுகி வாய் சுத்தமாக இருக்கவும், பற்கள் ஆரோக்கியமாக இருக்கவும் ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும்.''

டாக்டர் கொடுத்த நீண்ட விளக்கத்தில் செந்திலும் சிவகுமாரும் மெய் மறந்து உட்கார்ந்து விட்டார்கள். அவர்கள் நினைவுக்கு வரவே சில நிமிடங்கள் பிடித்தன.

''நன்றி, டாக்டர். எங்களுக்காக உங்கள் பொன்னான நேரத்தைச் செலவழித்து எங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தீர்கள். அதை என்றும் மறக்க மாட்டோம்'' என்று சிவகுமார் மனப்பூர்வமாக நன்றி சொன்னான்.

அதன் பிறகு டாக்டர் செந்திலுக்கு முறையாக வைத்தியம் செய்தார். ''வருகிறோம் டாக்டர்'' என்று இருவரும் டாக்டரிடம் விடைபெற்றுக் கொண்டார்கள்.



பரிசு யாருக்கு?

புவனை கலைச்செழியன்

மேகலை மேல்நிலைப் பள்ளி புதுக்கோலம் பூண்டு மிடுக்குடன் காட்சியளித்தது. வழக்கமாக ஆகஸ்ட் பதினைந்தில் நடைபெறும் சுதந்திர தின விழா அன்று நடக்க இருக்கிறது. மாணவர்கள் அனைவரும் மடிப்புக் கலையாத சலவை உடை அணிந்து, புன்னகை பூத்த முகத்தினராய்க் காட்சியளித்தனர்.

விளையாட்டுப் போட்டிகளும், கலைப் போட்டிகளும் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே நடந்து முடிந்து விட்டன. விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் உடனுக்குடன் தெரிந்து விட்டன. ஆனால்,கலைப் போட்டிகளின் முடிவுகள் மட்டும், மாலையில் விழா நடந்து பரிசு அளிக்கப்படும் முன்புதான் தெரிவது வழக்கம்.

கட்டுரைப் போட்டியின் முடிவை அறிய, அடக்க முடியாத ஆவலுடன் காத்திருந்தான் கணேசன். அதற்கு விசேஷ காரணம் இருக்கத்தான் செய்தது.

ஆண்டாண்டுதோறும் அந்தப் போட்டியில் பரிசைத் தட்டிச் செல்வதற்கு என்றே அவதரித்தவன் மாதிரி திகழ்ந்தவன் நடேசன் ஒருவன்தான்! கருத்துக்களை வகையாக வரிசைப் படுத்தி, செறிவான சொற்களைத் தேர்ந்தெடுத்து, அழகும் நயமும் மிகுந்ததாகக் கட்டுரை எழுதும் திறமை நடேசனுக்கு இயல்பாகவே கைவந்திருந்தது! வகுப்புப் பாடங்களைப் பயில்வது மட்டுமின்றி, நூலகத்தில் உள்ள புத்தகங்களையெல்லாம் ஓய்வு கிடைக்கும் போது அவன் படிப்பான். முக்கிய விஷயங்களைக் குறிப்பெடுத்து வைத்துக் கொள்வான். கட்டுரை எழுதும் போது அக் குறிப்புக்கள் மேற்கோள்களாகக் காட்டப்படுவதற்கு உதவியாக இருக்கும். அதனால் நடேசனின் கட்டுரைகள் மட்டும் உயர்தரமாக அமைந்து போவதில் ஆச்சரியமில்லை.

ஆனால் இவ்விஷயம் கணேசனுக்கு மட்டும் ஏனோ கடுகடுப்பை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது! 'ஒவ்வோர் ஆண்டும் இந்த நடேசன் பரிசைத் தட்டிக் கொண்டு போவதாவது! இந்தத் நடவை மட்டும் அது

நடக்கவே நடக்காது! நடக்காதபடி எவ்விதமாவது தடுத்து விட வேண்டும்' என்று திட்டம் தீட்டியது அவனது தீய நெஞ்சம்.

கணேசனும் ஆண்டு தவறாமல கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்வது உண்டு. ஆனால் பரிசு என்னவோ அவனுக்கு இதுவரையில் எட்டாக்கனிதான்!

கணேசனுக்குச் சிந்தனை தீவிரமானது. 'சிறு சேமிப்பு' என்ற தலைப்பில் இந்த ஆண்டு கட்டுரை கொடுக்கப்பட்டது. மாணவர் பலரும் போட்டியில் பங்கு கொண்டனர். நடேசனும் கணேசனும் கூட போட்டியாளர்களுள் அடங்கியவர் என்பதைக் கூறத் தேவையில்லை.

கணேசனின் அப்பா அஞ்சலகத் தலைவர். சிறுசேமிப்பைப் பற்றி அனுபவ பூர்வமாக அதிகம் தெரிந்தவர். அவர் அடிக்கடி சேமிப்பு பற்றிய விவரங்களைத் தெளிவாக மகனிடம் கூறி வந்தது, இப்போது அவனுக்குப் பெரிதும் உபயோகமாக இருந்தது.

இதயத் தெம்போடு கட்டுரை எழுத, ஹாலுக்கு மற்ற போட்டியாளருடன் சென்றான் கணேசன். அப்பா கூறியிருந்த விஷயங்களை நன்றாக நினைவுபடுத்திப் பார்த்துக் கொண்டான். விஷயங்கள் அனைத்தும் முன்னும் பின்னுமாக முட்டி மோதிக் கொண்டு மனத் திரையில் தோன்றலாயின. சிந்தனைச் சிதறல்களை ஆர அமர ஒழுங்குபடுத்தி ஒரு வழியாக அவன் நிறைவு செய்யவும், முடிவு மணி அடிக்கவும் சரியாயிருந்தது.

நிமிர்ந்து பார்த்த கணேசன் திடுக்கிட்டான்! மற்ற போட்டியாளர் அனைவரும் எப்போதோ போய் விட்டிருந்தனர். நடேசனைக் கூடக் காணோம். கட்டுரையை அவசரம் அவசரமாகக் கிறுக்கிக் கொடுத்து விட்டுப் போய் விட்டான் போலும்!

"என்ன கணேசா! வரிந்து தள்ளி விட்டாய் போல் இருக்கிறதே! இந்தத் தடவை முதல் பரிசு உனக்குத்தான் என்று நினைக்கிறேன்."

ஆசிரியர் கண்ணனின் சொற்கள் சுப சகுனமாக ஒலிப்பது போல் அவனுக்குப் பட்டன.




"ஆனாலும் பிரமாதமாக எழுதி விட்டோம் என்ற செருக்கு மட்டும் கூடாது. எவ்வளவு நன்றாக எழுதினாலும், எழுதி முடித்த பின், இதை விடப் பிரமாதமாக எழுதியிருக்கலாமோ என்ற ஒரு மனக்குறை, நமைச்சல் மாதிரி நெஞ்சை அரித்துக் கொண்டே இருக்க வேண்டும். இதை மட்டும் எப்பவும் நினைவில் வைத்துக் கொள், கணேசா!"

ஆசிரியர் அடுத்து இப்படிச் சொன்னது கணேசனின் உள்ளத்தைச் 'சுருக்'கென்று தைத்த மாதிரி இருந்தது.

'ஒருவேளை நான் எழுதியது அத்தனை சிறப்பாக இருக்காதோ? நடேசன்தான் இம் முறையும் வழக்கமாகப் பரிசை அடித்துக் கொண்டு போய் விடுவானோ' என்று சந்தேகப்பட்டான்.

இப்போது கணேசனின் மனவலிமையும், நம்பிக்கைத் திடமும், கொஞ்சம் கொஞ்சமாக அவனை விட்டு நழுவுகிற மாதிரி இருந்தது.



'நடேசனுக்கு மட்டும் எப்படி இயல்பாகத் திறமை கைவந்திருக்கிறது! அவன் நானாகவும், நான் அவனாகவும் பிறந்திருந்தால்... என் கட்டுரை அவனுடையதாகவும், அவன் கட்டுரை என்னுடையதாகவும் மாறி விட்டிருந்தால்.... எத்தனை குதூகலமாக இருந்திருக்கும்!

இத்தகைய நினைவு நெருப்புக்கு நெய் வார்க்கிற மாதிரி, ஒரு வாய்ப்பு எதிர்பாராமல் உடனே வந்து சேர்ந்தது கணேசனுக்கு.

''கணேசா! கொஞ்சம் பொறு. இந்தக் கட்டுரைத் தாள்களையெல்லாம் ஆசிரியர் ஓய்வறைக்கு எடுத்துப் போய், என்னுடைய அலமாரியில் வைத்து விட்டுப் போ! ஹெட்மாஸ்டரைப் போய்ப் பார்த்து, ஒரு சமாசாரம் சொல்லி விட்டு வந்து விடுகிறேன்'' என்ற ஆசிரியர் தொடர்ந்து, ''உனக்கு விஷயம் தெரியுமோ? இந்தத் தடவை கட்டுரைகளை நம்முடைய பள்ளியில் திருத்துவதாக இல்லை. வெளியூர்ப் பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் கொடுத்துத் திருத்தச் செய்வதாக இருக்கிறோம்'' என்று கூறினார். பின்பு கட்டுரைத் தாள்களைக் கட்டி, கணேசனிடம் தந்தார்.

கணேசனுக்கு உற்சாகம் மிகுந்து உள்ளம் துள்ளியது! இனம் தெரியாத பரபரப்பு உடம்பு முழுவதும் பரவியது. எனினும் தன் உணர்ச்சியை முகம் வெளிப்படுத்தி விடாதபடி சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு ஆசிரியர்கள் அறையை நோக்கி நடந்தான்.

அந்த அறையில் எப்போதும் யாராவது ஆசிரியர் ஓய்வில் இருப்பது வழக்கம். ஆனால் அந்தச் சமயம் ஒருத்தர் கூட அங்கே இல்லை. அந்தப் பாட வேளையில் எல்லோருக்கும் வகுப்பு இருந்து விட்டது போலும்!

கண்ணன் சாருடைய அலமாரியைத் திறந்து தாள்களை வைக்கப் போன கணேசனுக்கு, ஏற்கெனவே மறைந்திருந்த அந்த எண்ணம் தலை தூக்கியது. அக்கம் பக்கம் யாரும் இல்லாதது அந்த எண்ணத்திற்கு வலுவூட்டியது. 'பேப்பர்கள் வெளியில் தானே திருத்தப்படப் போகின்றன.

கட்டுரைகளில் நல்ல வேளையாக, கலந்து கொள்ளும் நபர்களின் பெயர்கள் இல்லை. ஒவ்வொருவருக்கும் நம்பர் கொடுத்திருப்பது எத்தனை சௌகரியமாய்ப் போயிற்று!' இப்படி நினைத்துக் கொண்டே துணிச்சலோடு அந்தக் காரியத்தைச் செய்து விட்டான்!

சுற்று முற்றும் விழிகளைச் சுழற்றினான் கணேசன். தன் செய்கையை யாரும் கவனிக்கவில்லை என்று நிச்சயப்படுத்திக் கொண்டான். நல்ல பிள்ளை போல் நடந்து சென்று தன் வகுப்பறையை அடைந்தான்.

பள்ளியின் நடுக் கூடம்; மாணவர்களாலும், அவர்களின் பெற்றோர்களாலும், ஆசிரியப் பெருமக்களாலும் நிரம்பி வழிந்தது. அனைவர் முகங்களிலும் ஆனந்தம் முத்திரை பதித்திருந்தது.

கலெக்டர் தலைமை தாங்கினார். கல்வி அமைச்சர் பரிசுகள் வழங்க வந்திருந்தார். தலைமையாசிரியர் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களின் பெயர்களைப் படிக்கத் தொடங்கினார்.

மாணவர் ஒவ்வொருவராக வந்து தமக்குரிய பரிசை அமைச்சரிடமிருந்து பெற்றுக் கொண்டு, கும்பிடு போட்டோ, கைகுலுக்கியோ மரியாதை தெரிவித்துச் சென்றனர்.

"இப்போது கட்டுரைப் போட்டி. இதில் பரிசு பெற்றவன்..."

தலைமையாசிரியர் மூச்சு விட்டுக் கொள்ள சற்று நிறுத்திய மாதிரி பட்டது. அப்போது கணேசனின் இதயம் 'திக் திக்' என அடித்துக் கொண்டது. "....பதினொன்றாம் வகுப்பு 'ஏ' குரூப் மாணவன் கே. நடேசன்" என்று அவர் சொல்லி முடிக்கவும், மாணவரின் கைதட்டல் பள்ளிக் கட்டடத்தையே அதிர வைத்தது.

"சிறு சேமிப்பு பற்றி அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் எழுதுகிற மாதிரி இந்த மாணவன் எழுதியிருப்பதை நானும் படித்தேன். இவனுக்கு என் சொந்த முறையில் ஐம்பது ரூபாய் பரிசளிக்கிறேன்" என்று சொல்லிப் பாராட்டிய கலெக்டர் அவன் கட்டுரையிலிருந்து சில வரிகளைப் படித்துக் காட்டினார்.

திருடனுக்குத் தேள் கொட்டிய மாதிரி இருந்தது கணேசனுக்கு. 'அடடா! என் தாளில் அவன் நம்பரையும், அவன் தாளில் என் நம்பரையும் மாற்றி எழுதி எனக்கு வர இருந்த பரிசையும் பாராட்டையும் இழந்து விட்டேனே!' என்று அவன் வருந்திய அதே சமயம் —

"ஐயா, இந்தப் பரிசுக்கு உகந்தவன் நான் அல்ல. ஏனென்றால், நீங்கள் படித்த வார்த்தைகளை என் கட்டுரையில் நான் நிச்சயமாக எழுதவில்லை. ஏதோ மாறாட்டம் நடந்திருக்கிறது. பரிசை, உரியவன் யார் என்று பார்த்து அவனுக்கு அளியுங்கள்" என்று பெருந்தன்மையுடன் கூறி விட்டு, மேடையினின்றும் இறங்கிப் போய்க் கீழே அமர்ந்தான் நடேசன்.

உடனே சுற்றிலும் 'கசமுசா' என்ற ஓசை பரவியது. கட்டுரைப் போட்டியில், கலந்து கொண்டவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு, ஒவ்வொருவரின் கையெழுத்தும் பரிசோதிக்கப்பட்டது. தவறு செய்தது யார் எனத் தெரிந்து போயிற்று!

"இவ்வாறு நடந்ததற்கு நான்தான் முக்கியப் பொறுப்பாளி. போட்டி முடிந்ததும் கட்டுரைகளைக் கணேச

நல்ல ஆட்சி

நல்ல ஆட்சிக்கு இலக்கணம் காலத்தில் மழைபொழியும்; பசுக்கள் நிரம்பப் பால்தரும்; மக்கள் மனம் அறவழியில் நிற்கும்; பயிர்கள் செழிக்கும்; சூதும் வாதும் வஞ்சனையும், களவும் இருக்க மாட்டா.

— சி. வசந்த் (13,229), புதுக்கோட்டை.



னிடம் கொடுத்தனுப்பி எனது அலமாரியில் வைக்கச் சொன்னேன். அவன் தன் 'கை வரிசை'யைக் காட்டி விட்டான் என்று விரிவாக விளக்கினார், ஆசிரியர் கண்ணன்.

''உண்மையில் தான் எழுதாத கட்டுரைக்குப் பரிசு பெற விரும்பாத நடேசனின் நேர்மையைப் பாராட்டி, அந்த நேர்மை காரணமாக அவனுக்கே பரிசை வழங்குகிறோம்'' என்று அறிவிக்கப்பட்டுப் பரிசுப் பொருள் நடேசனுக்கு வழங்கப்பட்டது.

பரிசை வாங்கிய நடேசனோ, ''இந்தப் பரிசு என்னுடையது என்பதால், இதை என் இஷ்டப்படி பயன்படுத்த அவையோர் என்னை அனுமதிக்க வேண்டும். ஏதோ அறியாமல் தவறு செய்து விட்டாலும், ஊக்கத்தோடும் முயற்சியோடும் கட்டுரையைச் சிறப்பாக எழுதிய கணேசனுக்கு இதைத் தருகிறேன்'' என்று சொல்லி அதை கணேசன் கையில் வலியத் திணித்தான்.

நடேசனது பெருந்தன்மையைக் கண்டு, வந்திருந்தோர் அனைவரும் வியப்படைந்தனர். ''எல்லாரும் என்னை மன்னிக்கும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறிக் கண் கலங்கத் தலை குனிந்தான் கணேசன்.



பூ... பூ... மத்தாப்பூ

புகைப்படம்:
எம். நடராஜன்.

பிறந்தநாள் பரிசு



"அம்மா, அம்மா! எனக்குப் பிறந்த நாளுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுப்பாயா?" என்றான் குமார். அவனுக்குசைக்கிளில்பள்ளிக்கூடம் செல்ல வேண்டுமென்று கொள்ளை ஆசை. அவனுடைய தோழர்கள் ரமேஷும், முத்துவும் சின்ன சைக்கிளில் பள்ளிக்கு வருகின்றனர். ஏன், அவன் வகுப்பு உமா கூட சின்ன லேடீஸ் சைக்கிளில் வருகிறாள். இவனோ நடந்து செல்கிறான்.

அம்மா சிரித்தாள். "உனக்கு சைக்கிள் ஓட்டவே தெரியாதே! எப்படி சைக்கிளில் ஸ்கூலுக்குப் போவாய்? முதலில் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள். பிறகு பார்க்கலாம்," என்றாள்.

குமாருக்கு அப்போதுதான் நினைவிற்கு வந்தது தனக்கு சைக்கிள் ஓட்டத் தெரியாதென்று. எப்படியாவது அடுத்த மாதம் பிறந்த நாள் வருவதற்குள் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டுவிட வேண்டும்என்றுமுடிவு செய்தான்.

ரமேஷ் அந்தத் தெருவில்தான் இருந்தான். குமார் அவனிடம், "எனக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுடா," என்றான்.

"என்னடா திடீரென்று சைக்கிள் ஆசை?" என்றான் ரமேஷ். குமார் விவரத்தைக் கூறியவுடன், "அப்படியானால் தினம் மாலையில் இங்குவா. கற்றுக் கொள்ளலாம். அது ஒன்றும் பெரியவித்தையல்ல," என்று உற்சாகமூட்டினான், ரமேஷ்.

அன்று மாலையே குமார் தனது பயிற்சியைத் தொடங்கினான். விவரம்தெரிந்து கொண்ட முத்துவும் ரமேஷின் வீட்டிற்கு வந்தான். இருவருமாக குமாருக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்கினர்.

குதித்துக் குதித்துப் பெடல் பாலன்ஸ் செய்ய ஆரம்பித்த குமார், இரண்டு நாட்களுக்குப்பிறகுகுரங்குப் பெடல்செய்யக்கற்றுக்கொண்டான். நடுவில் இரண்டு முறை கீழே விழுந்து சிராய்த்துக் கொண்டான். சரியாகப் பத்து நாட்களில் நன்கு சைக்கிள்

ஓட்டக் கற்றுக் கொண்டு விட்டான்! ஏன்! பின்னால் ரமேஷை உட்கார வைத்து ஓட்டக் கூடத் தெரிந்து கொண்டு விட்டான்!

பிறந்த நாளுக்கு நான்கு நாட்கள் தான் இருந்தன. குமார் அம்மாவிடம் உற்சாகமாக, ''அம்மா, நான் நன்றாக சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டு விட்டேன்,'' என்றான்.

''அடே! அதற்குள்ளாகவா?'' என்றாள் அம்மா.

''ஆமாம், அம்மா! இப்போது எனக்கு சைக்கிள் வாங்கிக் கொடுப்பாய் அல்லவா?'' என்றான் குமார்.

அம்மாவின் முகம் சுருங்கிற்று. ''அப்பாவைக் கேட்டுப் பார்க்கிறேன்,'' என்றாள். குமாருக்கு எதையும் அப்பாவிடம் நேரில் கேட்கப் பயம்.

அப்பா, அம்மா இருவருக்குமே பிள்ளைமேல் பாசம் உண்டு. அப்பாவிடம் அம்மா இது விஷயத்தைச் சென்னாள். அப்பாவிற்கும், பிள்ளைக்கு சைக்கிள் வாங்கித்தர ஆசைதான். ஆனால், அவ்வளவு பணத்திற்கு எங்கே போவார்? மாதா மாதம் வீட்டுச் செலவுகளுக்கே அவருடைய சம்பளம் போதவில்லை.

''ஒரு பழைய சைக்கிளாவது வாங்கிக் கொடுக்க முடியாதா?'' என்றாள் அம்மா.

''அது கூட முந்நூறு ரூபாயாகுமே! எப்படிப் புரட்டுவது?'' என்றார் அப்பா.

''நம்மால் அதெல்லாம் வாங்க முடியாதுடா, கண்ணா! அப்பாவிற்கு ரொம்ப சிரமம்'' என்று அம்மா கூறியவுடன் குமாரின் உற்சாகம் வெடித்த பலூன் போல் சுருங்கியது. தான் சைக்கிள் ஓட்டப் பழகியது அனாவசியம் என்று தோன்றியது.

பிறந்தநாள் என்னவோ வந்தது. எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, புத்தாடை உடுத்திக் கொண்டான். அம்மா அவனுக்காக அன்று பாயசம் வைத்திருந்தாள். சாப்பிட்டுவிட்டு வழக்கம் போல் பள்ளிக்கு நடக்க ஆரம்பித்தான்.

நெடுஞ்சாலையின் ஓரத்தில் நடந்து கொண்டிருந்தான் குமார். எதிரில் ஒரு சிறுவன் புத்தம் புதிய சைக்கிளில் வேகமாக வந்து கொண்டிருந்தான். அப்போது பார்த்து ஒரு நாய் குறுக்கே ஓடியது. பெடல் செய்வதை நிறுத்திவிட்டு பிரேக்கைப் பிடித்தான். சைக்கிள் சாய்ந்து சிறுவன் கீழே விழ, அவன்மேல் சைக்கிள் விழுந்தது.

குமார் சிறுவனிடம் ஓடி, சைக்கிளை நிமிர்த்தி ஸ்டாண்டு போட்டான். சிறுவனின் காலில் நல்ல அடி. அவனால் எழுந்திருக்க முடியவில்லை. அவனை மெதுவாக உட்கார வைத்தான் குமார்.

''என்னால் சைக்கிள் விட முடியாது. என்னை என் வீட்டில் கொண்டு போய் விடுகிறாயா?'' என்று குமாரைக் கேட்டான் சிறுவன் பாபு.

தான் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டது எவ்வளவு நல்லதாயிற்று என்று எண்ணியவாறு, பாபுவை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு ஓட்டிச் சென்றான் குமார். பாபுவின் அப்பா, அம்மா இருவரும் டாக்டராதலால் உடனே மருந்து போட்டுக் கட்டிப் படுக்க வைத்தனர். குமாருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, அவனுக்கு ஒரு



"பரீட்சையில வரக்கூடிய முக்கியமான 20 கேள்விகளை எழுதி கொடுத்திருக்கேன், இதை நல்லாப் படிச்சுவை..."

"இதிலே கண்டிப்பா வரக்கூடிய கேள்விகள் எத்தனை சார்?"

"ஐந்து..."

"அப்ப அந்த ஐந்து எதுன்னு சொல்லுங்க, அந்த மட்டும் படிச்சு வைக்கறேன் சார்!"

—குமார்



கிளாஸ் ஹார்லிக்ஸ் கொடுத்தனர்.

''அப்பா! குமாருக்குப் பள்ளிக்கு நேரமாகிவிட்டது. அவனை என் சைக்கிளில் அனுப்பி வையுங்கள்'' என்றான் பாபு.

''ஓ... தாராளமாகச் செல்லட்டும். மாலையில் திரும்பக் கொண்டு வரலாம்,'' என்றார் பாபுவின் தந்தை. சைக்கிளை ஓட்டிக் கொண்டு நேரத்தில் பள்ளிக்குச் சென்றான் குமார்.

பள்ளி முடிந்ததும் சைக்கிளில் பாபுவின் வீட்டிற்குச் சென்று பார்த்தான்.

''கால்வலி எப்படி இருக்கு, பாபு?'' என்றான் குமார். ''வலி குறைந்திருக்கிறது. நாளை சரியாகி விடும்,'' என்றான் பாபு.

அப்போது அங்கு வந்த பாபுவின் அம்மா, ''நாளை சரியாகாது. இன்னும் இரண்டு நாட்களாகும். அது வரை படுக்கையில்தான் இருக்க வேண்டும்! நல்லவேளை; பிறந்த நாள் வருவதற்குள் சரியாகிவிடும்,'' என்றார்.

''எப்போது மாமி பாபுவின் பிறந்த நாள்?'' என்றான் குமார்.

''வரும் வெள்ளிக்கிழமை. நீயும் அன்று கண்டிப்பாக வரவேண்டும்,'' என்றாள், பாபுவின் தாயார்.

''நான் எழுந்து பள்ளிக்குச் செல்லும் வரை சைக்கிள் குமாரிடமே இருக்கட்டுமே,'' என்றான் பாபு.

''இங்கு சும்மாதான் இருக்கும். அவன் உபயோகிக்கட்டும்,'' என்றார், பாபுவின் தந்தை.

சைக்கிளில் வீடு திரும்பினான் குமார். நடந்தவற்றைக் கேட்டு அவனது பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஒவ்வொரு நாள் மாலையும் பாபுவின் வீட்டிற்குச் சென்று பார்த்து வருவான் குமார். சைக்கிள் சவாரி மிகவும் குஷியாக இருந்தது. பாபுவின் பிறந்த நாளுக்கு ரூபாய் கொடுத்துப் பரிசுப் பொருள் எதுவும் அவனால் வாங்க முடியாது. ஆகையால், தன் கையால் அழகிய வாழ்த்து மடல் ஒன்றைத் தயாரித்தான்.

வெள்ளிக்கிழமை வந்தது. மாலையில் பள்ளி விட்டு வந்ததும் முகம் கழுவி டிரஸ் பண்ணிக் கொண்டு, வாழ்த்து மடலையும் எடுத்துக் கொண்டு சைக்கிளில் புறப்பட்டான்

"அம்மா! இன்றுடன் ஓசி சைக்கிளுக்குடாடா! சைக்கிள் சவாரி முடிந்து விடும்," என்று கூறிச் சிரித்தான்.

பாபுவின் வீட்டில் அவனது மாமா, மாமி அவர்களது குழந்தைகள் வந்திருந்தனர். வேறு விருந்தினர் யாரும் இல்லை. சரியாக ஏழு மணிக்கு பாபு புத்தாடை அணிந்து கேக் வெட்டினான். "ஹாப்பி பர்த்டே" பாட்டில் குமாரும் கலந்து கொண்டான்.

மாமா மாமிக்கு குமாரை அறிமுகப் படுத்தினான் பாபு. மாமாவும், மாமியும் பாபுவிற்குப் புதிய சைக்கிள் பிரசண்ட் பண்ணினார்கள். பாபுவின் தந்தை ஒரு காமிரா வழங்கினார். பாபுவின் தாய் கிரிக்கெட் பாட் வழங்கினார். கடைசியாக, குமார் தன் வாழ்த்து அட்டையைக் கூச்சத்துடன் பாபுவிடம் கொடுத்தான். ஆனால், அது உண்மையில் மிக அழகாக இருந்தது. எல்லோரும் வாங்கிப் பார்த்து அவனது கைத்திறமையைப் புகழ்ந்தனர்.

குமார் புன்னகையோடு அவர்களுக்கு நன்றி கூறினான். "உன் பிறந்த நாள் எப்போது குமார்?" என்றார் பாபுவின் தந்தை.

"நான் முதன் முதலாக இங்கு வந்த அன்றுதான்," என்றான் குமார்.


"அடடே! என்ன பொருத்தம்?" என்றார் பாபுவின் தாய்.

குமாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. இருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

"பாவம்! அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவனிடம் விஷயத்தைக் கூறுங்கள்," என்றாள் பாபுவின் தாயார்.

"உன் பிறந்தநாள் அன்று ஓட்டத் தொடங்கிய சைக்கிள் இனிமேல் உன்னுடையது. அது உனக்கு எங்களுடைய பிறந்த நாள் பரிசு! பாபுவுக்குத் தான், அவன் மாமாவும் மாமியும் புதிய சைக்கிளை இன்று கொடுத்திருக்கிறார்களே!' உன் பிறந்த நாள் முதல் உன்னிடமே அது இருப்பது எவ்வளவு பொருத்தம் பார்த்தாயா?" என்றார் பாபுவின் தந்தை.

குமாருக்கு ஆச்சரியத்திலும் மகிழ்ச்சியிலும் பேச முடியவில்லை. "நன்றி, டாக்டர், நன்றி மாமி! நன்றி, பாபு!" என்றான். பாபுவின் வீட்டில் விருந்துண்டபின் நன்றி கூறிவிட்டுச் சைக்கிளில் வீடு திரும்பும் பொழுது குமாருக்கு வானத்தில் பறப்பதுபோல் தோன்றியது.



மாமா போட்ட புதிர்

–இரா.வசந்தராசன்

அந்தக் கடிதம் அப்படியொரு மகிழ்ச்சியான செய்தியைத் தாங்கி வரும் என்று ரவியும் முரளியும் நினைக்கவே இல்லை.

''நீ சொல்றது நிஜமாம்மா?'' நம்பிக்கை இல்லாமல் மாறி மாறி அம்மாவைக் கேட்டனர்.

''உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் இதைப் படிச்சுப் பாருங்களேன்,'' என்று சொல்லி அந்தக் கடிதத்தை அவர்களிடம் கொடுத்தாள் சாவித்திரி.

அம்மா நீட்டிய கடிதத்தை அவசர அவசரமாகக் கண்களால் மேய்ந்தனர். அவர்கள் முகங்களில் மகிழ்ச்சி மின்னல்கள் பளிச்சிட்டன.

''மாமா இந்த ஞாயிற்றுக் கிழமை வாரேன்னு எழுதியிருக்காரே! அவரை இன்னும் சீக்கிரம் வரச் சொல்லித் தபால் எழுதம்மா,'' என்றான் ரவி.

''ஆமாம்மா.'' இது முரளி.

சாவித்திரி சிரித்துக் கொண்டாள். தன்னுடைய மகன்கள் ஏன் இப்படிப் பறக்கிறார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

''இன்னும் ஐந்து நாள்தானே இருக்கு? அது வரையிலும் பொறுத்துக்குங்க.''


''இந்தத் தடவை மாமா சொல்ற புதிருக்கு விடையைச் சொல்லி நான்தான் அவர்கிட்டே பரிசு வாங்கப் போறேன்.''

''இல்லை. நான்தான்.''

மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருக்கும் மகன்களை மகிழ்ச்சியோடு பார்த்தாள் சாவித்திரி.

ஞாயிற்றுக் கிழமை.

சூட்கேஸோடு வீட்டுக்குள் நுழைந்த மோகனை அனைவரும் அமர்க்களமாக வரவேற்றனர்.



"சௌக்கியமா அக்கா? அத்தான் எங்கே போயிருக்கிறாரு? ஆளையே காணோம்."

"ஆபீஸ் இன்ஸ்பெக்ஷன் விஷயமாய் பெங்களூர் போயிருக்கார். அடுத்த வாரம்தான் வருவார்", என்றாள் சாவித்திரி.

"இந்தத் தடவை என்ன கணக்கு மாமா சொல்லப் போறீங்க? இப்பவே சொல்லிடுங்க. நாங்க விடையை யோசனை பண்ண ஆரம்பிக்கிறோம்."

"அதெல்லாம் மாமா டிபன் சாப்பிட்ட பின்னாலேதான். அதுவரைக்கும் நீங்க இரண்டு பேரும் கம்முனு இருங்க. நீ வாடா மோகன், டிபன் சாப்பிட"

மோகன் சிரித்துக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்தான்.

அரை மணி நேரம் ஓடி விட்டது.

பலமான ஏப்பத்தோடு வெளியே வந்த மோகன், மோடாவில் உட்கார்ந்தான். ரவியும் முரளியும் அவனைச் சுற்றி உட்கார்ந்து கொண்டனர்.

"மாமா, போன தடவை நீங்க வந்தப்போ சொன்ன புதிருக்குச் சரியான விடையைச் சொல்லி ரவி ஹீரோ பேனாவைப் பரிசா வாங்கிட்டான். இந்தத் தடவை நீங்க தர்ற பரிசை வாங்க நான் முயற்சி பண்ணப் போறேன்" என்றான் முரளி.

"இந்தத் தடவையும் நான்தான் பரிசை வாங்கப் போறேன், பாரேன்", என்றான் ரவி.

"சரி, சரி. நீங்க சண்டை போடாதீங்க. நான் சொல்றதைக் கவனமாக் கேளுங்க. விடையை நீங்க மத்தியானம் ஒரு மணிக்குள்ளே சொன்னீங்கன்னா போதும்."

ரவியும் முரளியும் உன்னிப்பாயினர்.

"ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனுக்கு ஒரு புத்திசாலித்தனமான வேலைக்காரன் தேவைப்பட்டது. வேலைக்கு வந்த எத்தனையோ பேரை அந்தப் பணக்காரன் சோதிச்சுப் பார்த்தான். யாருமே புத்திசாலியா இருக்கிற மாதிரி தெரியல்லை. கடைசியா ஒருத்தன் இந்த வேலைக்கு வந்தான். அவன் இந்தப் பணக்காரன் எதிர்பார்த்த மாதிரியே ரொம்பப் புத்திசாலியா இருந்தான்."

"மேலே சொல்லுங்க மாமா," என்றான் முரளி ஆவலுடன்.

"உன்னை நான் என் வேலைக்காரனா வெச்சுக்கிறேன். உனக்கு என்ன மாதச் சம்பளம் வேணும்னு கேளுன்னு அந்தப் பணக்காரன் அவனைக் கேட்டான். அதுக்கு அந்த வேலைக்காரன், "எனக்கு ஒரு நாளைக்கு ஒரு பவுன் சம்பளமாகத் தரணும். இந்த மாதம் முப்பது நாட்களுக்கு ஆகக் கூடிய மொத்தச் சம்பளம் முப்பது பவுனையும் இப்பவே என்கிட்டே மொத்தமாகக் கொடுத்திடணும்" என்றான்.

அதுக்கு அந்தப் பணக்காரன், "ஒரு வேளை, ஒரு வாரத்திலே உன் மேலே எனக்குத் திருப்தி இல்லாமல் போயிட்டா என்ன பண்றது?" என்று கேட்டான்.

"எத்தனை நாள் நான் வேலை செய்தேனோ அத்தனை நாட்களுக்கு மட்டும் ஒரு நாளைக்கு ஒரு பவுன் வீதம் எடுத்துக்கினு மீதிப் பவுனை உங்ககிட்டேயே திருப்பிக் கொடுத்திடறேன்" என்றான் அந்த வேலைக்காரன். பணக்காரனும் இதுக்கு ஒத்துக்கினு முப்பது பவுனை வேலைக்காரன்கிட்ட கொடுத்திட்டான்.




முதலில் இருப்பவர்

"கல்யாணம், கட்சிக் கூட்டம் போன்ற எது நடந்தாலும், பெரும்பாலும் என் அப்பா அங்கே முதலிலே இருப்பார்."

"ஓ! உன் அப்பா அவ்வளவு முக்கிய பிரமுகரா?"

"இல்லையில்லை. அவர் ஒரு போட்டோகிராபர்."

— குத்தாலம் ராஜா.



அவர் மோசம்

"அந்தப் பத்திரிகை ஆசிரியர் ரொம்ப மோசம்."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"என்னுடைய கதைகளை நூறாவது தடவையாத் திருப்பி அனுப்பியதோடல்லாமல், அதற்கு வாழ்த்துமடல் வேறே அனுப்பியிருக்கார்."

— குத்தாலம் ராஜா.

மாமா இதைச் சொன்னதும், "இதிலே என்ன மாமா புதிர் இருக்கு?" என்றான் ரவி.

"புதிரே இப்பத்தான் ஆரம்பமாகுது. நான் சொல்றதைக் கவனமாக் கேளுங்க. மறுநாள் வேலைக்கு வந்து சேர்ந்தான் அந்த வேலைக்காரன். அன்று மாதத்தின் முதல் தேதி.

வேலைக்கு வந்த அந்த வேலைக்காரன் அந்த முப்பது பவுனை உருக்கி வெவ்வேறு அளவிலே ஐந்து மோதிரம் பண்ணி, ஐந்து விரல்களிலே போட்டிருந்தான். அதைப் பார்த்த பணக்காரனுக்கு ஏகப்பட்ட கோபம் வந்துடிச்சு.

"ஐந்து மோதிரமாப் பண்ணிப் போட்டுக்கினு இருக்கியே, உன் வேலை பன்னிரண்டாவது நாளோ அல்லது வேறு ஏதாவது ஒரு நாளோ எனக்குப் பிடிக்காமல் போயிட்டா என்ன பண்றது? எனக்குச் சேர வேண்டிய பவுனை மோதிரத்தை உடைச்சா கொடுப்பாய்" என்று கோபமாய்க் கேட்டான்.

"பணக்காரன் கேட்கறது நியாயம் தானே?" என்று சொல்லிக் கொண்டே, தமக்கு எதிரில் வந்து உட்கார்ந்தாள் சாவித்திரி.

"அக்கா, நீயுமா இவ்வளவு நேரம் இதைக் கேட்டுக்கிட்டு இருந்தே?" என்று ஆச்சர்யத்தோடு கேட்டான் மோகன்.

"புதிர் நல்லா இருந்தது. அதனாலேதான். சரி, நீ மேலே சொல்லு."

பணக்காரன் சொன்னதைக் கேட்ட வேலைக்காரன் "நீங்க கோபப்படாதீங்க. இந்த மோதிரங்களை உடைக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்த முப்பது நாளிலே, உங்களுக்கு எந்த நாளிலே என்னைப் பிடிக்காமல் போயிட்டாலும் சரி, எனக்குச் சேர வேண்டியதை மோதிரங்களை உடைக்காமல் எடுத்துக்குவேன். உங்களுக்குச் சேர வேண்டிய பவுன்களையும் மோதிரங்களை உடைக்காமலே கொடுத்திட முடியும்" என்று சொன்னான். அப்படின்னா அந்த வேலைக்காரன் ஒவ்வொரு விரலிலும் எத்தனை பவுன் மோதிரம் போட்டுக் கொண்டு இருந்தான்? மொத்தம் ஐந்து விரல்களிலும் அவன் மோதிரம் போட்டிருந்தான் என்பதைக் கவனத்தில வச்சுக்கங்க."

ரவியும் முரளியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"யார் சரியான விடையைச் சொல்றீங்களோ, அவங்களுக்கு இந்த மணி பர்ஸ் பரிசு," என்றான் மோகன்.

"மாமா, எங்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்க. பேப்பரிலே போட்டுப் பார்த்துச் சொல்லிடறோம்," என்றனர் ரவியும் முரளியும் கோரஸாக.

"தாராளமாச் செய்யுங்க. நீங்க ஒரு மணிக்கு விடையைச் சொன்னாப் போதும்."

"இந்தப் புதிருக்கு பெரியவங்களாலேயே பதில் சொல்ல முடியாது போல இருக்கே! அப்படி இருக்கிறப்போ இவங்க எங்கே சொல்லப் போறாங்க?" என்றாள் சாவித்திரி.

"அப்படிச் சொல்லாதே அக்கா. முயற்சி இருந்தால் முடியாதது ஒண்ணுமே இல்லை," என்ற முரளியின் குரலில் ஏகப்பட்ட தன்னம்பிக்கை பளிச்சிட்டது.

ரவியும் முரளியும் பேப்பர்களை எடுத்துக் கொண்டு எதிரே உட்கார்ந்தனர்.

நேரம் ஓட ஆரம்பித்தது. சாவித்திரி சமையல் வேலையைக் கவனிக்கச் சமையலறைக்குள் நுழைந்தாள்.

மோகன் மேஜை மேல் இருந்த வாரப் பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தான்.

மணி ஒன்று.

''விடையைக் கண்டுபிடிச்சிட்டீங்களா?''

''நான் எவ்வளவோ போட்டுப் பார்த்துட்டேன் மாமா. எனக்கு விடை தெரியல்லே'' என்றான் ரவி களைப்புடன்.

''முரளி, உனக்காவது தெரியுதா?''

''இது வரைக்கும் கண்டுபிடிக்க முடியல்லே மாமா. ஆனால், எனக்கு இன்னும் அரை மணி நேரம் கொடுங்க. முயற்சி பண்ணி எப்படியும் கண்டு பிடிச்சிடுறேன்.''

''முடிஞ்ச வரைக்கும் முயற்சி பண்ணு.'' என்ற மோகன் இன்னொரு வாரப் பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தான்.

மணி ஒன்றரை.

ஓயாமல் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்த முரளியின் முகம் திடீரென்று பிரகாசமானது.

''விடையைக் கண்டுபிடிச்சிட்டேன் மாமா. அவன் போட்டிருந்தது ஒரு பவுன் மோதிரம், இரண்டு பவுன் மோதிரம், நான்கு பவுன் மோதிரம், எட்டுப் பவுன் மோதிரம், பதினைஞ்சு பவுன் மோதிரம்,'' என்றான் படபடப்புடன்.

''வெரிகுட். நீ சொன்னது கரெக்டான விடை. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் அப்படிங்கிறதுக்கு நீதான் சரியான உதாரணம்'', என்ற மோகன் அந்த அழகான பர்ஸை முரளியிடம் கொடுத்தான்.

சாவித்திரியும் ரவியும் மகிழ்ச்சியுடன் கை தட்டினர். முரளியின் இதயம் இன்பத்தில் நனைய ஆரம்பித்தது!


அஞ்சல் தலைகளில் அண்ணல் காந்தி






பாதாள கங்கையில் பெற்ற வாள்

கதை: ஆனந்தி
படம்: விஜு



மனைவியை அவள் தந்தையுடனேயே இருக்கச் செய்துவிட்டுக் காலநேமி...
கடுந்தவத்துக்கு இரங்கி லக்ஷ்மிதேவி பிரத்யட்சமானாள்...
உனக்குப் பிறக்கும் மகன் அரசாள்வான். ஆனால் உன் பேராசை காரணமாகப் பல இன்னல்களும் நேரும்!
சில காலம் சென்று காலநேமி தம்பதிக்கு ஒரு குழந்தை பிறந்தது...
ஆண் குழந்தை!
ஸ்ரீயின் அருளால் பிறந்தான்; ஸ்ரீதத்தன் என அழைப்போம்.
ஸ்ரீதத்தனை ஒரு சிறந்த குருவிடம் ஒப்படைத்தான் காலநேமி.
அவனோடு மாளவதேச இளவரசன் விக்ரமசக்தியும் பயின்றான்....



கல்வியிலும் போர்க் கலையிலும் சிறந்து விளங்கிய நண்பர் களைப் பார்த்து மற்ற சீடர்களுக்குப் பொறாமை...
இவர்களை எப்படியாவது பிரிக்க வேண்டும்!
ஒரு நாள்...
இன்று விளையாட்டுக் களுக்குத் தலைவன் யார்?
வேறு யார்? பலசாலியும் நடுநிலையாளனுமான ஸ்ரீதத்தன்தான்!
அன்றிரவு...
இளவரசே! நீங்கள் இருக்கும்போது ஸ்ரீதத்தன் தலைமை தாங்குவதா?
என்ன தவறு? எல்லோரும் அவனைத்தான் தேர்ந் தெடுத்தார்கள்.
ஆனால் அவன் மரியாதைக்காவது இளவரசர்தான் தலைவனாக இருக்க வேண்டும் என்று சொல்லி யிருக்கலாமே...?
இளவரசன் விக்ரமசக்தியின் மனம் கலங்கியது...மறுநாள்...
ஸ்ரீதத்தா! என்னுடன் மல்யுத்தம் செய்!


விக்கிரமசக்தி தோற்றான்.. துரோகம் அதிகரித்தது...
இரு, இரு! உன்னை ஜெயிக்காமல் விடமாட்டேன்!
ஒரு நாள் ஸ்ரீதத்தன் நண்பர்களுடன் கங்கையில் நீந்திக் கொண்டிருந்தான்....
அப்போது... ஸ்ரீதத்தா! அதோ, யாரோ வெள்ளத்தில் அடித்துச் செல்லப் படுகிறார்கள்!
மாவீரனான ஸ்ரீதத்தன் உடனே நீரில் மூழ்கித் தேடினான்..
கங்கையின் அடிவாரத்தில்.....
ஏதோ குகை போலத் தெரிகிறதே!




ஸ்ரீதத்தன் அந்தக்குகைக்குள் நுழைந்து நீந்திச் சென்றான்...
அட! என்ன அழகான நந்தவனம்!
அற்புதமான ஒரு கோயில்!
கோயிலிலிருந்து பூஜை முடிந்து ஒரு பெண் வெளிப்பட்டாள்...
சகோதரி! நான் எங்கே இருக்கிறேன்?
வெள்ளத்தில் அடித்துப்போகப் பட்டதுபோல், நீ நடித்து என்னைக் கவர்ந்து இழுத்து வந்திருக்கிறாய்...
இது பாதாளலோகம். நான் மகாபலி சக்கரவர்த்தியின் பேத்தி, வித்வத்பிரபா. பகவான் விஷ்ணுவிடம் தோற்றபின், என் தந்தை இங்கு சிறைப் பட்டிருக்கிறார்.
ஆமாம்.



எதற்காக?
அந்தச் சிங்கம் ஒரு யக்ஷன். மனிதன் ஒருவன் அதனை ஜெயிக்கும்போது அதற்குச் சாப விமோசனம் கிடைத்து விடும்.
என் தந்தையைச் சிறை வைத்திருக்கும் கோட்டை வாசலில் ஒரு சிங்கம் காவலிருக்கிறது.
வித்வத் பிரபாவின் தந்தைக்கு விடுதலை தேடித்தர, சிங்கத்தோடு சண்டை போட்டான் ஸ்ரீதத்தன்.
சிங்கத்தை வென்றான். யக்ஷன் வெளிப்பட்டான்.
யக்ஷன் மறைந்தான்.
நன்றியுடன் இந்த வாளை அளிக்கிறேன். ஸ்ரீதத்தனுக்குக் கொடும்.
வித்வத்பிரபா! உன்னால்தான் நான் இந்த வாளை அடைந்தேன்.





இந்த வாளின் பெயர் மிருகாங்கம். மகா சக்தி வாய்ந்தது. பூஜை செய்து பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
இதோ இந்த மோதிரத்தையும் பரிசளிக்கிறேன். இதை அணிந்தால் எந்த விஷமும் தீண்டாது!
சிலகாலம் சென்று வித்வத் பிரபானிடம் விடை பெற்று மாளவ தேசம் திரும்பினான் ஸ்ரீதத்தன். நண்பன் காசியபனைச் சந்தித்தான்.
இத்தனை ஆண்டுகளாக எங்கே போனாய்?
ஸ்ரீதத்தன் நடந்ததைக் கூறி...
சரி, இங்கு என்ன நடந்தது, நீ சொல்லு...
மாளவ தேசத்து மன்னன் இறந்துவிட, இளவரசன் விக்கிரம சக்தி அரசனானான்....
...உன் தந்தை விக்கிரம சக்தியிடம் வந்து...
அரசே! என் மகன், உங்கள் நண்பன் எங்கே!
மகனை ஒளியச் செய்து விட்டு இதென்ன ஏமாற்று..?


இவரைச் சிறையில் தள்ளுங்கள்!
காச்யபன் நடந்ததைக் கூறி முடித்தான்.
ஏற்கனவே உன்னைப் பிரிந்து நிலைகுலைந்திருந்த தந்தை, இந்த அவமானம் தாங்காமல் சிறையில் இறந்து விட்டார்...
விக்கிரமனைப் பழி வாங்குவேன். இப்போதே புறப்படுகிறேன்!
பொறு! தனி ஒருவனாக மன்னனை எதிர்க்க முடியுமா?
உஜ்ஜயினிக்குச் சென்று நம் நண்பன் பாகுசாலியைப் பார்த்து யோசனை கேட்போம்.
ஸ்ரீதத்தனும் காச்யபனும் உஜ்ஜயினி மாநகரை அடைந்தார்கள்.



பாகுசாலி வீட்டை அடைந்தார்கள்....
ஸ்ரீதத்தா! வா! வா! எங்கே போயிருந்தாய்? என்ன ஆயிற்று உனக்கு? ... காச்யபா, வா!
ஸ்ரீதத்தன் நடந்ததை யெல்லாம் கூற...
அதிசயமான கதை. இந்த வாள் உன்னிடம் இருப்பதால்தான் நம்ப முடிகிறது...
பாகுசாலி! விக்ரமனைப் பழிவாங்க வேண்டும். ... எனக்கு உதவுவாயா?
இங்கேயே பொறுமையாகத் தங்கியிரு! நல்ல காலம் வரும்.
ஒரு நாள்...
பாகுசாலி, யார் அந்த அழகி?
அரசகுமாரி! வனபோஜனத்துக்குத் தோழிகளுடன் போகிறாள்!
அன்று மாலை...
அரசகுமாரி மிருகாவதியைப் பாம்பு கடித்து விட்டதால் மாந்த்ரீகர்கள் அரண்மனைக்கு அழைக்கப் படுகிறார்கள்.


ஸ்ரீதத்தன் அரண்மனையை அடைந்து...
கவலைப்படாதீர்கள்; விஷத்தை இறக்க என்னால் முடியும்!
இளவரசியின் கரத்தைப் பற்றியவாறு ஸ்ரீதத்தன் ஏதோ மந்திரங்களை முணுமுணுத்தான்...
வித்வத் பிரபா தந்த மோதிரத்தை யாருக்கும் தெரியாமல் அணிவித்து விடுகிறேன்...
இளவரசி தூங்கி எழுந்தது போல் கண் விழித்தாள்...
ஆ! என்ன அதிசயம்!
ஸ்ரீதத்தனின் வரலாற்றை அறிந்த உஜ்ஜயினி மன்னர்...
உனக்கு மிருகாவதியை மணம் செய்து கொடுக்கிறேன். ஏற்றுக் கொள்!
பாகுசாலியும் ஸ்ரீதத்தனும் படை திரட்ட அண்டை நாடுகளுக்குச் சென்றனர். மிருகாவதியும் உடன் சென்றாள்.


காட்டு வழியில் கொள்ளையர் தாக்கினர்...
அடி!
ஐயோ!
விடாதே!
ஸ்ரீதத்தன், தப்பி ஓடிய சில கொள்ளையரைத் துரத்திச் சென்றான்.
பாகுசாலி! நீ மிருகாவதிக்குத் துணை இரு!
ஸ்ரீதத்தன் வீரர்களுடன் சென்றதும், அதுவரை ஒளிந்திருந்த கொள்ளையர் கூட்டத்தின் இன்னொரு பிரிவினர் தாக்கினர்...
ஆ! கொள்ளையரின் வஞ்சனையில் ஏமாந்தோம்...
பாகுசாலி வீரமுடன் போரிட்டான்... ஆனால்...
...பலபேரைச் சமாளிக்க முடியாமல் பலத்த காயங்களுடன் விழுந்தான்...
மிருகாவதி!
என் கணவருக்குத் தகவல் சொல்லுங்கள்!




ஸ்ரீதத்தன் திரும்பியதும்...
நண்பா! என்ன நடந்தது?
உன்னைக் காணத்தான் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தேன்...
பாதுசாலி நடந்ததைக் கூறி...
உன் மனைவியைக் கொள்ளையர் தலைவன் கடத்திச் சென்று விட்டான். கிழக்குப் பக்கம் போ....
நண்பனை அடக்கம் செய்து விட்டு ஸ்ரீதத்தன்...
காட்டிலும் மேட்டிலும் எவ்வளவு அலைந்தும் பயனில்லையே...
ஓரிடத்தில் ஏதோ சத்தம் கேட்க, மரமேறிப் பார்க்க ஸ்ரீதத்தன் தீர்மானித்து......
மரமேறிப் பார்த்த போது...
வாளை அடிமரத்தில் செருகி, பிடியைப் படியாக்கி... இந்தக் கிளையில் ஏறி....
அதோ, ஒரு வேடர் சேரி!



ஸ்ரீதத்தன் மரத்தின் மேல் இருந்தபோது... ஒரு வேடன்....
அடே! அது என் வாள்! என் குதிரை!
இப்போ என்னுடையவை!
ஸ்ரீதத்தன் வேடர் சேரியை அடைந்தான்...
காளிமாதாவுக்குப் பலி தானாகவே வந்து விட்டது! ஹஹ்ஹஹா!
வேடர்கள், ஸ்ரீதத்தனைச் சிறையில் அடைத்தார்கள்...
வேடர்குல இளவரசி பார்த்துக் கொண்டிருந்தாள்...
பாவம்! இந்த வீரன் எப்படி, எதற்காக இங்கு வந்து மாட்டிக்கொண்டார்?
இளவரசி இரவில் ஸ்ரீதத்தனைச் சந்தித்தாள்...
பசிக்குமே, சாப்பிடுங்கள்...




ஸ்ரீதத்தன் நடந்ததைக் கூறினான்...
மிருகாவதியைத் தேடி வந்தேன்... வாளையும் இழந்தேன். குதிரையும் போச்சு...
இளவரசி ஸ்ரீதத்தனை விடுவித்து அழைத்துப் போனாள்...
வாளும் குதிரையும் இருக்குமிடம் எனக்குத் தெரியும்...
காளி கோயிலை அடைந்தனர்..
இதோ வாள்; அங்கே குதிரை; இனி உங்கள் சாமர்த்தியம்!
பெண்ணே! உன் அன்பை என்றும் மறவேன். நன்றி! நன்றி!
பல நாட்கள் அலைந்து பலரை விசாரித்த ஸ்ரீதத்தன்... கடைசியில்..
மிருகாவதியா...? உன் பெயர்?
ஸ்ரீதத்தன்...



ஸ்ரீதத்தனை மேலும் விசாரித்த அந்தணர்....
கொள்ளையர் தலைவன் மிருகாவதியின் குதிரையையும் நகைகளையும் பிடுங்கிக் கொண்டு அநாதரவாய் விட்டு விட்டான். நான்தான் அவளுக்கு உதவி, மதுராபுரி முதன் மந்திரியின் ஆதரவில் ஒப்படைத்தேன்.
அந்தணருக்கு நன்றி கூறி மதுராபுரியை அடைந்து, முதன் மந்திரியைச் சந்தித்த ஸ்ரீதத்தன்....
சிற்றப்பா!
அட! ஸ்ரீதத்தனா! வா! வா!
நடந்ததையெல்லாம் அறிந்த விகதயன்...
என் தமையன் கால நேமியைக் கொன்ற விக்கிரமசக்தியைப் பழிவாங்க வேண்டும்...
எனக்கு அடைக்கலம் தந்தவர் உங்கள் சித்தப்பா என்பது எவ்வளவு அதிசயம்...!
மிருகாவதியுடன் மீண்டும் இணைந்து மகிழ்ந்தான் ஸ்ரீதத்தன்...
மந்திராலோசனையில் விகதயன்....
உஜ்ஜயினி மன்னரின் உதவியைக் கோரிப் பெறுகிறேன்...
நான் காட்டில் கண்ட வேடர்களும் பணம் கொடுத்தால் நம் படையில் சேர்வார்கள்!



மாளவ தேசத்தை நோக்கிப் பெரும் படை சென்றது...
செய்தி அறிந்து விக்கிரமசக்தி திகைத்தான்...
அடேயப்பா! அவ்வளவு பெரிய படையெடுப்பா! மாவீரன் ஸ்ரீதத்தனை நான் விரோதித்துக் கொண்டது முட்டாள்தனம்!
ஆயினும் வீரத்துடன் போர் புரிந்தான் விக்கிரமசக்தி...
போர்க்களத்தில் விக்கிரமசக்தி மடிந்தான்....
மாவீரனுக்குரிய மரியாதைகளுடன் மாளவ மன்னரை அடக்கம் செய்ய வேண்டும்!
விதுதயனின் ஆசிகளுடன் ஸ்ரீதத்தனும் மிருகாவதியும் மாளவ தேசத்தின் சிம்மாசனத்தை அலங்கரித்தார்கள்...
உங்கள் ஆட்சியில் தர்மம் ஓங்கட்டும்!



நான் ஓர் இராணுவ வீரரின் மகன்

டி. ஜானகி

கண்களை விழித்த சரவணன் தான் ஏதோ கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தான். மருந்து வாடை மூக்கைத் துளைத்தது. மெதுவாக எழ முயன்றான். யாரோ இருவர் பேசுவது தெளிவாகக் காதில் விழவே அவன் கவனம் பேச்சில் சென்றது.

''டாக்டர் ஐயா! என் சரவணனுக்கு ஆபத்து ஒண்ணுமில்லையே?'' அவன் அத்தை செவந்திதான் பதற்றத்தோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

''உயிருக்கு ஒண்ணும் பயமில்லேம்மா... ஆனால் காலிலே....'' டாக்டர் முடிக்கவில்லை.

''காலுக்கு என்ன டாக்டர்? அவன் காலை வெட்டி எடுத்துடுவீங்களா? வேண்டாம் டாக்டர்'' — அவள் குரலில் அழுகை கலந்திருந்தது.

''சொல்லி முடிக்கிறத்துக்குள்ளே ஏம்மா பதற்றப்படறீங்க? துப்பாக்கிக் குண்டு பட்டதிலே கால் சுண்டு விரல் தெறிச்சு விழுந்திருச்சு. அதைக் கஷ்டப் பட்டுக் கண்டுபிடிச்சு ஒட்டவச்சு தைச்சிருக்கேன். ஒட்டிக் கொள்ளும்னு தான் நினைக்கிறேன். அப்படி இல்லாட்டா செயற்கை விரல்தான் பொருத்த வேண்டும்.''

''சுண்டு விரல் போனால் போகட்டுங்க. அவன் பழையபடி எழுந்து நல்லா நடமாடுவானா டாக்டர்?''

''கட்டாயம். ஆனால், குறைந்தது ஒரு மாசமாவது ஆகும். இதைப் பத்தி அவனிடம் மூச்சுக்கூட விடாதீங்க. நான் போய் மற்ற பேஷண்டுகளைக் கவனிச்சுட்டு வரேன். சரவணன் கண் விழிச்சால் பாலோ, ஹார்லிக்ஸோ கொடுங்க.''

''சரிங்க டாக்டர்''

அப்போதுதான் தூக்கம் கலைந்த சவரணனின் காதுகளில் அத்தையும் டாக்டரும் பேசியது நன்றாக விழுந்தது.

கண்களைத் திறந்தான் மெதுவாக. மிக மெதுவாக. ஒரே எரிச்சல். வறட்சியினால் நாக்கு ஒத்துழைக்க மறுத்தது. மறுபடியும் கஷ்டப்பட்டு எழ முயன்றான். இடது காலில் பாறாங்கல்லை வைத்திருப்பது போன்ற வலியும் வேதனையும். அவ



தங்கமான டாக்டர்

"அந்த டாக்டர் ரொம்பத் தங்கமானவர்."

"எப்படி?"

"12 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு ஃபீஸ்லே பாதிதான் வாங்குவார். 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஃபீஸே வாங்க மாட்டார்."

— குத்தாலம் ராஜா.

னையும் அறியாது மெதுவாக முனக ஆரம்பித்தான்.

"அ....ம்....மா.... அம்....மா...."

சரவணனின் முனகலைக் கேட்டு அவன் அத்தை செவந்தி கட்டிலை நோக்கி விரைந்து வந்தாள்.

"நீ எப்ப கண் விழிப்பேன்னு துடிச்சுக்கிட்டிருந்தேண்டா. இந்தா.... இந்தப் பாலைக் குடி"

அத்தை இதமாகக் கூறியபடி ஒவ்வொரு வாயாகப் பாலை ஊற்றினாள்.

"அத்தே! நான் எங்கே இருக்கேன்?"

"ஆஸ்பத்திரியிலே கண்ணா"

"நாம வீட்டுக்குப் போகலை?"

"அப்புறம் விவரமாச் சொல்றேன். முதல்லே பாலை நிறையக் குடி"

பால் உள்ளே செல்லச் செல்ல மயக்கமும், களைப்பும் விடை பெற்றுக் கொண்டன. சோர்ந்திருந்த மூளை விழித்துக் கொண்டது. அவன் மனத்திரையில் முதல் நாள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாய்த் தெரிய ஆரம்பித்தன.

2

உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு வந்திருந்த சரவணனின் அத்தை, சேலத்திற்குக் கிளம்பும் போது தன்னோடு சரவணனையும் நான்கு நாட்கள் வைத்துக் கொண்டு அனுப்புவதாக அவன் அம்மாவிடம் கூறினாள். பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டிருந்ததால், அம்மா அனுமதி கொடுத்து விட்டாள். சரவணனும் சந்தோஷத்தோடு அத்தையுடன் கிளம்பி விட்டான். அப்போதுதான் புறப்பட்டுக் கொண்டிருந்த பஸ்ஸில் இருவரும் வேக வேகமாக ஏறினர்.

ஆண்கள் அமரும் பகுதியில் சரவணனும், பெண்கள் அமரும் பகுதியில் அத்தை செவந்தியும் அமர்ந்தனர்.

கார் சேலத்தை நெருங்க இன்னும் 20 கிலோ மீட்டர் இருந்தது. குளிர்ந்த காற்று இதமாக உடலை வருடி வெப்பத்தைத் தணித்துக் கொண்டிருந்தது. இருள் அரக்கன் தங்களைப் பிடிக்க வந்து விடுவானோ என்று அஞ்சிய பறவைக் கூட்டங்கள் வேகமாகத் தங்கள் இருப்பிடத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தன. இரு மருங்கிலும் உள்ள மரங்கள் சீக்கிரம் போங்கள் என்பது போல் தலையசைத்தன.

இயற்கை எழிலை ரசித்துக் கொண்டே வந்த சரவணனின் கவனம், காரின் உட்பகுதியில் விளக்குப் போட்டதும் கலைந்தது.

போதியும் போதாமலும் இருந்த விளக்கு வெளிச்சத்தில், பஸ்ஸிற்குள் பார்வையைச் செலுத்தினான் சரவணன். கடைசி சீட்டைத் தவிர எல்லா சீட்டுகளிலும் ஆட்கள் வசதியாக அமர்ந்திருந்தனர். ஒரு கல்யாணக் கும்பலே அதில் அமர்ந்திருந்தது. கொஞ்சம் வசதியான குடும்பம் போலும். பெண்கள் அனைவரும் கை, கழுத்துகளில் அணிந்திருந்த தங்க நகைகள் அந்த மங்கிய வெளிச்சத்திலும் துல்லியமாகப் பிரகாசித்தன.

முன் சீட்டில் இரண்டு வயதுப் பெண் குழந்தை. வட்ட முகம். சுருண்ட முடி. பார்க்க கொழு கொழுவென்று இருந்தது. காதில் ஜிமிக்கி. கழுத்தில் சங்கிலி. அருகில் அமர்ந்திருந்த அம்மாவிடம் ஏதோ பிடிவாதம் பிடித்தபடி பிஸ்கெட்டைத் தின்று கொண்டிருந்தது. அந்தக் குழந்தையைப் பார்த்ததும், அவனுக்குத் தன்



தங்கை அருணாவின் நினைவு வந்தது. இப்படித்தான் அருணாவும் ஏதாவது குறும்புத்தனம் செய்து கொண்டு அம்மாவிடம் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருப்பாள்.

பஸ் திடீரென்று குலுக்கலுடன் நின்றது. இரண்டு பேர் கை காட்டியபடி நின்று கொண்டிருந்தார்கள். ஒருவன் குறுந்தாடி வைத்திருந்தான். மற்றொருவன் கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தான். இருவரும் பஸ்ஸில் ஏறியதும் பஸ் மீண்டும் குலுக்கலுடன் கிளம்பியது.

சிறிது தூரம் சென்றதோ இல்லையோ பஸ் மீண்டும் பலத்த குலுக்கலுடன் நின்றது.

''யாரும் அசையாதீங்க! எல்லோரும் கைகளை மேலே உயர்த்துங்க. அண்ணாச்சி, நீ பொம்பளைகள் கிட்டே போய் 'அவங்க நகைகளை எல்லாம் வாங்கிப் பையிலே போட்டுக்க. அப்படியே கண்டக்டர் பணப் பையையும் வாங்கிக்க. சீக்கிரம். யாராவது சத்தம் கித்தம் போட்டீங்க இந்த துப்பாக்கிதான் உங்களுக்குப் பதில் சொல்லும்'' — டிரைவரின் முதுகில் துப்பாக்கியை அழுத்தியபடி கறுப்புக் கண்ணாடிக்காரன் சத்தமாகக் கத்தினான்.

அமைதி — அமைதி — அப்படி ஒரு பயங்கர அமைதி பஸ்ஸிற்குள். மூச்சுக்கூட பயந்த படியே வெளியே வந்து கொண்டிருந்தது.

சரவணனுக்குப் புரிந்து விட்டது, பஸ்ஸிற்குள் இரண்டு கொள்ளைக்காரர்கள் புகுந்து வழிப்பறி செய்கின்றனர் என்று.

உயிரற்ற பொருளாய்க் காணப்பட்டாலும் உயிரைக் குடிக்கும் தன்மையை உடைய அந்தத் துப்பாக்கியைப் பார்த்தபடி ஆடாது அசையாது அனைவரும் வீற்றிருந்தனர்.

குறுந்தாடி வைத்திருந்தவன் பெண்கள் பக்கம் வர.... ஏதோ மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டவர்கள் போன்று பெண்கள் அவன் நீட்டிய தோல் பையில் தங்கள் நகைகளை எல்லாம் கழற்றிப் போட்டுக் கொண்டிருந்தனர்.

இதோ.... மணப்பெண் அருகில் வந்து....

''கழற்று எல்லா நகைகளையும்'' என்று மிரட்ட அந்தப் பெண் எல்லா நகைகளையும் கழற்றிப் போட்டாள். அன்று கட்டிய மஞ்சள் தாலிக் கயிறு தான் கழுத்தில் 'ப்ளீச்' சென்று தெரிந்தது.

''இதோ.... ஒவ்வொருவரிடமும் நகைகளை வாங்கியபடி அவன் அந்தக் கொழு கொழு பெண் குழந்தையிடம் வந்தான்.''

''மாத்தேன்: தரமாத்தேன் போ!'' பாதி தின்ற பிஸ்கட் ஒரு கையில். மறு கையால் சங்கிலியைச் சட்டையோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டது.

விடவில்லை அந்தக் குறுந்தாடித் தடியன். அந்த அழகிய குழந்தை அழ... அழ... பலவந்தமாகப் பிடுங்கிய போது....

சரவணனால் அதற்கு மேலும் சும்மா இருக்க முடியவில்லை. ரத்தம் கொதித்தது. உடல் துடித்தது. ''ஏதாவது செய்து நகைகளையும் பணத்தையும் காப்பாற்று'' என்று மனம் தூண்டியது.

பஸ்ஸிற்குள் அமர்ந்திருக்கும் இத்தனை ஆண்களும் ஏன் நடுங்கியபடியே செயலிழந்து விடுகின்றனர்?

ஓ... உயிருக்குப் பயந்தா...?

சரவணன் துணிந்து விட்டான். என் உயிர் போனாலும் பரவாயில்லை. கஷ்டப்பட்டுச் சம்பாதித்துப் போடப்பட்ட நகைகள் இந்த அயோக்கியர்கள் கையில் சிக்கக் கூடாது.

''என்ன செய்யலாம்?''

பளீரென்று தோன்றி மறைந்தது அந்த எண்ணம்.

அவ்வளவுதான்! அடுத்த வினாடி. தன் இருக்கையை விட்டு எழுந்து...., ''ஐய்யோ.... பாம்பு, பாம்பு.... நல்ல பாம்பு'' என்று பயங்கரமாக அலற ஆரம்பித்தான்.

பாம்பு என்றால் படையே நடுங்கும் போது, பயணிகள் எம்மாத்திரம்?

மறு வினாடி அத்தனை பேரும் 'பாம்பு எங்கே? ஆ.... பாம்பா?'' என்று பயத்தில் புலம்பியபடியே சீட்டின் மீது ஏறி நின்று டான்ஸ் ஆட —

''இதோ, நல்ல பாம்பு... இதோ... இதோ''... சரவணன் தன் சீட்டுக்கு அடியில் கையைக் காட்டிப் பலமாக்க் கத்தினான்.

டிரைவர் அருகில் இருந்த கறுப்புக் கண்ணாடிக்காரன் கூட பயந்து தன் துப்பாக்கியின் பிடியைத் தளர்த்தி இடத்தை விட்டு நகர,

இதுதான் சமயம் என்று சரவணன் கறுப்புக் கண்ணாடிக்காரன் மீது பாய்ந்து தனக்குத் தெரிந்த கராத்தே வெட்டினால் அவனைத் தாக்க....

இதற்குள் பஸ்ஸில் இருந்தவர்கள் தைரியம் அடைந்து நகைகள் வைத்திருக்கும் குறுந்தாடி தப்பி ஓட முயலும் பொழுது அவனைத் தாக்கி நகைகள் உள்ள தோல் பையைப் பிடுங்கிக் கொண்டனர். அவனை இரண்டு ஆட்கள் சேர்த்துப் பிடித்து ஒரு துண்டால் கட்டிப் போட்டனர், அவனுடைய கைகளையும் கால்களையும்.

தன் கூட்டாளி பிடிபட்டதைக் கண்டு ஆத்திரமடைந்த கண்ணாடிக்காரன் தன்னைச் சமாளித்தபடி துப்பாக்கியைச் சரியாகப் பிடிக்க முயன்றான்... மறுபடியும் அவன் காலைப் பார்த்துச் சரவணன் ஒரு கராத்தே வெட்டு வெட்ட தன் முயற்சி எல்லாம் இவனால்தான் கெட்டு விட்டது என்று கோபத்தோடு கீழ்ப்பக்கம் சாய்ந்துள்ள துப்பாக்கியின் அழுத்தும் பகுதியை அழுத்த.... அடுக்கடுக்காக வந்த இரண்டு மூன்று குண்டுகள் சரவணன் இடது காலைப் பதம் பார்த்து விட்டன. தன் கால் சுண்டுவிரல் தெறித்து விழுந்தது போன்று உணர்ந்தான். இதற்குள் பஸ்ஸிற்குள் இருந்த டிரைவர் கறுப்புக் கண்ணடிக்காரனின் துப்பாக்கியைத் தட்டி விட உயிர் பிழைத்தால் போதும் என்று கண்ணாடிக்காரன் கூட்டாளியை விட்டு விட்டு ஓடி விட்டான். மறு வினாடி சரவணன் அப்படியே மயங்கி விழுந்தான். கண் விழித்துப் பார்த்த பொழுது, தான் மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்தான்.

3

''என்ன சரவணா... நடைபெற்ற நிகழ்ச்சிகளை நினைத்துப்

பார்த்திட்டிருக்கியா?'' — என்ற குரல் கேட்டதும் திடுக்கிட்டுச் சுய உலகிற்கு வந்தான். எதிரே நின்று கேட்டுக் கொண்டிருந்தவர் டாக்டர்.

டாக்டரைப் பார்த்ததும் மெதுவாக எழ முயன்றான். ஊஹூம்.... முடிந்தால்தானே?

''பேசாமல் அப்படியே படுத்து ரெஸ்ட் எடுத்துக் கொள்'' — டாக்டரின் கட்டளைக்குப் பணிந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''வலி எப்படி இருக்கு?''

''கொஞ்சம் பரவாயில்லை டாக்டர்''

''சரவணா, நீ வந்து கொண்டிருந்த பஸ்ஸில்தான் நானும் வந்து கொண்டிருந்தேன். டாக்டரா இருந்தும் கூட அந்தக் கொள்ளைக்காரர்களை எதிர்க்க எனக்குத் துணிவு இல்லாமல் போய் விட்டது. அவர்களைப் பிடிக்க ''பர்ம்பு'' என்று நீ ஆடிய நாடகம் எனக்குத் தைரியத்தைக் கொடுத்தது. அந்தத் துணிவில்தான் நானும் என் நண்பரும் குறுந்தாடிக்காரனைப் பிடித்தோம். ஒருவன் தப்பி விட்டாலும் மற்றவனைப் போலீஸில் ஒப்படைத்து விட்டோம். அவன் மூலமாக அந்தக் கும்பலையே போலீஸ் கண்டுபிடித்து விடும். உன்னால்தான் லட்சக்கணக்கான மதிப்புள்ள நகைகள் காப்பாற்றப்பட்டன! நீ மட்டும் அந்தச் சமயத்திலே உன் உயிரையும் பொருட்படுத்தாது அந்த மாதிரி துணிவான முயற்சி எடுக்கவில்லை என்றால்... எத்தனை நஷ்டம் ஏற்பட்டிருக்கும்? உனக்கு நினைவு வந்ததும் எஸ். ஐ. ஃபோன் செய்யச் சொன்னார், உன்னைப் பாராட்டி உனக்கு வெகுமதி தர. உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே புரியவில்லை'' — என்றார் டாக்டர் நெகிழ்வுடன்.

''டாக்டர் ஸார், பெரிய பெரிய வார்த்தைகளை எல்லாம் பேசி, என்னைப் பதில் சொல்ல முடியாத நிலையில் வைக்காதீங்க''

இதற்குள் கால்வலியின் வேதனை அதிகமாகவே கஷ்டப்பட்டு வலியைச் சமாளித்தபடி சிறிது நேரம் அமைதியாக இருந்தான்.

''சரவணா, உனக்கு காலுக்கு




ஒன்றுமில்லை. கூடிய சீக்கிரம், ஏன், நாளைக்கே நீ எழுந்து உட்கார்ந்து நடக்க ஆரம்பிப்பே'' — டாக்டர் உற்சாக மூட்டினார்.


லேசாகச் சிரித்தபடி சரவணன் கூறலானான்: ''டாக்டர், கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீங்களும் என் அத்தையும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். எங்கப்பா யார் தெரியுமா? நம் பாரத மண்ணை, எந்தத் தீய சக்தியும் தாக்காது, எந்த அந்நியனும் கொள்ளையடிக்க விடாதபடி, பனிப் போர்வை போர்த்தி இருக்கும் இமய மலைச் சாரலில், பசி, தாகம், குளிர், உறக்கம் எதையும் பொருட்படுத்தாது, தன் உயிரையே நாட்டிற்காக அர்ப்பணிக்கத் தயாராக இருக்கும் ஓர் இந்திய ராணுவ் வீரர்! சமூக விரோதியான இந்தத் திருடர்களைப் பிடிப்பதற்காக என்னுடைய சுண்டு விரலையே நான் இழந்தாலும், நடப்பதற்கு இன்னும் ஒரு மாதம் ஆனாலும், நான் கவலைப்படவில்லை. நான் ஒரு இராணுவ வீரரின் மகன். டாக்டர், அதனாலே என்னோட கடமையைத்தான் செய்தேன்.''


சரவணனின் பேச்சைக் கேட்ட டாக்டரின் விழிகளில் நீர் கசிந்தது.

''சரவணா, உன்னை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. உன்னைப் போன்று துணிவும், தைரியமும், அறிவுக் கூர்மையும் உள்ள மாணவர்கள்தான் இன்றைய நவ பாரதத்திற்கு மிகவும் தேவை. உனக்கு வைத்தியம் செய்வதில் நான் பெருமை அடைகிறேன். கூடிய சீக்கிரம் நீ நடப்பாய்'' என்றார் உணர்ச்சிப் பெருக்கோடு.

சரவணன் பூரண குணம் அடைந்து விரைவில் பள்ளி செல்ல நாமும் இறைவனை வேண்டுவோமா?




நீ உன்னிடம் உள்ள வாரிவிளங்காய் உருண்டையை விட்டெறி! நான் மைசூர் பாக்கை விட்டெறியறேன்! இரண்டும் மோதி எது உடைகிறதுன்னு பார்க்கலாம்
ரெண்டுமே, உடையல்லேபா நம் மண்டை உடைந்து வீங்கினதுதான் மிச்சம்!!
மாலா.



விஷமக்காரனின் கலை

தமிழில்: சந்திரநாத்

வெகு காலத்திற்கு முன்னால் ஒருநாள் இரவு பர்மாவை அடுத்த கடலில் ஒரே கொந்தளிப்பாக இருந்தது.

அலைகள் பனைமரம் உயரத்திற்கு எழுந்து விழுந்தன. காற்று பயங்கரமாக வீசிற்று.

ஆகாசத்தில் கரிய மேகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. எதிரே இருப்பது என்னவென்று தெரியாமல் எங்கும் இருள் அப்பிக் கிடந்தது.

இத்தனை அமர்க்களத்திற்கு இடையிலும் அந்தக் கொந்தளிக்கும் கடலில் ஒரு சிறு கட்டுமரம் தத்தளித்தவாறு சென்று கொண்டிருந்தது.

அந்தக் கட்டு மரத்தில் மூன்று பேர் இருந்தார்கள். ஒருவன் குறுந்தாடி வைத்திருந்தான். இன்னொருவனின் வழுக்கைத் தலை பளபளவென்று மின்னியது. இந்த இரண்டு கைகளிலும் துடுப்புகள் இருந்தன. அவற்றை மாற்றி மாற்றிப் போட்டு அலைகளைக் கட்டுப்படுத்தி அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

மூன்றாவது ஆள் ஒல்லியாக உயரமாக இருந்தான். மற்ற இருவரையும் விட இவன் நல்ல உயரம். எழுந்து நின்றால், ஏழடி கூட இருப்பான் போலிருந்தது. இருட்டிலும் அவனுடைய உயரமே அவர்களுக்கு முக்கியமாகத் தெரிந்தது.

"நீ எப்படி இவ்வளவு உயரமாக வளர்ந்தாய்?" என்று கேட்டான் தாடிக்காரன்.

"இது ஓர் உயரமா?" என்று சிரித்தான் நெட்டையன். "எனக்கு மூளை அதிகம். அது சும்மாவே இருக்காது. என்னுள் இன்னொரு ஆளும் இருக்கிறான். அவனுடைய உயரத்தையும் சேர்த்துத்தான் நான் தாங்கி நிற்கிறேன்" என்றான்.

"இரண்டாள் உயரம் இருப்பாய் போல்தான் தெரிகிறது" என்றான் வழுக்கைத் தலையன்.

"இன்னும் கூட உயரமாக வளர வேண்டும் என்பது என் ஆசை. எவ்வளவு உயரம் தெரியுமா? மனிதர்கள் நிமிர்ந்து பார்த்தாலே கழுத்து வலிக்க வேண்டும். அவ்வளவு உயரம்" என்றான் நெட்டையன்.

"பைத்தியக்கார ஆசை" என்றான் தாடிக்காரன்.

"அப்படியானால் நீ மரமாகப் பிறக்க வேண்டியதுதான்"—என்றான்

வழுக்கைத் தலையன்.

"நான் இறந்தால் அப்படி உயர மான மரமாகத்தான் பிறப்பேன்" — என்றான் நெட்டையன்.

"நீ என்னவாகப் பிறக்க விரும்பு கிறாய்?" என்று கேட்டான் தாடிக் காரன் தன் முன்னால் அமர்ந்து துடுப்புப் போட்டுக் கொண்டிருந்த வழுக்கைத் தலையனைப் பார்த்து.


"அந்தப் பேச்சு இப்போது எதற்கு?" என்றான் வழுக்கைத் தலை யன் சலிப்புடன்.

"இதோ பார், இப்போது அதைப் பற்றிப் பேசாமல் பின் எப்போது பேசுவது? கடல் எப்படி இருக்கிறது பார்த்தாயா? நாம் உயிர் தப்பி கரை சேருவோமோ என்னமோ" — என் றான் தாடிக்காரன்.

"உங்களுடன் நான் வந்ததே தப்பு" என்றான் வழுக்கைத் தலை யன். "நான் வாழ விரும்புகிறேன். நான் ஒரு திருடன். இதுவரை திருடியே பிழைத்து விட்டேன். அதனால் என்னை நாடு கடத்தி விட்டார்கள். இப்போது நான் வாழ்ந்த வாழ்க்கைக் காகப் பெரிதும் வருந்துகிறேன். இனி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நல்ல வனாக வாழ்வேன்" — என்றான்.

"உன் ஆசை நிறைவேறட்டும்" என்றான் தாடிக்காரன். "எனக்கும் உன் போல் வாழ்க்கை சலித்துத்தான் போய் விட்டது. நான் ஒரு மந்திரவாதி. உண்மையில் எனக்கு எந்த மந்திரமும் தெரியாது. மந்திரவாதி போல நடித்து ஊரை ஏமாற்றிப் பிழைத்து வந்தேன். கடைசியில் என் மோசடியைக் கண்டு பிடித்து, என்னை நாடு கடத்தி விட் டார்கள். எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நானும் நல்லவனாக வாழ்வேன்" என்றான்.

நெட்டையன் இதை எல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந் தான். முதலில், அவன் ஒன்றும் சொல்லவில்லை. கடைசியில் சொன் னான். "இதோ பாருங்கள். நாம் மூவரும் யாரோ தெரியாது. ஆனால், நாம் மூவருமே வெவ்வேறு நாடுகளி லிருந்து நாடு கடத்தப்பட்ட குற்ற வாளிகள். எப்படியோ ஒன்று சேர்ந்து இந்தக் கட்டுமரத்தைத் திருடி



அதில் ஏறிக் கொண்டு கிளம்பி விட்டோம். ஏதாவது ஒரு புது தேசத்தில் நாம் நிச்சயமாகக் கரையேறுவோம். அங்கே நீங்கள் இருவரும் நல்லவர்களாக வாழ்ந்து விட முடியும். ஆனால் என்னால் முடியாது.''

''ஏன், ஏன் முடியாது?'' என்று மற்ற இருவரும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

''ஏனென்றால் என் சுபாவம் அப்படி. நான் ஒரு விஷமக்காரன். என்னால் ஏதாவது விஷமம் செய்யாமல் இருக்கவே முடியாது. எப்படியாவது, ஏதாவது செய்து மாட்டிக் கொண்டு விடுவேன் — அதுதான் பயமாக இருக்கிறது.''

திருடனுக்கும் மந்திரவாதிக்கும், ''நம்மிடமே இவன் ஏதாவது விஷமம் செய்து விடுவானோ; கட்டுமரத்தைக் கவிழ்த்து விடுவானோ?'' என்கிற பயம் வந்து விட்டது. அதன் பிறகு அவர்கள் அவனுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

2

கடல் கொந்தளித்த அந்த இரவில் பர்மா தேசத்து அரண்மனையில் ஒரு பெரிய திருவிழா முடியும் தருவாயில் இருந்தது.


பொன்னாலான ஒரு புத்த விக்கிரம் அலங்கரிக்கப்பட்டு நடுவில் வைக்கப்பட்டிருந்தது. அதன் முன் அமர்ந்து ஏராளமான புத்த பிக்குகள் மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தார்கள்.


அரண்மனை திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. நகரத்துப் பிரமுகர்கள் அத்தனை பேரும் வந்து கூடியிருந்தார்கள்.

மன்னரிலிருந்து சாதாரணக் குடிமகன் வரை அன்று துளி தண்ணீர் கூட வாயில் விடவில்லை. உபவாசம் இருந்தார்கள்.

இரவு பன்னிரண்டு மணிக்கு திருவிழா முடிந்து விடும். விக்கிரகத்திற்கு நேர் எதிரே மன்னர், தம் மனைவி, மக்கள் சகிதம் சம்மணமிட்டு, கம்பளத்தில் உட்கார்ந்திருந்தார்.

அரண்மனைச் சமையற்காரர்கள்





நைவேத்யத்திற்கும் பிரசாதமாக வழங்கப்படுவதற்குமான இனிப்புகளைப் பெரிய பெரிய அண்டாக்களில் கொண்டு வந்து வைத்தார்கள்.

கடைசியில் அரண்மனைக் காவல் கோபுரத்து வெண்கல மணி பன்னிரண்டு தடவை அடித்தது.

உடனே பிக்குகள் மந்திரங்களை உரக்கச் சொன்னார்கள். சேகண்டிகளை முழங்கினார்கள். தலைமை பிக்கு ஆராதனைகளைச் செய்தார். சாந்தி மந்திரம் சொல்லி, பூக்களைப் போட்டதும் விழா முடிவடைந்தது. உடனே ஓர் சின்ன பிக்கு பிரசாதம் வழங்க ஆரம்பித்தார். முதலில் மன்னருக்கும் அவர் குடும்பத்திற்கும் பிரசாதம் கொடுத்தார். அவர்கள் அதை பயபக்தியுடன் வாங்கி வாயில் இட்டுக் கொண்ட போது, வெளியே இருந்து, சாளரம் வழியாக பயங்கரமாக உறுமியபடி காற்று வீசிக் கொண்டு வந்தது. அந்தத் தளத்திலிருந்த திரைச் சேலைகள் எல்லாம் கடலலைகளைப் போலச் சுருண்டு விரிந்தன; ஜன்னல்களில் கதவுகள் பயங்கர ஓசையுடன் 'படீர் படீர்' என்று அடித்துக் கொண்டன. பல நூறு பேய்கள் சேர்ந்து வந்து அந்த அரண்மனையையே அறைவது போலிருந்தது அந்த ஓசை.

குழந்தைகள் வீரிட்டு அலறி தாய்மார்களைக் கட்டிக் கொண்டன. அரசி செல்லமாக வளர்க்கும் பூனைகள் 'மியாவ் மியாவ்' என்று கத்திக் கொண்டு ஓடி வந்து அவனுடைய காலடியில் ஒண்டின.

"அடிகளே — இது என்ன? பூஜை முடியும் போது இப்படிப் பெரும் புயல் தோன்றியிருக்கிறதே! பகவானுக்கு நாம் ஏதாவது அபசாரம் செய்து விட்டோமா?" என்று கவலையுடன் கேட்டார் அரசர்.

"ஏதோ கஷ்ட காலம் வந்து கொண்டிருக்கிற மாதிரி தோன்றுகிறது" என்றார் தலைமைக் குரு. பிறகு அவர் விக்கிரகத்தின் காலடியிலிருந்து இரண்டு முழ நீளமுள்ள ஒரு பட்டுக் கயிற்றை எடுத்துக் கொடுத்தார்.

"கவலைப்படாதீர்கள். பிராயச்சித்தம் செய்து விட்டால் பகவானின் கோபம் தணிந்து விடும். இந்தக் கயிற்றில் பகவானின் நாமத்தை ஒரு லட்சம் தடவை சொல்லிக் கொண்டே, ஒவ்வொரு நாமத்திற்கும் ஒரு முடிச்சுப் போட்டு அவிழுங்கள்" என்றார்.

"அப்படியே செய்கிறேன்" என்றார் அரசர்.

''நாளைக் காலையில் ஏதாவது இரண்டு நற்செயல்கள் செய்யுங்கள்; கருணையைப் போதித்த பகவானுக்குப் பிடித்தமான கருணைச் செயலாக அவை இருக்கட்டும்.''

''அப்படியே செய்கிறேன்'' என்றார் அரசர்.

3

பொழுது விடிந்தது. கீழ்த் திசையில், அடிவானக் கடலில் தகதக வென்று சூரியன் உதயமாயிற்று.

காற்று அடங்கி விட்டது. கடலில் அலைகள் ஓய்ந்து விட்டன. கட்டு மரம் கொந்தளிப்பு பகுதியை விட்டு வெளியே வந்து விட்டதை, அதிலிருந்த மூவரும் கண்டார்கள்.

அவர்கள் எதிரே தூரத்தில், ஒரு பெரிய பட்டணத்தின் மாட மாளிகைகள் தெரிந்தன.

''அதோ, கரை தெரிகிறது'' என்று மகிழ்ச்சியுடன் கூவினான் மந்திரவாதி. ''ஆனால் எந்த சேதம் என்றுதான் தெரியவில்லை'' என்றான் அவன்.

''எனக்குத் தெரியும் — அதோ அந்தக் கோயில் ஸ்தூபமே சொல்கிறதே. அதுதான் பர்மா தேசம்'' என்றான் திருடன்.

காற்று கடற்கரையை நோக்கி வேகமாகக் கட்டுமரத்தைத் தள்ளிக் கொண்டுபோயிற்று. சீக்கிரத்திலேயே அவர்கள் கரைக்கு வந்து விட்டார்கள்.

கடற்கரையில் காவல் பலமாக இருந்தது. காவலர்கள், இவர்கள் அன்னியர்கள் என்று தெரிந்ததும், இவர்களைக் கைது செய்து, கட்டு மரத்தையும் பறிமுதல் செய்து விட்டார்கள்.

பிறகு அந்த மூவரையும் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். மிக உயரமான ஆசனத்திலே, சீனத்துப் பட்டாடை பளபளக்க உட்கார்ந்திருந்தான் பர்மிய அரசன்.

''யார் இவர்கள்?'' என்று கேட்பது போல, புருவத்தை உயர்த்தி விட்டு, ஆசனத்திலே சௌகரியமாகச் சாய்ந்து கொண்டான் அரசன். கையிலே உள்ள ஒரு பட்டுக் கயிற்றிலே முடிச்சுப் போடுவதும் அவிழ்ப்பதுமாக இருந்தான் அவன்.

''இந்த மூவரும் நாடு கடத்தப்பட்டவர்கள். வெளிநாட்டுக்காரர்கள். கட்டுமரத்திலே வந்து கள்ளத்தனமாக நம் நாட்டில் குடியேறப் பார்த்தார்கள்'' — என்றான் காவலாளி.

''உம்'' என்று சொல்லி விட்டு ஒரு முடிச்சை அவிழ்ப்பதிலே தீவிரமாக இருந்தான் அரசன்.

காவலாளி சொன்னான். ''இதோ இந்தத் தாடிக்காரன் மந்திரவாதி. இந்த மொட்டைத் தலையன் ஒரு திருடன்.''

''சரி, சரி'' என்றான் அரசன். திரும்பி அந்த இருவரையும் உற்றுப் பார்த்தான். தனித் தனியாகக் கூர்ந்து பார்த்தான்.

சாதாரணமாக குற்றவாளிகளை அவன் சிரச்சேதம் செய்து விடுவது வழக்கம். ஆனால், 'காலையில் இரண்டு கருணைச் செயல்கள் புரியுங்கள்' என்று தலைமைக் குரு சொன்னது அரசன் காதில் ஒலித்தது. அவன் அந்த இருவரிடமும் கருணை காட்ட முடிவு செய்து விட்டான்.

திருடனைப் பார்த்து, ''வெட்கமாக இல்லையா, உனக்குத் திருட?'' என்று கேட்டான்.

''வெட்கமாகத்தான் இருக்கிறது,



''அவர் தம் சொத்தையெல்லாம் தர்மத்துக்கு எழுதி வைத்து விட்டாராமே...?''

''அட போய்யா... 'தர்மம்' என்பது அவர் மனைவி பெயராம்....!''

''?...!...?...!....?...!...''

— ஏ. ஆர். வீரராகவன்.

பிரபு'' என்றான் திருடன்.

''அதை விட்டு விட சந்தர்ப்பம் கிடைத்தால்?''

''ஆயுள் முழுவதும் யோக்கியனாக இருப்பேன், பிரபு.''

அரசனுக்குத் திருப்தியாக இருந்தது. ''சரி, இவனை விடுதலை செய்யுங்கள். இவனுக்கு ஆயிரம் வெள்ளி கொடுங்கள். அதை வைத்துக் கொண்டு எப்படிப் பிழைக்கிறான் என்று பார்க்கிறேன்'' — என்று உத்திர விட்டான்.

பிறகு மந்திரவாதியின் பக்கம் திரும்பினான். ''நீ செய்ததும் வயிற்றுப் பிழைப்புக்காகத்தான், இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாம், பிரபு'' என்று காலில் விழுந்தான் மந்திரவாதி.

''சரி, உனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறேன். இவனையும் விடுதலை செய்து ஆயிரம் வெள்ளி கொடுங்கள். அதை வைத்துக் கொண்டு நல்லவனாக வாழ்க'' என்றான் அரசன்.

''அடுத்தது யார் இந்த நெட்டை ஆள்?'' என்று கேட்டான், நெட்டையனை முன்னால் இழுத்து வந்து நிறுத்தினார்கள்.

''அரசே, இவன் விஷமக்காரன் என்கிறான்''

''ஓஹோ'' என்றான் அரசன். ''திருட்டு, மந்திரவாதம் போலல்ல விஷமம், இல்லையா?'' என்று கேட்டான்.

மறுமொழி ஏதும் சொல்லாமல் நின்றான் நெட்டையன்.

''நீ அதை உன் வயிற்றுப்பாட்டுக்காகச் செய்திருக்க முடியாது. ஏனென்றால், விஷம குணம் இடையில் வருவதில்லை. அது பிறவியிலேயே வந்து விடுகிறது. அது நிழல் போலக் கூடவே வரக் கூடியது. கடைசி வரை அது கூட வரும். விஷமங்களால் நன்மை ஏற்படுவதில்லை. உனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தாலும், நீ திருந்த மாட்டாய். உன்னிடமிருந்து விஷம குணத்தை அகற்ற வேண்டுமானால், உன் உடலிலிருந்து உயிரை விரட்டுவதுதான் வழி'' — என்றான் அரசன்.

பிறகு, இவனிடம் கருணை காட்டுவதா, வேண்டாமா?'' என்று யோசித்தான். இரண்டு கருணைச் செயல்களைச் செய்தாகி விட்டது நினைவுக்கு வந்தது. போதும், மூன்றாவது வேண்டாம்.

''அடே'' என்று காவலர்களை அழைத்தான் அரசன். ''இவனை அழைத்துச் சென்று தலை வேறு உடல் வேறாக வெட்டி வீழ்த்தி விடுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

4

காவலர்கள் விஷமியை அழைத்துக் கொண்டு போன போதுகூட அவன் ஒன்றும் சொல்லவில்லை.

அவன் உதடுகள் துடித்ததை மட்டும் எல்லோரும் பார்த்தார்கள். அப்போது அவன் கண்கள் பளபள வென்று மின்னின.

அவன் மூளையில் 'பளிச்'சென்று ஏதோ ஒரு விஷமம் உதயமாகி விட்டதையும், அதை வெளியிட நாக்கு துடிப்பதையும், நாவை அடக்கிக் கொள்ள அவன் கஷ்டப்படுவதையும் கண்டார்கள்.

வாசலுக்கு வந்ததும் அவன் நாலா புறமும் பார்த்து விட்டு 'கடகட' வென்று ஒரு சிரிப்பு சிரித்தான்.


''எதற்காகச் சிரித்தாய்?'' என்று காவலாளி கேட்டான்.

''நீ உனக்கிட்ட வேலையைக் கவனி'' என்றான் விஷமக்காரன்.

காவலாளி அவனை இழுத்துக் கொண்டு ஊருக்கு வெளியே இருந்த களத்திற்குச் சென்றான். அங்கு இருந்த கொலையாளி விஷமியின் தலையை வெட்டி வீழ்த்தினான். விஷமியின் தலை வேறாகவும், உடல் வேறாகவும் வீழ்ந்தன.

காவலாளி திரும்பி வந்து தண்டனையை நிறைவேற்றி விட்டதாக அரசனிடம் தெரிவித்து விட்டான்.

இது நடந்து இரண்டாம் நாள் அரசன் ஜெபமாலையில் ஒரு லட்சம் முடிச்சுப் போட்டு அவிழ்த்து விட்



டான்.

'இரண்டு கருணைச் செயல்களைச் செய்து விட்டோம். ஒரு லட்சம் நாமாவளி சொல்லி விட்டோம். இனி, என் நாட்டுக்கு எந்தத் தீங்கும் நேராது' என்று அவன் திருப்தி அடைந்தான்.

அப்போது கொலைக்களத்துக் காவலாளி உள்ளே 'பிரபு' என்று கதறிக் கொண்டு ஓடி வந்தான். "பிரபு, நடக்க முடியாத அதிசயம் நடந்து விட்டது!" என்றான்.

"முட்டாளே, என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் அரசன்.

"பிரபு, நேற்று நாங்கள் வெட்டி வீழ்த்தின விஷமக்காரன் சாகவில்லை. அவன் உடலும் தலையும் தனித்தனியாகக் கிடக்கிறது. ஆனால், தலை பேசுகிறது. எழுந்து உட்கார்ந்து என்னிடம் பேசிற்று" என்றான் காவலாளி.

"பைத்தியக்காரா, என்ன உளறுகிறாய்? உடலற்ற தலையாவது, பேசுவதாவது? கனவு ஏதாவது கண்டாயா?" என்று உறுமினான்.


"இல்லை பிரபு. அந்தத் தலை பேசியதை நான் கண்ணால் பார்த்தேன்; காதால் கேட்டேன். இது சத்தியம்."

"அப்படியா? என்ன சொல்லிற்று அந்தத் தலை?" என்று கேட்டான் அரசன்.

"அதைச் சொல்லவே என் மெய் நடுங்குகிறது. 'அடேய்! உங்கள் ராஜாவைப் போல ஏமாந்த சோணகிரி இந்த உலகிலேயே யாரும் கிடையாது' என்றது" என்று குரல் நடுங்கச் சொன்னான் காவலாளி.

இதைக் கேட்டதும் அரசனுக்குக் கடுங் கோபம் வந்து விட்டது. இதன் உண்மையைக் கண்டுபிடிக்க அவன் தீர்மானித்து விட்டான்.

பக்கத்திலிருந்த தளபதியை அழைத்தான். "தளபதி, இவனுடன் இப்போதே கொலைக்களத்திற்குப் போ. இவன் சொல்வது போல அந்தத் தலை பேசுகிறதா என்று பார். பேசினால், உடனே எனக்குத் தகவல் அனுப்பு. பேசாமல் இருந்ததோ இந்தத் துஷ்டப் பயலை அங்கேயே வெட்டி வீழ்த்தி விடு" என்று உத்தர விட்டான்.



விளையாட்டு

அம்மா: ஏண்டா சாம்பு, இந்தச் சீப்பிலே இருந்த பல்லையெல்லாம் காணேமே, என்னடா பண்ணினாய்?

சாம்பு: நானும் தங்கச்சியும் பல் டாக்டர் விளையாட்டு விளையாடினோம் அம்மா.

— எம். சொக்கலிங்கம் (20678),
மன்னார்குடி.

தளபதி அரசனை வணங்கி விட்டு, காவலாளியுடன் நேராகக் கொலைக் களத்திற்குப் போனான். அங்கே விஷமியின் தலையும் உடலும் தனித்தனியாகக் கிடந்தன.

இரண்டும் உயிரற்ற பொருள் போலக் கிடந்தன. தலை ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

தளபதி எவ்வளவோ கேட்டும், அது எதற்கும் பதிலளிக்கவில்லை. மூச்சுப் பேச்சின்றிக் கிடந்தது.

'காவலாளிதான் பொய் சொல்லி விட்டான்' என்று தீர்மானித்து விட்டான் தளபதி. உடனே அவனை அங்கேயே வெட்டி வீழ்த்தி விட்டான்.

இரத்தம் தோய்ந்த வாளுடன் அவன் கிளம்பினான்.

அப்போது விஷமியின் தலை துள்ளிக் குதித்தது. விஷமச் சிரிப்புடன் அது பேசியது. "தளபதியே, நீ உன் அரசனை விடப் பெரிய ஏமாளி" என்று சிரித்தது அது!

தளபதிக்குத் தூக்கிவாரிப் போட்டது!

"ஏன் விழிக்கிறாய்? அரண்மனைக்குத் திரும்பிப் போய் நடந்ததை எல்லாம் அப்படியே அந்த ஏமாளி அரசனிடம் சொல். இன்னும் என்னென்ன திருக்கூத்துக்கள் எல்லாம் நடக்கப் போகிறது பார்" என்று சிரித்தது தலை.

"கடவுளே, இதை எல்லாம் நான் போய் அரசனிடம் சொன்னால், எவ்வளவு விபரீதம் ஏற்பட்டு விடும்? இதன் உண்மையை ஆராய அரசரே புறப்பட்டு வருவார். அப்போது நீ வாயை மூடிக் கொண்டிருப்பாய். நான் பொய் சொன்னதாகச் சொல்லி, அரசன் என் தலையை வாங்கி விடுவார். ஐயோ, உன் விஷமம் எங்கே போய் நிற்கும்?" என்று கதறினான் தளபதி.

"இந்தக் கேள்வியை உன் தலையைச் சீவி விட்டு அரசன் என்னிடம் கேட்பான். அப்போது அதற்குப் பதில் அளிக்கிறேன். நீ இப்போது நடந்ததை அரசனிடம் போய்ச் சொல். நான் பேசவில்லை என்று நீ பொய் சொன்னால், காவலாளியை ஏன் கொன்றாய் என்று அரசன் கேட்பான். சொன்னாலும் கஷ்டம்; சொல்லா விட்டாலும் கஷ்டம் போ, போ உன் தலை எழுத்து!" என்று சிரித்தது தலை.

6

தளபதி வேறு வழி இல்லாமல் நடப்பது நடக்கட்டும் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு அரசனிடம் போனான்.

நடந்ததை எல்லாம் நடந்தபடியே சொன்னான். ஆனால், விஷமி சொன்னது போல, இதைக் கேட்டு அரசன் ஆத்திரம் அடையவில்லை.

அவன் தன் தளபதி சொன்னதைச் சந்தேகிக்கவில்லை. விஷமிகளைப் பற்றி அவனுக்கு நன்றாகத் தெரியும். இந்த விஷமியும் இன்னும் ஒரு பெரிய விபரீதத்திற்கு வித்திடப் போகிறான் என்று அவன் ஊகித்து விட்டான்.

அதை எப்படியாவது தடுத்து விடுவது என்று முடிவு செய்தான். அவன் காவலர்களை அழைத்து, "நீங்கள் உடனே போய் ஒரு பெரிய குழி வெட்டி, அதில் அந்தத் தலையை ஆழப் புதைத்து விடுங்கள். அப்புறம் அது எப்படி விஷமம் செய்கிறது,

பார்ப்போம்'' என்று உத்தர விட்டான்.

காவலர்கள் அப்படியே செய்தார்கள். அப்போதும் அந்தத் தலை அலட்சியமாகச் சிரித்தது. 'என் விஷமத்தை நிறுத்த அந்த பிரம்மாவே வந்தாலும் முடியாது' என்றது.

இது நடந்து சில மாத காலம் ஆன பிறகு அந்தத் தலையைப் புதைத்த இடத்திலே, ஒரு மரம் முளைத்தது.

பளபளவென்று, குத்திட்டி போன்ற நீளமான சில இலைகள் அதிலிருந்து வெளிப்பட்டன.

மரம் வளர வளர ஒவ்வொரு இலையும் ஒரு பெரிய மட்டையானது. அந்த மட்டைக்கு இரண்டு கீற்றுகள் இருந்தன. இப்படி ஏழெட்டு மட்டைகளுடன் அந்த மரம் உயரமாக வளர்ந்து, சில ஆண்டுகளில், மனிதர்கள் அண்ணாந்து பார்க்கும்படியான அளவு உயர்ந்து விட்டது!

அதைப் பார்த்தவர்கள் எல்லோரும் ''ஐயோ, எவ்வளவு உயரம்! கழுத்து வலிக்கிறது!'' என்றார்கள்.

அப்படி ஒரு மரத்தை அந்த தேசத்தவர் அதற்கு முன் பார்த்ததே இல்லை. உயரமாக, உச்சியில் மட்டைகளை விரித்துக் கொண்டு, தலை விரித்தாடும் ஒரு பைத்தியக்காரன் போல அது இருந்தது.

பிறகு அதன் உச்சியில் மட்டைகளின் அடியில் பாளைகள் வெடித்தன. பூ சிரித்தது. குரும்பைகள் தோன்றின. பிறகு அவை வளர்ந்து காய்கள் ஆயின.

ஒவ்வொரு காயும் ஒரு மனிதனின் தலை மாதிரியே இருந்தது. முற்றின காய் ஒன்று மரத்திலிருந்து விழுந்தது. அதை எடுத்துப் பார்த்தவர்கள் அது அந்த விஷமியின் தலை போலவே இருப்பதாகச் சொன்னார்கள்.

அவர்கள் அந்தக் காயைக் குலுக்கிப் பார்த்தார்கள். முற்றின காய்க்குள் சலசலவென்று நீரோட்டம் கேட்டது. அது அந்த விஷமியின் சிரிப்பைப் போலவே இருந்தது.

''இதோ பார், விஷமம் செய்வதற்கு முன் அவன் இப்படித்தான் சிரிப்பான். இப்போது என்ன விஷமம் செய்யப் போகிறேனோ?'' என்றார்கள், பெரியவர்கள்.

அவர்கள் சொன்னது மெய்யாயிற்று. பின்னால்தான் பர்மா முழுவதிலும் செய்யப் போகிற பெரிய விஷமத்தை நினைத்துத்தான் அவன் சிரித்தான்.

சில நாட்களுக்குப் பிறகு சிலர் அந்த மரத்தில் ஏறினார்கள். பாளைகளைச் சீவி ஒருவிதச் சாறு இறக்கினார்கள். அதை ஆனந்தமாகக் குடித்தார்கள்.

அதைக் குடித்ததும் அவர்கள் தலை சுழல ஆரம்பித்தது. அவர்களுடைய துர்க்குணங்கள் எல்லாம் வெளிப்பட்டன. போதையில் அவர்கள் ஊருக்குள் சென்று விஷமங்கள் செய்ய ஆரம்பித்தார்கள்.

விரைவிலேயே பர்மா தேசம் முழுவதும் இந்த மாதிரி மரங்களை மக்கள் பயிரிட்டார்கள். பாளைகளைச் சீவி, சாற்றைக் குடித்தார்கள். தேசம் முழுவதும் விஷமிகள் தோன்றினார்கள்.

அவர்கள் குடித்தது தென்னங்கள். விஷமியின் தலையைப் புதைத்த இடத்திலே முளைத்ததுதான் தென்னை மரம்.

'கோ—பின்' என்று அவர்கள் அழைத்த அந்தத் தென்னை மரம்தான் பர்மாவின் முதல் தென்னைமரம்.



என்ன செய்வானாம்?

திருடர் 1: நீ வாசலிலே காவலுக்கு இரு. நான் உள்ளே போய்த் திருடிட்டு வந்துடறேன். அதற்குள் யாராவது வந்திட்டால் நீ என்ன செய்யறே...?


திருடன் 2: ஓடிப் போயிடறேன்.


திருடன் 1: ? ? ? ? ?


— குத்தாலம் ராஜா.

கிணற்றுத்தவளை

படக்கதை:- ஓவியர் — எஸ்.கே. ராமானுஜம். (ராஜு:-)




அப்பொழுது.. ஒரு புழு தவளையின் அருகே நகர்ந்து சென்றது...
"அடேய்! பொடிப்பயலே, என்னையா.. மதிக்காமல் போகிறாய்?" என்று கூறி அப்புழுவைப்பிடித்து விழுங்கி விட்டது.
இனி இவ்வுலகில் எல்லோரும் எனக்கு பயப்படவேண்டும்..
அங்கு நரி ஒன்று வந்தது.
அதைக்கண்ட தவளை "நீ.. ஏன்.. என்னைக்கண்டு பயப்படவில்லை?" என்று நரியினிடம் கேட்டது.
தவளையாரே! உன்னைக்கண்டு நடுங்குகிற ஒருவனை.. என் கையோடு அழைத்து வருகிறேன்.. அதுவரை இங்கேயே... இரு....
வெகு வேகமாக நரி பாம்பினிடம் வந்தது.
"ஏன் இப்படி பசியிலே வாடறே? நீ.. என்னோட ..வா.." என்று கூறி நரி, பாம்பை தவளையிடம் அழைத்துச் -சென்றது.
அட! கிணற்றுத்தவளையே, உனக்கா.. நாங்க..பயப் -படணும்..?



ஒரு கல் ஒரு மரம் ஒரு மாடு

- கைலாஸ்

"அடேங்கப்பா! இன்னும் மூணு கல்லு நடக்கணும்", என்று வாய் விட்டுக் கூறிக் கொண்டான் கந்தன்.

வலியெடுத்து விட்ட தன்னுடைய கால்கள் இரண்டையும் உதறிவிட்டுக் கொண்டான்.

பாவம்!

காலையில் ஐந்து மணிக்கெல்லாம் நடக்கத் தொடங்கியவன் அவன். இப்போது பத்து மணி ஆயிற்று. இதுவரை எங்கும் அவன் உட்காரக் கூட இல்லை. அப்படி ஒரே மூச்சாக நடந்து வந்தும் அவன் இன்னும் மதுரைக்குப் போய்ச் சேர்ந்தபாடில்லை.

பதினோருமணிக்கெல்லாம் அவன் சிம்மக்கல்லில் ஒருவரைச் சந்தித்துத் தீர வேண்டும்.

அவர் அவனுக்குக் கண்டிப்பாக ஒரு வேலை வாங்கித் தருகிறேன் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்.

அப்படி வேலை மட்டும் அவனுக்குக் கிடைத்து விட்டால்...!

அம்மாவைக் கஷ்டப்படாமல் பார்த்துக் கொள்ளலாம். மூன்று வேளையும் வயிறாரச் சாப்பிடலாம்.

குழந்தையாக அவன் இருந்த போதே அவனுடைய தந்தை இறந்து போய் விட்டார். அவன் தாய்தான் எப்படி எப்படியெல்லாமோ பாடு பட்டு அவனை வளர்த்து வந்தாள். இப்போது —

பதினைந்து வயதிலேயே எவ்வளவு பொறுப்புகளை அவன் சுமக்க வேண்டியிருக்கிறது?

"ம்... எல்லாம் எனது துரதிர்ஷ்டம்", என்று கூறிக் கொண்டே அவன் நடந்தான்.

அவனை ஒரு சைக்கிள்காரன் கடந்து சென்றான். நல்ல புத்தம் புது சைக்கிள்.

'இப்படி ஒன்று மட்டும் எனக்குச் சொந்தமாக இருந்தால் இன்னும் கால்மணி நேரத்திலேயே சிம்மக் கல்லுக்குப் போய் விடுவேன்!'

மறுபடியும் அவன் தன் அதிர்ஷ்டத்தை நொந்து கொண்டான். அவனுக்கே சலிப்புத் தட்டியது.

"என்ன அதிர்ஷ்டம், அதிர்ஷ்டமென்று புலம்புகிறேன்? அப்படி

யெல்லாம் எதுவுமே கிடையாது. இதோ, கால்வலி தாங்க முடியலை. இன்னும் மூணு கிலோ மீட்டர் நடந்தாக வேண்டும். பஸ்காரன் காசில்லாமல் ஏத்திக்கிட மாட்டான். சைக்கிள்காரன்களாவது பின்னால் ஏத்திக்கிடலாமில்லே!''

அவனுக்கே சிரிப்பு வந்தது.

கீழே குனிந்து ஓர் உருண்டைக் கல்லை எடுத்தான். ஒரு தென்னை மரத்தின் அடிப்பாகத்தைக் குறி வைத்து எறிந்தான். கல் குறி தவறாமல் வேகமாகப் பறந்து மரத்தைத் தாக்கித் தெறித்தது....

அருகே புல் மேய்ந்து கொண்டிருந்த ஒரு காளை மாட்டின் கண்ணிற்கு அருகே அது பட்டு விட்டது!

அது சரியான முரட்டுக் காளை.

அதற்குக் கோபம் வந்து விட்டது.

'முரட்டுக்காளையும் நான்தாண்டி, பாயும் புலியும் நான்தாண்டி' என்று அதற்குப் பாடத் தெரிந்திருந்தால் அது சந்தேகமில்லாமல் பாடியிருக்கும்.

அது உடலைச் சிலிர்த்துக் கொண்டது. வாலை உயர்த்திக் கொண்டது. புஸ்..... புஸ்....ஸென்று மூச்சு விட்டது. பின்னங்கால்களால் மண்ணைக் கிளறியது.

தொடர்ந்து அது அவனை விரட்டத் தொடங்கியது.

கந்தன் மதுரை ரோடில் ஓடினான்; ஓடினான்; தலைதெறிக்க ஓடினான். காளை விடவில்லை.

அவன் வாய் 'அம்மா அம்மா' என்று கூவியது. மனமோ 'கந்தா கடம்பா' என்று இறைஞ்சியது.

அப்போது —

சாலையை ஒட்டியிருந்த ஒரு மாமரத்தின் கொப்பு ஒன்று சற்றுத் தாழ்ந்திருப்பதைக் கண்டான் கந்தன்.

'மதுரையாவது, வேலையாவது? அம்மாவிற்கு ஒரே பிள்ளையான நான் உயிர் பிழைத்தாலே போதும்' என்ற முடிவிற்கு வந்தான் அவன்.

''ஜெய் ஆஞ்சனேய வீரா, அனுமந்த சூரா'', என்று கத்தியபடி அந்தக் கொப்பைப் பிடிக்கத் தாவினான்.

பிடித்தும் விட்டான்.

மாடு அவனைக் குத்திக் குதறி விடும் தூரத்திற்கு வந்து விட்டது.

மூச்சைப் பிடித்து எம்பிக் கொப்பின் மீது இரண்டு கால்களையும் தூக்கிப் போடப் போகும் போது —

மளுக் —

மாங்கொப்பு முறிந்து விட்டது!

கொப்போடு பொத்தென்று விழுந்தான் கந்தன்.

சரியாகக்காளை மாட்டின் முதுகின் மீது உட்காரும்படியாக அவன் விழுந்தான்! மாங்கொப்பு காளையின் கொம்புகளுக்கு நடுவே சிக்கிக் கொண்டு விட்டது.

காளையின் வெறி கூடியது.

'அவிழ்த்து விட்டதாம் காளை, அது எடுத்து விட்டதாம் ஓட்டம்' என்று அவனுடைய அம்மா அடிக்கடி கூறக் கேட்டிருக்கிறான் அவன். ஆனால், அன்றுதான் அதை அனுபவத்தில் பார்க்கிறான்!

ஒரே ஓட்டமாக ஓடிக் களைத்துப் போய் அது தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓரத்தில் நின்றது.

அப்போதுதான் கந்தன் பயம் சற்றே தெளிந்து பார்த்தான்.

அட.... மதுரை வந்தாச்சு!

'ஹாய்' என்று சந்தோஷமாகக் கத்திக் கொண்டே அவன் காளை மாட்டின் முதுகிலிருந்து கீழே குதித்தான்.

ஒரே மகிழ்ச்சி அவனுக்கு.

'பித்தலாட்டம்'

மோசடியை 'பித்தலாட்டம்' என்று சொல்கிறோம். இந்தச் சொல் எப்படிப் பிறந்தது தெரியுமா? ஆடகம் என்ற சொல்லுக்குத் தங்கம் என்று பொருள். பித்தளையைத் தங்கம் என்று சொல்லி ஏமாற்றுவதைப் போன்றது என்னும் பொருள்பட 'பித்தளாடகம்' என்று கூறி வந்தது நாளடைவில் பித்தலாட்டம் என்று மருவி விட்டது.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.



பாலத்தைக் கடந்து ஊருக்குள் ஓடினான்.

அவனைச் சோர்வோடு தலையைத் தூக்கிப் பார்த்து விட்டுத் திரும்பித் தன்னுடைய ஊரை நோக்கி நடக்கலாயிற்று அந்த முரட்டுக்காளை.

உச்சி வெயில் மண்டையைப் பிளக்கும் போல் இருந்தது. மதுரையிலிருந்த எல்லாருடைய மண்டையையுந்தான்!

'ஆனால், கந்தனுக்கோ அந்த வெயில் உரைக்கவே இல்லை.

அவன் தலையைப் பிய்த்துக் கொண்டான். காரணம்,

'ஐயோ பதினோரு மணிக்கு வரச் சொன்னாரே அந்த ஆள். இப்போது மணி பன்னிரண்டு ஆகிறதே!'

கந்தனுக்குக் கால் வலியை விட வயிற்றுவலி பொறுக்க முடியாததாக இருந்தது.

பசியில் சிறுகுடலைப் பெருங்குடல் பிடுங்கித் தின்பது போல ஒரு வலி.

அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

எப்படியோ, ஒரு கல். ஒரு மரம். ஒரு மாடு மூன்றுமாகச் சேர்ந்து அவனை மதுரையில் கொண்டு வந்து சேர்ந்து விட்டன.

இப்போது வேலை கிடைக்க வேண்டுமானால் அந்த நபர் வந்தாக வேண்டும்.

அவன் சுற்று முற்றும் பார்த்தான்.

அப்போது அழகர் கோவிலுக்குச் செல்லும் ஒரு பேருந்து அவனைக் கடந்து சென்றது.

அதில்....!

ஓட்டுநர் இருக்கைக்குப் பின் இருக்கையில் சன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டு போவது யார்?


ஆம்! அவரேதான்!

அவனை அங்கு வரச் சொல்லியிருந்த அதே ஆள்தான்.

அவர் அவனைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் போகிறாரே! அவனைத் திரும்பிக் கூடப் பாராமல் போய்க் கொண்டிருக்கிறாரே!

''சார், சார்'' என்று கூவிக் கொண்டே கந்தன் பேருந்தைத் தொடர்ந்து ஓடத் தலைப்பட்டான்.

அப்போது அதே நேரத்தில் சிம்மக்



கல்லில் இரண்டு பேர் இரண்டு தவறான காரியங்களைச் செய்தனர்.

ஒருவர் வேண்டுமென்று செய்யவில்லை.

வெற்றிலை பாக்குக் கடையில் வாழைப் பழம் ஒன்றை வாங்கி உரித்துத் தின்று விட்டு ஒரு மனிதர் அதன் தோலை வெகு அலட்சியமாக வீ.....சி எறிந்தார்.

எதிர்ப்புறம் நடை மேடையிலிருந்த ஒரு பேருந்து நிறுத்துமிடத்தில், தன்னுடைய கையிலிருந்த ஆபீஸ் பெட்டியைச் சற்றே கீழே வைத்து விட்டு நிமிர்ந்து பேருந்து வருகிறதா என்று திரும்பிப் பார்க்கலுற்றார், இன்னொரு மனிதர், அவர் ஓர் அதிகாரி.

'எப்படா ஆள் அசருவான்' என்று அதற்காகவே காத்துக் கொண்டிருந்த அந்தத் திருடன் பாய்ந்தான். அந்த அதிகாரியின் பெட்டியை எடுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தான்.

''சார்! சார்'' என்ற கந்தனின் குரலைக் கேட்டுச் சட்டென்று திரும்பிய அந்த அதிகாரி,திருடன் பெட்டியோடு ஓடுவதைக் கண்டார்.

''திருடன்! திருடன்!''

அவரால் உரத்த குரலில் கத்தத்தான் முடிந்தது. அதுவே அவருக்கு மூச்சிரைத்தது.

ஓட முடியாதபடி அவருடைய தொந்தி தடுத்தது. வெற்றிலை பாக்குக் கடையிலிருந்து ஒருவரால் வீசப்பட்ட வாழைப் பழத் தோல் பேருந்தைத் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்த கந்தனின் பாதையிலே வந்து விழுந்தது.

அதன் மீது அவன் வேகமாகக் காலை வைக்க, அது சறுக்க,

கந்தன் சர்.....ர்....ரென்று சர்க்கஸில் வித்தை காண்பிப்பவனைப் போலத் தூக்கி எறியப்பட்டான்.

இந்த முறை அவன் போய் விழுந்தது முரட்டுக் காளை மீது அல்ல, பெட்டியுடன் ஓடிக் கொண்டிருந்த முரட்டுத் திருடன் மீது!

அவன் இடித்த வேகத்தில் திருடன் பொத்தென்று பாதையோரத்தில் விழுந்தான்.

அவனுடைய நெற்றிப் பொட்டில் கூர்மையான ஒரு கல் தாக்கியது. அவன் மயங்கிக் கிடந்தான்.

அப்போது அங்கு வந்த அதிகாரி பெட்டியை வாரி எடுத்து மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

''தம்பி! என்னுடைய முக்கியமான பேப்பர்களையெல்லாம் காப்பாத்தினே. இந்தா இதை வெச்சுக்க,'' என்று கூறியபடி அவர் ஒரு முழு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டினார்.

கந்தன் அதுவரை நூறு ரூபாய் நோட்டையே கண்டதில்லை.

இருந்தாலும் —

''வேண்டாம் சார்'', என்று அவன் மறுத்தான்.

''ஏற்பது இகழ்ச்சி'' என்று ஔவை மூதாட்டி எழுதியிருந்ததை அவன்தான் படித்திருக்கிறானே!

''நீ யார் தம்பி''

''என் பேர் கந்தன் சார். நான் வேலை தேடி மதுரைக்கு வந்தேன் சார்,'' என்றவன் ''சார், எனக்கு ஒரு வேலை வாங்கித் தருவீங்களா சார்,'' என்று தைரியமாகக் கேட்டு விட்டான்.


''வேலைதானே கந்தா! நான் ஒரு பெரிய தொழிற்சாலையிலே பெரிய அதிகாரி. என் கார் ரிப்பேர். அதனால்தான் பஸ்ஸிற்குக் காத்திருந்தேன். சரி, சரி உனக்கு வேலை தானே வேணும்? கட்டாயம் நான் வேலை போட்டுத் தரேன். இப்பவே என் கூட நீ வந்து விடு'', என்றார் அவர்.

அப்போது, அங்கு வந்த ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் நடந்ததையெல்லாம் அதிகாரி மூலம் கேட்டறிந்து, மயங்கிக் கிடந்த திருடனின் அருகில் சென்று பார்த்தார். உடனே,

''தம்பி! நல்ல காரியம் செய்தாய். நாங்கள் பல மாதங்களாகத் தேடிக்கிட்டிருந்த இந்தக் கேடியை நீ பிடிச்சுக் கொடுத்திட்டியே! இதற்காக உனக்கு நிச்சயம் அரசு பரிசு கொடுக்கும்'', என்று அவர் கூறினார்.

'வேலை கிடைக்கப் போகிறது. அத்தோட, பரிசும் கிடைக்கப் போகிறது' என்ற மகிழ்ச்சியில் மூழ்கினான் கந்தன்.

இந்த ஆதிவாசி எந்த வழியாகப் போனால் குடிசைக்குப் பத்திரமாகப் போய்ச் சேரலாம்?



சித்திரப் புதிர்! 32

ஆழி



1

இது ஒரு பூச்சியின் தலை. என்ன பூச்சி என்பதைச் சொல்ல முடியுமா?

2




இது எந்த விளையாட்டைக் குறிக்கிறது?

3




ஓவியர் வால்ட் டிஸ்னியின் படைப்பான இதன் பெயர் என்ன?



4 இதில் எத்தனை முக்கோணங்கள் இருக்கின்றன?





5

இது உலகப் பிரசித்திப் பெற்ற ஒரு கட்டடத்தின் உச்சிப் பகுதி. என்ன கட்டடம் என்று தெரிகிறதா?

விடை வேறு பக்கம்

பிருந்தாவனக் கலையரங்கம்

கண்ணனும் கிளியும்

கிளி பறந்து வந்தது;
  கிளையைப் பார்த்து அமர்ந்தது!
கண்ணன் கிளியைப் பார்க்கிறான்
  கல்லைக் கையில் எடுக்கிறான்!

கிளியை அடிக்க நினைக்கிறான்,
  குறியும் உடனே வைக்கிறான்!
கிளியும் இதனைப் பார்க்குது
  கிளையை விட்டுப் பறக்குது!

கல்லும் மேலே போகுது
  கணக்கும் இப்போ தவறுது!
கிளியும் முன்பு அமர்ந்தஅக்
  கிளையில் கல்லும் பட்டது!

மேலே போன கல்லுமே
  மீண்டும் திரும்பி வந்தது.
கணக்குத் தவற வில்லையே
  கண்ணன் தலையில் பட்டது!

— ஏ. ஐயப்பன் (7716), மயிலாடுதுறை.





நேரு மாமா

எங்கள் மாமா நேரு
  இனிய தலைவர் நேரு.
தங்க மாமா நேரு,
  தரணி போற்றும் நேரு.

அழகு மிக்க நேரு,
  அன்புத் தலைவர் நேரு.
குழந்தை அன்பர் நேரு.
  குறையில் லாத நேரு.

காந்தி சீடர் நேரு.
  கருணை மனிதர் நேரு.
மாந்த ரெல்லாம் போற்றும்
  மணியாய் வந்த நேரு.

இந்தி ராவின் தந்தை
  இராஜீ வுடைய தாத்தா.
எந்த நாளும் மக்கள்
  இதயம் வாழும் நேரு!

— ஏஎல். விஜி (397), திருச்சி.



தென்னை மரம்

நமக்குப் பயன்படும் தென்னைமரம்
நன்றாக வளர்ப்போமே தென்னைமரம்
வீட்டுக்கு உதவிடும் தென்னைமரம்
விரித்திடும் தலையினை தென்னைமரம்

வீட்டுக்கு ஒரு கன்றை நட்டிடலாம்
வெப்பத்தில் இளநீரைப் பெற்றிடலாம்
காட்டில் இருப்பதோ பல மரங்கள்
கனிவகை தருவதாம் அம்மரங்கள்.

மழையைத் தருவது மரங்களேதான்.
மனநிறை வளிப்பதும் மரங்களேதான்.
அழித்திட லாமோ மரங்களையே.
அருமையாய் வளர்ப்போமே அவை
களையே.

வெப்பத்தைப் போக்கிடும் மரங்களன்றோ?
வீசிடும் காற்றினை மரங்களன்றோ?
எப்போதும் மரங்களைப் போற்றிடுவோம்
இயற்கையின் நற்பயன் பெற்றிடுவோம்.

— கி. முருகானந்தம் (21,756),
புதுமாத்தூர் (கிழக்கு).

என் பேனா

அன்புத் துணைஇது என்பேனா.
ஆருயிர்த் தோழி என்பேனா.
இணைபிரியாதது என்பேனா.
ஈடில்லா உதவி என்பேனா.

உருவில் சிறியது என்பேனா.
ஊக்கம் தந்திடும் என்பேனா.
எண்ணத்தைக் கூறிடும் என்பேனா.



ஏற்றதோர் கருவி என்பேனா.
ஐயத்தைப் போக்கிடும் என்பேனா.

ஒற்றுமை வளர்க்கும் என்பேனா.
ஓய்வின்றி உழைக்கும் என்பேனா.
ஔவையார் வழியில் என்பேனா.
அஃதுதான் அறிவீர் என்பேனா!

— உமா சோஃபியா (14,378),
தூத்துக்குடி.



தீபாவளித் திருநாள்

தீபாவளித் திருநாள்
தித்திக்கும் பெருநாள்
சிறுவர்களின் நாட்டம்
பட்டாஸ் கடையில் கூட்டம்

கடைத் தெருவில் மாற்றம்
வண்ண வண்ணத் தோற்றம்
ஜவுளிக் கடை முழுவதும்
மக்கள் வெள்ளம் பெருகுது.


வண்ண வண்ண ஆடைகள்
கண்ணைப் பறிக்கும் வடிவிலே
குளு குளு கடைகளில்
நம் மனம் ஜிலுஜிலு ஆகுமே.

பட்டாஸ் சத்தம் கேட்குது.
பாப்பா பயந்து நடுங்குது.
மத்தாப்புக் கொளுத்தினால்
பார்த்து மகிழ்ந்து சிரிக்குது.

புத்தாடை உடுத்தியே
புத்தின்பம் கொண்டு நாம்
பட்சணங்கள் பல விதம்
பலகாரம் வித விதம்

இறைவனுக்குப் படைத்து நாம்
இன்பமாக உண்ணுவோம்.

— ஜி. சங்கர் (20,915), திருச்சி — 14.



பிரதான ஸ்டேடியம்

குழந்தைகளே! இதுவரையில் நடந்த 23 ஒலிம்பிக்குகளின் கதையைப் படித்தீர்கள் அல்லவா? இப்போது 24—வது ஒலிம்பிக்கின் கதை. ஆம், 1988 சியோல் ஒலிம்பிக்கின் கதை!


சியோல் தென் கொரியாவின் தலைநகரம். 'ஹான்' என்ற நதிக்கரையில் உள்ளது. 16 நாட்கள் கோலாகல விழா! தொடக்கம் செப்டம்பர் 17: நிறைவு அக்டோபர் 2.

1972—க்குப் பிறகு, அமெரிக்கா, ரஷ்யா போன்ற மிக அதிகமான உறுப்பு நாடுகள் கலந்து கொண்ட முழுமையான ஒலிம்பிக் இது. சர்வ தேச ஒலிம்பிக் கமிட்டியில் 167 நாடுகள் உள்ளன. அதில் 160 நாடுகள் கலந்து கொண்டன.

இதுபோன்ற ஒலிம்பிக் இதுவரை நடந்ததில்லை என்று கூறப்படும் அளவுக்கு அமைந்திருந்தது அதன் துவக்க விழா! முதலில் ஹான் நதியில் படகுகளின் அணிவகுப்பு. கலந்து கொண்ட 160 நாடுகளின் தேசியக் கொடியுடன் 160 படகுகள் சென்றன. அவற்றின் பின்னால் 458 படகுகளில்

சியோல் ஒலிம்பிக்கின் கதை







ஒலிம்பிக் சட்டை.

ஏராளமான ஆண்களும் பெண்களும் ஆடிப் பாடிக் கொண்டு வந்தனர். எல்லாவற்றுக்கும் முன்னால், டிராகான் என்ற ராட்சதப் பாம்பு வடிவப் படகு. அதில் ஒரு மிகப் பெரிய முரசு. அதை இறக்கி ஸ்டேடியத்துக்கு எடுத்துச் சென்றனர். அதன் பின்னால் 1500 பெண்கள் ஆடிப்பாடி வந்தனர். இது சூரிய வணக்கம்.

ஒலிம்பிக் நடக்கும் நாட்டின் மிக உயர்ந்த ஆட்சியாளர்தான் துவக்கி வைக்க வேண்டும். எனவே, அந்நாட்டுக் குடியரசுத் தலைவர் ரோ—டே—ஊ அரங்கினுள் வந்தார். உடனே மைதானத்தின் தென் மூலையில் இருந்த 38—க்கு 14 மீட்டர் அளவுள்ள பிரும்மாண்டமான ஸ்கோர் போர்டில் 'வெல்கம்' என்ற வரவேற்பு வாசகம். கூடவே, கொரிய மொழியில் 'ஓதோ உதேயோ' என்ற வாசகம். அதற்கும் நல்வரவு என்றே பொருள்.

அடுத்த கணம் பெரிய ஒலிம்பிக் கொடியுடன் ஒருவர் உள்ளே நுழைந்தார். நீண்ட சதுர வெள்ளைத் துணி. அதில் வெவ்வேறு வண்ணத்தில் ஐந்து வளையச் சின்னம். அவருக்குப் பின்னால், 160 நாட்டு விளையாட்டு வீரர்களும், தத்தமது தேசியக் கொடி தாங்கி ஒருவர் முன்னே வர, மற்றவர்கள் அணிவகுத்து வந்தனர். ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரீஸ் நாட்டு வீரர்கள் முதலிலும், ஒலிம்பிக்கை நடத்தும் தென் கொரியா கடைசியிலும் வந்தன. மற்ற நாடுகள் கொரிய மொழி எழுத்துக்களின் அகர வரிசைப்படி வந்தன. நமது இந்தியா 133—வதாக வந்தது. நமது நாட்டிலிருந்து 53 வீரர்கள் கலந்து கொண்டனர். பளு தூக்கும் வீரர் கர்தார் சிங் தலைமையேற்றுத் தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்து முன்னால் வந்தார். எல்லாரும் கிரீம் கலர் சீருடை அணிந்திருந்தனர். தலையில் ராஜஸ்தான் தலைப்பாகை. நமது வீரர்கள் 'ஸாரே ஜஹாம் ஸே அச்சா...' என்ற பாடலைப் பாடி வந்தனர்.

அணிவகுப்பு முடிந்ததும், சியோல் ஒலிம்பிக் குழுத் தலைவர் பார்க் ஹேஜிக் துவக்க உரையாற்றினார். அது முடிந்ததும் அந்நாட்டுக் குடியரசுத் தலைவர் எழுந்து வந்து, 24 வது சியோல் ஒலிம்பிக்கைத் துவக்கி வைக்கிறேன்' என்று அறிவித்தார். அது முடிந்ததும் தங்கப் பதக்கம் பெற்ற முன்னாள் தென் கொரிய ஒலிம்பிக் வீரர்கள் எட்டுப் பேர் கூடி, பந்தல் போன்று எட்டு முனைகளைப் பிடித்து, பிரும்மாண்டமான ஒலிம்பிக் கொடியைத் தாங்கி வந்தனர். பின்னர் ஒரு கொடி மரத்தில் அது கட்டி ஏற்றப்பட்டது. கரவொலி விண்ணைப் பிளக்க, அதே நேரத்தில் 14 ஆயிரம் வெண் புறாக்கள் அமைதியின் சின்னமாகப் பறக்க விடப்பட்டன.

அடுத்து, ஒலிம்பிக் தீபம்—ஏற்றும் நிகழ்ச்சி. ஒலிம்பிக்கின் பிறப்பிடமான ஒலிம்பியா நகரக் கோயிலில் சூரிய கிரணங்களிலிருந்துதான் இது ஏற்றிவரப்படுகிறது. இந்த வழக்கம் 1936 பெர்லின் ஒலிம்பிக்கில் ஏற்பட்டது. ஒரு வீரர் தீபத்துடன் உள்ளே நுழைந்தார். உயர்ந்த மேடையில் நின்ற நான்கு பேர் அதிலிருந்து ஜோதியை ஏற்றிக் கொண்டு தீபக் கிண்ணத்தின் நான்கு பக்கமும் நின்று கொண்டு தீபத்தை ஏற்றினார்கள். கிண்ணம் எரிந்து

ஞானதிமணாளன்

மூன்று சின்னங்கள்.





கொண்டே உயர்ந்த ஸ்தம்பத்தின் உச்சிக்குப் போயிற்று. பார்க்க ரம்யமான காட்சி! அதே சமயத்தில் விண்ணில் பறந்த ஜெட் விமானங்கள் மலரிதழ்களைத் தூவின. பிரும்மாண்டமான ஒலிம்பிக்வளையபலூன் பறக்கவிடப்பட்டது.

அடுத்ததாக விளையாட்டு வீரர்களின் உறுதிமொழி தென் கொரிய வீரர்கள் ஏஜோ, லிகாக்ரே இருவரும் அதை வாசித்தனர். மற்றவர்கள் திரும்பச் சொன்னார்கள். கொரிய நாட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதும் துவக்க விழா நிறைவுற்றது.

அதைத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் கூடி, கொரியாவின் பாரம்பரிய விளையாட்டு மற்றும் நடனங்களை நிகழ்த்திக் காட்டினர். அதில் உங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான குழந்தைகளும் கலந்து கொண்டனர். அதில் ஏழெட்டு வயதுச் சிறுவர்கள் இரண்டு பேர், பெரிய வளையம் ஒன்றைக் குச்சியால் தள்ளி உருட்டிக் கொண்டு மைதானத்தில் இங்குமங்கும் ஓடியது அனைவராலும் ரசிக்கப்படும் நிகழ்ச்சியாக இருந்தது.

இந்த ஒலிம்பிக்கில் ஏறக்குறைய 11 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் கலந்து கொண்டனர். அமெரிக்காவிலிருந்து 772, ரஷ்யாவிலிருந்து 655 பேர். சென்ற ஒலிம்பிக்கில் 21 விளையாட்டுகள். இப்போது 23. டென்னிசும், டேபிள் டென்னிசும் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தன. 237 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

மிக அதிகமான பதக்கங்களைத் தட்டிச் சென்றது சோவியத் யூனியன் தான்! அதற்கு 132 பதக்கங்கள். அதாவது 55 தங்கம், 31 வெள்ளி, 46 வெண்கலம். இரண்டாம் இடம் மேற்கு ஜெர்மனிக்கு. 37 தங்கம், 35 வெள்ளி, 30 வெண்கலம். ஆக 102 பதக்கங்கள். மூன்றாவது வந்த நாடு அமெரிக்கா. அதற்கு 36 தங்கம், 31 வெள்ளி 27 வெண்கலம். மொத்தம் 94. ஒலிம்பிக்கை நடத்திய தென் கொரியா நான்காவது இடத்தைப் பெற்றது. அதற்கு 12 தங்கம், 10 வெள்ளி 11 வெண்கலம். ஆக 33 பதக்கங்கள்.

ஏதாவது ஒரு பதக்கத்தைப் பெற்றுப் பதக்கப் பட்டியலில் இடம் பெற்ற நாடுகள் 52. இவற்றில் முதல் தடவையாகக் கலந்து கொண்டு ஒலிம்பிக் பதக்கம் பெற்ற நாடுகள் ஆறு. தங்கம் பெற்ற நாடுகள் 31. தங்கம், வெள்ளி, வெண்கலம் மூன்றையும் பெற்ற நாடுகள் 25.

ஆசியாக் கண்ட நாடுகள் 18 தங்கப் பதக்கங்களைப் பெற்றன. அதில் 12 தென் கொரியாவுக்கு.

ஹாக்கி தங்கப் பதக்கத்தை இங்கிலாந்து பெற்றது. வெற்றி மேற்கு

ஜெர்மனிக்கு. ஃபுட்பாலில் ரஷ்யாவுக்குத் தங்கம். வாலிபாலில் அமெரிக்கா தங்கம் பெற்றது. வெள்ளி சோவியத் யூனியனுக்கு., இந்த ஒலிம்பிக்கில் பல புதிய உலக சாதனைகள் நிகழ்த்தப் பட்டன. அமெரிக்க வீராங்கனை ஃப்ளாரென்சு கிரிஃபித் ஜாய்னர் என்பவர், நடகளப் போட்டிகளில் நான்கு பதக்கங்கள் பெற்றார். 3 தங்கம், ஒரு வெண்கலம். நவீன குதிரைச் சவாரியில் ஹங்கேரி திடீரென்று தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றது. துப்பாக்கி சுடுவதில் பிரிட்டனுக்குத் தங்கம். நீண்ட தூர சைக்கிள் போட்டியில் கிழக்கு ஜெர்மனி வீரர் சாதனை படைத்துத் தங்கம் பெற்றார்.

ஆண்கள் 100 மீட்டர் ஓட்டத்தில் கனடா நாட்டு வீரர், பென் ஜான்சன் 9.79 வினாடிக்குத் தமது சாதனையைத் தாமே முறியடித்து உலக சாதனை புரிந்தார். ஆனால், மறு நாளே அவருடைய தங்கப் பதக்கம் திரும்பப் பறிக்கப்பட்டது. ஏன் தெரியுமா?

போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் உடல் தசைகளுக்கு வீரியத்தைஅளிக்கக்கூடியபோதைமருந்து எதையும் சாப்பிட்டுவிட்டுப் பங்கேற்கக் கூடாது. இது கண்டிப்பான விதி. பென் ஜான்சன் அதை மீறிவிட்டார். தடைசெய்யப்பட்டிருந்த சில மருந்துகளைச் சாப்பிட்டுவிட்டு ஓடியிருந்தார். போட்டி முடிந்ததும் அவருடைய சிறுநீர் சோதனை செய்யப்பட்ட போது தெரிய வந்தது. புகழின் உச்சிக்குப் போனவர், 'பொத்' என்று பாதாளத்தில் விழுந்துவிட்டார். அவரைப் போல் இன்னும் சிலர் இப்படிச் செய்து மாட்டிக்கொண்டனர்.

ஒலிம்பிக்கின் கடைசி நிகழ்ச்சியாக மாரத்தான் போட்டிகள் தான் நடைபெறும். இந்தத் தடவை இத்தாலியின் கெலிண்டோ பாடன் முதலாவதாக வந்து தங்கம் பெற்றார். வெள்ளி கென்யாவின் டக்ளஸ் வாகிஹோலிக்கு.

அக்டோபர் 2 — ஆம் நாள் நம் நாட்டு நேரம் 2.30 அளவில், ஒலிம்பிக்நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. அவை, துவக்க விழாவைவிடச் சிறப்பாக நடத்தப்பட்டன. அப்போது அடுத்த ஒலிம்பிக் 1992 — இல் ஸ்பெயின் நாட்டின் பார்ஸிலோனா நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அப்போது மூன்று கொடிகள் ஏற்றப் பட்டன. ஒன்று ஒலிம்பிக் கொடி. இரண்டாவது ஒலிம்பிக்கை நடத்தி முடிக்கும் தென் கொரிய தேசியக் கொடி. மூன்றாவதாக அடுத்த ஒலிம்பிக்கை நடத்தப் போகும் ஸ்பெயின் நாட்டுக் கொடி.

சியோல் ஒலிம்பிக்கிற்கு அந்நாட்டுப் புலிக்குட்டி 'ஹதோரி' வரவேற்புச் சின்னமாக இருந்தது அல்லவா? அதுபோல் 1992 பார்ஸிலோனா ஒலிம்பிக்கிற்கு அந்நாட்டு நாய்க்குட்டி சின்னமாக இருக்கும். 'டோபி' என்று பெயர்.

சியோல் ஒலிம்பிக் முடியும் போது இந்த இரு அடையாளச் சின்னங்களின் பிரும்மாண்டமான பலூன்கள் இரண்டு வானில் பறக்கவிடப்பட்டன. ஏன் இப்படித் தெரியுமா? ஹதோரி நமக்கு விடையளிக்க; 'டோபி' நம்மை அடுத்த பார்ஸிலோனாவுக்கு வரவேற்க!

சரி, குழந்தைகளே! 24 — வது ஒலிம்பிக் நிறைவு அடைந்து விட்டது. உங்கள் மனத்தில் இன்னும் ஒரு சந்தேகம் இருப்பது எனக்குப் புரிகிறது. அது என்ன, தெரியுமா? இந்த சியோலில் இந்தியச் சாதனை பற்றி இவர் இன்னும் எதுவும் சொல்லவில்லையே என்பதுதான். இருந்தால் அல்லவா சொல்வதற்கு?

ஆம்! நம் நாட்டு 53 வீரர்கள் 11 விளையாட்டுகளில் கலந்து கொண்டனர். ஒன்றில் கூட, எவருமே பதக்கம் பெறும் அளவுக்கு வெற்றி பெறவில்லை. இருந்தாலும், ஒலிம்பிக்கின் நோக்கத்தை எண்ணி ஆறுதல் அடைய வேண்டியதுதான்! என்ன தெரியுமா அது? 'ஒலிம்பிக்கில் பதக்கம் பெறுவது முக்கியமல்ல; கலந்து கொள்வதுதான் முக்கியம்' இதை நமது நாடு நிறைவேற்றி விட்டது. இப்படி எண்ணி ஆறுதல் அடைவோம்!

பிருந்தாவனக் கதையரங்கம்



குப்பன் உடல் உழைப்பை நம்பி வாழ்பவன். ஏதோ கூலி வேலை செய்து கஞ்சியோ கூழோ குடித்து வந்தான். அவனது குடும்பம் மிகப் பெரியது. மனைவி, இரண்டு புதல்விகள், மூன்று புதல்வர்கள் அடங்கிய அக்குடும்பம் வயிறு நிறைய உணவு கிடைக்காமல் தத்தளித்தது.

பெண்கள் இருவரும் கல்யாணத்துக்கு நின்றார்கள். குப்பனுக்கும் அவன் மனைவிக்கும் அவர்களது விவாகம் எப்படி நடக்குமோ என்ற கவலையே அதிகரித்தது. குப்பனின் முதல் இரண்டு மகன்களும், தங்கள் தமக்கைகளின் கல்யாணம் நடக்க வேண்டும் என்பதற்காகவும், தங்கள் தம்பி படிக்க வேண்டும் என்பதற்காகவும் தந்தையுடன் சேர்ந்து கூலி வேலை செய்யலானார்கள். அவர்கள் இருவருக்கும் படிப்பு என்பது இல்லாமல் போயிற்று. அதனால், அவர்கள் தங்கள் கடைசித் தம்பியாவது படித்துப் பெரிய ஆளாக வரவேண்டும் என்று எண்ணினார்கள்.

குப்பனின் வீட்டுக் கொல்லைப் புறத்தில் ஒரு பெரிய வேப்ப மரம் இருந்தது. அதில் ஓர் ஆண் தேவதையும், பெண் தேவதையும் வாழ்ந்து வந்தன. அவை அக்குடும்பத்திற்கு உதவி செய்ய நினைத்தன. அவை கொஞ்சம் பணத்தை ஒரு மூட்டையில் கட்டிக் கிணற்றடியில் போட்டன.

காலையில் கிணற்றடியருகே வந்த குப்பன் மூட்டையைத் திறந்து பார்த்தான். அவன் கண்கள் அகல விரிந்தன. ஏனெனில், அதில் இருந்தவையெல்லாம் தங்க நாணயங்கள்! அவன், தன் மனைவி மக்களை எல்லாம் கூப்பிடவே, அவர்களும் ஓடிவந்தார்கள். எல்லோரும் பண மூட்டையைக் கண்டு ஒரேயடியாக மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அப்போது குப்பனின் மூத்த மகன், "அப்பா, இதைக் கொண்டு நாம் ஒரு கார் வாங்கலாம்" என்றான். இரண்டாம் மகனோ, "அதெல்லாம் முடியாது; முதலில் ஒரு வீடு; அப்புறம் டீ. வி., ஃபிரிட்ஜ் வாங்கலாம்" என்றான்.

அப்போது குப்பனின் மனைவி, "எல்லோரும் பேசாமல் இருங்கள். இவ்வளவு நாட்களாக நான் ஒரு தங்க நகை போட்டுக் கொள்ளவில்லை. இத்தனை நாட்களாகப் பணம் இல்லை என்று இருந்தோம்.

இப்போது பணம் கிடைத்திருப்பதால் முதலில் நான் எனக்கு வேண்டிய நகைகளைச் செய்து கொள்ளப் போகிறேன். பிறகுதான் மற்ற விஷயங்கள் எல்லாம்'' என்று கூறினாள்.

குப்பனோ, எல்லோரையும் பேசாமலிருக்கும்படி சைகை காட்டி, ''இதைக் கொண்டு நல்ல மாளிகை கட்டுவோம். கொஞ்சம் நிலம் வாங்கிப் போடுவோம். அப்போதுதான் ஊரில் நாலு பேர் நம்மை மதிப்பார்கள். அதனால் நான் செய்யப் போவதற்குக் குறுக்கே யாரும் வராதீர்கள்'' என்றான்.

இதையெல்லாம் சற்றுத் தூரத்தில் நின்று குப்பனின் புதல்விகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதேபோல், கடைசி மகனும் கேட்டுக் கொண்டிருந்தான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஆண் தேவதை, பெண் தேவதையைப் பார்த்து, ''பார்த்தாயா, பணம் வந்ததும் அவர்களுடைய எண்ணம் எங்கு செல்லுகிறது என்று. இதுவரை தம் இரண்டு மகள்களின் கல்யாணம் பற்றியும், கடைசி மகனின் படிப்பைப் பற்றியுமே எண்ணிக் கொண்டிருந்தவர்கள், இப்போது அதுபற்றி வாயையே திறக்கவில்லை. இப்போது ஒரு வேடிக்கை செய்கிறேன் பார்'' என்றது.

எல்லோரும் எவ்வளவு பொற்காசுகள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்க்க ஆவலுடன் மூட்டையைத் திறந்தபோது, அவை எல்லாம் கற்களாக மாறியிருந்தன! அப்போது குப்பனின் மனைவி, ''ஐயோ! இந்தக் கல்மூட்டையைப் பணமூட்டை என்று எண்ணி மகிழ்ந்தோமே!'' என்றான். அப்போது குப்பன் ''பணத்தைக் கண்டதும் இரு மகள்களின் கல்யாணத்தைப் பற்றியும், நம் மகனின் படிப்பைப் பற்றியும் மறந்து விட்டோமே!'' என்று கூறி வருந்தினான். அப்போது அவருடைய மகன்களும் ''கவலைப்படாதீர்கள் அப்பா! நாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து எப்படியாவது பணம் சேர்த்துத் தருகிறோம். இப்போது நடந்ததைக் கனவாக நினைத்து மறந்து விடுவோம்'' என்றனர். அந்த இரு தேவதைகளும் அவர்கள் திருந்தியதைக் கண்டு அக்கற்களை மீண்டும் பொற்காசுகளாக மாற்றின. அதைக் கண்டு எல்லோரும் சந்தோஷப்பட்டனர். எல்லோரும் தம் சுயநலத்தைப் பற்றிக் கவலைப்படாமல், முதலில் இரு பெண்களுக்குக் கல்யாணத்தை நடத்தினர். பிறகு, குப்பன் தனது கடைசிப் பையனைப் பள்ளியில் சேர்த்துப் படித்து வைத்தான். பிறகு, அவர்கள் ஒரு பெரிய மாளிகையைக் கட்டி, ஒரு தனித் தொழிற்சாலையைத் தொடங்கி, நிறைய ஏழைகளுக்கு வேலை கொடுத்தனர். இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இரு தேவதைகளும் மகிழ்ந்தன.



ஓர் ஊரில் வித்யா என்ற அழகான ஒரு சிறுமி இருந்தாள். அவளுக்கு, தான் ஒருத்திதான் அந்த ஊரிலேயே அழகி என்ற கர்வம் நிறைய இருந்தது.

வழியில் போவோர் வருவோரை அவர்களது அழகைப் பார்த்துக் கேலி செய்வாள். இதனால் ஊர் மக்கள் அவளது தந்தையிடம் சென்று, ''உங்கள் மகள்தான் பேரழகி என்ற கர்வத்தில் தெருவில் போவோர் வருவோ

ரைக் கேலி செய்கிறாள். உங்கள் பெண்ணைக் கொஞ்சம் அடக்கி வையுங்கள். இது நீடித்தால் விபரீதத்தில் முடியும்'' என்றார்கள்.

இதனால் வருத்தம் கொண்ட வித்யாவின் தந்தை இராமநாதன், அவர்களிடம், ''நான் அவளைக் கண்டித்து வைக்கிறேன். நீங்கள் போங்கள்'' என்றார். அவர்களிடம் சொல்லி விட்டாரே தவிர இராமநாதனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஏன் என்றால் அவர் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தான் போன போக்கிலேயே சென்று கொண்டிருந்தாள் வித்யா.

இவளை எப்படித் திருத்துவது என்று யோசித்தார். அவருக்குச் சட்டென ஒரு யோசனை தோன்றியது. அவர் உடனே தன் வீட்டில் ஏற்கெனவே வாங்கி வைத்திருந்த இரண்டு மாம்பழங்களை எடுத்தார். அதை, தம் மகளிடம் எடுத்துச் சென்றார். தன் அப்பா, பளபள என்று இருந்த ஒரு மாம்பழத்தையும், ஐந்தாறு நாட்களுக்குமுன் வாங்கித் தோல் சுருங்கிப் போயிருந்த மாம்பழத்தையும் கொண்டு வருவதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்த வித்யா, ''என்னப்பா இது?'' என்று வினவினாள்.

அதற்கு அவள் அப்பா, ''வித்யா, இந்த இரண்டு மாம்பழங்களையும் பார்த்தால் உனக்கு என்ன புரிகிறது?'' என்று கேட்டார்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லையே, அப்பா!'' என்றாள்.

தம்கையில் பளபளவென்று இருந்த மாம்பழத்தை இராமநாதன் காண்பித்து, ''இது இன்று காலையில் வாங்கியது. பளபளப்பாக அழகாக இருக்கிறது. இது ஐந்தாறு நாட்களுக்கு முன்பு வாங்கியது. தோல் சுருங்கி, உடம்பு இளைத்து, பார்க்க அழகில்லாமல் இருக்கிறது. அதுபோலத்தான் இளமையும் அழகும். இப்போது உனக்கு அழகு இருக்கிறது என்று கர்வம் கொள்கிறாய். வயது அதிகமாக ஆக அழகு குறையும். முதுமை வரும்போது தோல் சுருங்கும். நீயும் ஒரு காலத்தில் முதுமை அடையத்தான் போகிறாய். அப்போதுதான் அந்த முதுமையின் நிலைமையை உணர்வாய்,'' என்றார்.

உடனே வித்யா, ''அப்பா, இனி மேல் நான் யாரையும் கேலி செய்ய மாட்டேன்'' என்று கண்ணீர் பெருக, மனம் உருகக் கதறினாள்.



சுப்புவுக்கு நெஞ்சம் கொதியாய்க் கொதித்தது. ''டேய், கதிரேசா, ரிக்ஷாவிலே போனால் பெரிய ராஜாங்கிற நினைப்பா உனக்கு? இன்னிக்கு உன்னைப் பள்ளிக்கூடத்திற்கு நடந்து போக வைக்கிறேன், பார்!'' என்றவாறு ஒரு கூரிய ஆணியுடன் காத்திருந்தான், சுப்பு.

எதிர்வீட்டுச் சிறுவன் கதிரேசனை அழைத்துச் செல்ல ரிக்ஷாக்காரன் வந்தான். அவ்வூரில் வாகன வசதி அதிகமாகக் கிடையாது. அத்தி பூத்தது போல் ஓரிரண்டு வாகனங்கள்தான் இருந்தன. ரிக்ஷாக்காரன் வண்டியை வாசலில் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

''அம்மா, தம்பி ரெடியா?'' என்றான்.

''கதிரேசனுக்கு உடல்நலம் சரியில்லை. அதனாலே அவன் இன்று ஸ்கூலுக்கு லீவு போட்டு விட்டான்'' என்று கதிரேசனின் தாயார் பதில் கூறினார்கள்.

நேரு தந்த பொம்மை!



— குழந்தைக் கவிஞர்

நேரு காரில் வருவதை
நேரில் காணும் ஆசையால்,
ஊரி லுள்ளோர் அனைவரும்
ஒன்று திரண்டு வந்தனர்.

தெருவில் நேரு செல்கையில்
சின்னச் சின்னப் பொம்மைகள்
ஒருவர் விற்கக் கண்டனர்;
உடனே கீழே இறங்கினர்.

அந்தப் பொம்மைக் காரரின்
அருகில் நேரு சென்றனர்;
''இந்த அழகுப் பொம்மைகள்
என்ன விலையோ?'' என்றனர்.

பொம்மைக்காரர்:

ஒன்றின் விலையைக் கூறவா?
ஓர் அணாத்தான் விற்கிறேன்.

நேருஜி:

நன்று. பொம்மை யாவையும்
நானே வாங்கிக் கொள்கிறேன்.

பொம்மைக்காரர்:

ஐந்து ரூபாய் தானய்யா
அத்தனைக்கும் மொத்தமாய்.

நேருஜி:

இந்தா ரூபாய் தருகிறேன்.
எல்லாம் எடுத்துக் கொள்கிறேன்.

* * * * * *

நேரு நோட்டை நீட்டினார்
நிறையப் பொம்மை வாங்கினார்.
யாருக் காக வாங்கினார்.
யாவ ருக்கும் தெரியுமே!

அங்கு நின்ற பிள்ளைகள்
அனைவ ருக்கும் நேருஜி
தங்கக் கையால் பொம்மைகள்
தந்து தந்து மகிழ்ந்தனர்.

அருமை மாமா நேருஜி
அன்பாய்ப் பொம்மை தந்ததைப்
பெருமை யோடு பிள்ளைகள்
பேசிப் பேசிக் களித்தனர்.

காலை வருமானம் போய்விட்ட கவலையோடு வெளியே வந்தான் ரிக்ஷாக்காரன்.

இதே சமயம், நிறைமாத கர்ப்பிணியான சுப்புவின் அக்காவிற்குப் பிரசவ வேதனை வந்துவிட்டது. எனவே, வலி பொறுக்காமல் அவள் துடித்தாள். வீட்டு வாசலுக்கு வந்த சுப்புவின் தாயார், 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' போல நின்றிருந்த ரிக்ஷாவையும், ரிக்ஷாக்காரனையும் பார்த்தாள்.

''தம்பி, பெரிய ஆஸ்பத்திரி போகணும், சீக்கிரம் வாப்பா,' என்றார், ரிக்ஷாக்காரனைப் பார்த்து. அவன், ''சரி'' என்று தலையாட்டியபடி வண்டியைத் தள்ளினான். அது நகருவதற்குச் சிரமப்பட்டது.

''அடப்பாவமே! ரெண்டு டயரும் பஞ்சராகிப் போயிருக்கே! எந்தப் பாவியோ ஆணியாலே குத்தியிருக்கான். அவன் உருப்படவே மாட்டான். அம்மா, மன்னிச்சிடுங்க. என்னாலே வர முடியாது'' என்றபடி ரிக்ஷாக்காரன் நகர்ந்தான்.

''அடக்கடவுளே! இப்ப டவுனில் இருக்கிற பெரிய ஆஸ்பத்திரிக்கு இவளை எப்படி அழைச்சுக்கிட்டுப் போவேன்,'' என்றவாறு தலையில் அடித்துக் கொண்டார், சுப்புவின் தாயார்.

திருடனுக்குத் தேள் கொட்டியது போல் நின்றிருந்த சுப்புவின் நெஞ்சையும் அந்த ஆணி நெருடலாயிற்று.

பிருந்தாவனம்

தீவட்டி பிடிக்கும் திறமை



என் தாத்தாவுக்கு ஒரு கணக்கு வாத்தியார் இருந்தாராம். அவர் ஒரு நாள் வீட்டுக் கணக்குப் போட்டு வராத மாணவர்களையெல்லாம் எழுந்து நிற்கச் சொன்னாராம். எழுந்து நின்றவர்களைப் பார்த்து, ''நீங்களெல்லாம் தீவட்டி பிடிக்கத் தான் லாயக்கு'' என்றாராம். இப்படிச் சொன்ன மறுவிநாடியே, ''அடடே, தெரியாமல் சொல்லிவிட்டேன். தீவட்டி பிடிக்கக் கூட நீங்கள் லாயக்கில்லாதவர்கள். தீவட்டியைப் பிடிக்கிறதுக்கும் ஒரு திறமை வேண்டும். நீங்கள் தீவட்டியைத் தலைக்கு நேராக மேலே பிடிப்பீர்கள். எண்ணெய் தலையிலே வழியும். அதனால், அதற்குக் கூட நீங்கள் லாயக்கில்லை'' என்றாராம்.

— ஏ. பிரபு (641), பரோடா.

மயில் 30 காசு!

காரைக்குடியிலிருந்து மதுரைக்குப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது என் முன் சீட்டில் இருந்த இரண்டு பேர் பேசிக் கொண்டது என் காதில் விழுந்தது. ''மதுரையிலே மயில் 30 காசுதான். கிளி 28 காசுதான். காக்காய் கூட 27 காசுக்கு வாங்கலாம்,'' என்றார் ஒருவர்.

''அப்படியா! காரைக்குடியிலே விலை கொஞ்சம் அதிகம்தான்!'' என்றார் இன்னொருவர்.




இதைக் கேட்ட எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. 'மயில், கிளி, காக்கையெல்லாம் இவ்வளவு மலிவா?' என்று நினைத்தேன்.

தொடர்ந்து அவர்கள் பேசிய போதுதான் எனக்குப் புரிந்தது. அவர்கள் பேசியதெல்லாம் மயில்மார்க் தீப்பெட்டி, கிளி மார்க் தீப்பெட்டி, காக்கை மார்க் தீப்பெட்டி என்பதை அறிந்தபோது எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன்.

— எம். நாச்சியப்பன் (20,679), கோயில்பட்டி.

தொழிற்சாலைக்கு கழிவு நீர்

சமீபத்தில் நான் ஒரு பத்திரிகையில் படித்தேன். இந்தியாவில் மட்டும்தான் தொழிற்சாலைகளின் உபயோர்



கத்திற்குக் குடிநீர் பயன்படுத்தப்படுகிறதாம். ஐரோப்பிய நாடுகளில் தொழிற்சாலைகள் கழிவுநீரைச் சுத்திகரித்துத்தான் பயன்படுத்துகின்றனவாம்.

— மா. தா. நந்தகுமார் (21,302),
சென்னை — 106.

அதிக விளைச்சல்



காப்பிச் செடி அதிகம் விளையும் நாடு பிரேஸில். டீ அதிகம் விளையும் நாடு இந்தியா. பருத்தி அதிகம் விளையும் நாடு சீனா. ரப்பர் உற்பத்தியில் சிறந்த நாடு மலேசியா.

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி — 14.

வயதுவந்தோர் கல்வி

15 வயதிலிருந்து 35 வயதுக்கு உட்பட்டவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தமிழ்நாட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள், தெரியுமா? ஒரு கோடியே 17 லட்சம் பேர்! இவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதாம்.



அதற்கு, முறைசாராக் கல்வி அல்லது வயது வந்தோர் கல்வி என்ற கல்வியைக் கற்றுக் கொடுக்கப் போகிறார்களாம்.

— ஆர். ராஜா (1006),
சென்னை — 17.



பஞ்சாமிர்தம்

பஞ்சபாண்டவர் என்றதுமே தருமர், பீமர், அருச்சுனர், நகுலர், சகதேவர் என்ற ஐந்து சகோதரர்கள் என்பது நமக்குத் தெரிகிறது. அதே போல் ஐந்து இனிய பண்டங்களால் ஆனதுதான் பஞ்சாமிர்தமும். வாழைப்பழம், தேன், சர்க்கரை, நெய், திராட்சை — இந்த ஐந்தும் சேர்ந்ததுதான் பஞ்சாமிர்தம்.

— எம். கவிதா (19,351),
கீழச்சிவல்பட்டி.



குத்தலும் கத்தலும்

திருடன்: டேய் பொடியா, கத்தாதே. கத்தினால் குத்துவேன்.

சிறுவன்: குத்தாதே. குத்தினால் கத்துவேன்.

— துரை. கரிகாலன் (20,750), வடுலூர் வடபாதி.

இரத்தத்தால் ஓவியம்!

தில்லியிலுள்ள மகாத்மா காந்தியின் ஆள் உயர உருவப் படம் இரத்தத்தால் வரையப்பட்டது. இதற்கு ஆதாரமாக 'இப்படம் வரைவதற்காக ஓவியரிடமிருந்து மூன்று முறை இரத்தம் எடுக்கப்பட்டது' என்ற மருத்துவரின் சான்றிதழும் ஓவியத்தின் அருகிலே வைக்கப்பட்டுள்ளது.

— ஆ. இரமேஷ் (13,226), அட்டகட்



புத்தகங்கள் எத்தனை?


மோகன் வைத்திருக்கும் புத்தகங்களைவிட ரகு 5 புத்தகங்கள் அதிகமாக வைத்திருக்கிறான். ரகுவிடம் உள்ள புத்தகங்களில் 2 புத்தகங்கள்



குறைவாக குமார் வைத்திருக்கிறான். குமாரிடம் உள்ள புத்தகங்களின் 5 மடங்கு 40 ஆகும். அப்படியானால், மோகனிடம் உள்ள புத்தகங்கள் எத்தனை?

விடை: 5.

— எம். பானுமதி (19,868), கண்டி.




தெரியுமா?

* ஒரு தலைமுறை என்கிறோம். ஒரு தலைமுறைக்கு எத்தனை ஆண்டுகள், தெரியுமா? — 33 ஆண்டுகள்.
* ஆசியாவிலேயே பஞ்சாலை அதிகம் உள்ள நகரம் ஆமதாபாத்.
* காட்டிற்குப் போய் யானை பிடிக்

கும் முறைக்கு 'கெட்டா' என்று பெயர்.

* எத்தியோப்பிய நாட்டினருக்கு மட்டும் ஆண்டுக்கு 13 மாதங்கள் உள்ளன.

— ஆர். ராஜாராம் (21,252), திருவண்ணாமலை.



மூன்று

* அண்ணா கூறிய மூன்று — கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.
* தமிழில் மூன்று — இயல், இசை, நாடகம்.
* கனிகளுள் மூன்று — மா, பலா, வாழை.
* கடவுளுக்கு நிகர் மூவர் — மாதா, பிதா, குரு.
* மதிக்கப்பட வேண்டியவை மூன்று — முதுமை, சட்டம், மதம்.

— என். எம். பஜ்லுல் ஹக் (20,620), பொதக்குடி.

சித்திரப் புதிர் விடை-32

1. வண்ணத்துப்பூச்சி,
2. நீச்சல்,
3. கூஃபி (நாய்),
4. 22 முக்கோணங்கள்,
5. பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம்.

மனக்கணக்கு

4020 — ஐயும் 4020 — ஐயும் கூட்டுங்கள். வரும் விடையுடன் இன்னொரு 50 — ஐயும் கூட்டுங்கள். அந்த விடையோடு ஒரு 10— ஐக் கூட்டுங்கள். சட்டென்று கூறுங்கள், இப்போது மொத்த விடை என்ன?

பெரும்பாலோர் 9000 என்றே பதில் கூறுவர். ஆனால் சரியான விடை 8100.


— சிவ. வசந்த் (13,229), புதுக்கோட்டை.



அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

—ராஜாஜி



சார் தபால்:

தலைசிறந்த தலையங்கம்

* 'சித்திர சாலையில் அடிமேல் அடி வைத்து முன்னேறிக் கடந்த மைல் கற்கள் பலப் பல. இன்னமும் நடை போட்டுக் கொண்டேயிருக்கிறேன், அதே சாலையில். போக வேண்டியதோ வெகு தூரம்!

அடடா! ஒரு மாபெரும் ஓவிய மேதையின் தன்னடக்கமான வார்த்தைகளைக் கண்டு வியந்து போனேன்.

— வி. பி. கிருஷ்ணசாமி (கிட்டு), சென்னை — 1.

* ஓவியர் கோபுலுவின் 'என் குழந்தைப் பருவம்' என்ற கட்டுரை இன்றைய இளம் ஓவியர்களுக்கு ஒரு வழிகாட்டி. அதில் இடம் பெற்ற அவரது ஓவியங்கள் எளிமை; அருமை.

— இரா, நல்ல கண்ணு, களக்காடு.

* 'வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்' என் எண்ணத் தோட்டத்தில் நீங்காது இடம் பெற இருக்கிறது. அடுத்த இதழை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

— வெ. சங்கரநாராயணன் (8606), திருவண்ணாமலை.

* 'மீ—நாம் நதியின் நாகம்' மெய்சிலிர்க்க வைத்தது.

— எம். ஏ. சுப்ரமணியன், எ. பி. லோகநாதன், முருகன்புதூர், கோபி.

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதி ஏனோ தானோ என்றில்லாமல், பல நல்ல உபயோகமுள்ள கேள்விகளையும், அவற்றிற்கான பதில்களையும் கொண்டு மிகச் சிறப்புடன் அமையப் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது! பொது அறிவை வளர்த்துக் கொள்ள இப்பகுதி நிச்சயம் உதவும்.

— கி. வைத்தியநாதன், மன்னை.

* குறள் வழி நடக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டலாம் என்னும் குழந்தைக் கவிஞரின் யோசனை சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய ஒன்று. அருமையான உருப்படியான யோசனையும்கூட.

— கி. லக்ஷ்மிப்பிரபா, மன்னார்குடி.

* கொலை, கொள்ளை போன்ற கொடும் பாவச் செயல்கள் வருங்காலத்தில் மேலோங்காமல் கட்டுப்படுத்திடக் குறள் நெறி நடக்கும் மாணவர்க்குப் பரிசளிக்கும் திட்டத்தினை உணர்த்தியுள்ள தலையங்கம் தலைசிறந்தது.

— க. சுப்புசாமி, கள்ளிப்பட்டி.

* 'பாவமா? சாபமா?' நாடகம் காய்கறிகள் சாப்பிடுவதன் அவசியத்தை உணர்த்தியதோடு நகைச்சுவையுடனும் இருந்தது.

— இரா.ச. வெற்றிச்செல்வன், திருப்பராய்த்துறை.

* எங்களைப் போன்றவளரும் சிறுவருக்கு ஏற்ற வகையில் பயனுள்ளதாக இருந்தது. 'உங்கள் உணவு முறைகள் எப்படி இருக்க வேண்டும்' என்ற டாக்டர் கு. கணேசன் அவர்களின் கட்டுரை.

— என். தினேஷ்குமார், பூச்சக்காட்டுவலசு.

* ராஜுவின் 'சோம்பேறிக் கழுதை' சித்திரக் கதை சிந்திக்க வைத்தது.

— அம்மாபேட்டை கிருஷ்ணப்ரியா.

* பெற்றவர்களுக்குஅடுத்தவர் குரு. அந்தக் குருவையே கேவலப்படுத்துகிறது பகட்டுத்தனம். இந்த நல்ல கதையை எழுதிய எஸ். மஞ்சுளா அவர்களுக்கு என் பாராட்டு.

— மு. லலிதா, திருப்பத்தூர் (ப. மு. மாவட்டம்).

* 'கிரேக்க வீரன் ஜேஸன்,' 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் நல்ல கருத்தை உணர்த்தியது.

— பி. பிரசாத், குத்தாலம்.

* அண்ணாவின் அழகிய படத்தைப் பொக்கிஷம் போலப் பாதுகாப்பேன்.

— மீனா கனகராஜன், பொள்ளாச்சி.

* 'ஆடு கத்தியது!' பாடல் மிக அருமை. குழந்தைக் கவிஞர் இதுபோன்ற பாடல்களைத் தொடர்ந்து தரமாட்டாரா என ஏங்குகிறோம்.

— பெ. சுந்தர், சென்னை — 21.

* 'காட்டிலே ஒலிம்பிக்' எங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது.

— கே. பாலசுப்பிரமணியன், செய்துங்கநல்லூர்.

* 'கடவுள் நம்பிக்கை' என்னும் கதையில் கடவுளாலே சோதிக்கப்பட்டு, பின் கடவுளாலேயே நல்ல வசதி கிடைக்கிறது என்பதை உணர்ந்தேன்.

— ரிச்சர்ட்ஸ், குத்தாலம் — 609 801.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.

Registered No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

